
திருமணம்
C.N. அண்ணாதுரை M.A.
O-, GNAN, T
N62
102930

திருமணம்

C. N. அண்ணுதுரை M. A.,

மலர் மன்றம்
விருதுநகர்

முதற் பதிப்பு: 1962.

விலை ரூ. 1-00

அச்சிட்டோர்:

கலைப்பொன்னி அச்சகம், மதுரை.

நன்றி உரை...

வானத்திலே ஒரு நிலவு! வையகத்திலே ஒரு அண்ணு! தென்னகத்தின் பெர்ஞட்ஷாவாக இன்று நாலரைக் கோடி திராவிட மக்களின் இதயங்களில் மட்டுமல்ல, நாளைய உலக மக்களின் உள்ளங்களிலெல்லாம் ஊடுருவி நிற்கக்கூடியவர் காஞ்சி தந்த செல்வம் நமது அறிஞர் அண்ணு!

மணமக்களுக்காக பல அறிவுரைகள் தருகிருர் அண்ணு என்ருல், அது மணமக்களுக்கு மட்டுமல்ல—திராவிட மக்களுக்கே தான் என்ற அடிப்படையில் திருமணம் என்ற தலைப்பிலே இந்நூலை வெளியிட்டோம் திராவிடத்தில் இந்நூலுக்கு மக்கள் தந்த வரவேற்பை நாங்கள் எழுத்தால் எழுதி தெரிவிக்க எங்களுக்குத் தெரியவில்லை. எனவே பொதுவாக திராவிடத்திற்கு, அதில் வாழ்கின்ற மக்களுக்கு, கடல் கடந்து வாழ்கின்ற திராவிட மக்களுக்கு அனைவருக்கும் எங்கள் இதயங் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிருேம்.

இனியும் தங்களின் ஆதரவை என்றும் எதிர்பார்க்கிருேம் என்று கூறிக் கொண்டு புதிய பதிப்பான இந்நூலை உங்கள் முன் படைக்கிருேம்.

வணக்கம்!

பதிப்பகத்தார்.

நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்.

மணமகன்: மணமகள்:

வள்ளுவராண்டு திங்கள் ம்

நாள் நடந்த திருமணத்தின் போது
மனமுவந்தளித்த

மண வாழ்த்து மலர்

வாழ்வுப் பூங்காவின் வண்ண மலர்களே!

வாழிய நீவிர். வளர்க நும் காதல் வாழ்க்கைப் பூங்காவிலே நுழைந்துவிட்டீர். அங்கே வண்ண மலர்களுண்டு. பண்பாடும் ஈக்களுண்டு மலரின் மணத்திலே மகிழ்வு கொள்ளும் போது அதை மறந்துவிடாதீர். துன்பமா துவளாதீர். இன்பமா இளகாதீர். அயலாரின் தூற்றலா அயர்ந்துவிடாதீர். மதமா மயங்கிவிடாதீர்.

அவையல்ல உங்கள் வாழ்வை வளமாக்குவது, வள்ளுவரின் வாய்மை, கவிஞரின் இன்பமொழி, அண்ணாவின் அருந்தமிழ் அதில் தான் இருக்கிறது உங்கள் வாழ்வுக்கு வழி என வாழ்த்துகிறேன்.

தங்களன்புள்ள,

இடம்:

திருமணம்

இந்தப் பகுதியிலே இப்படிப்பட்ட ஒரு சீர்திருத்தத் திருமணம் நடைபெறுகிறதென்று தெரிவித்தும் அதிலே வந்து என்னைக் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்ட நண்பர்களுக்கு எனது நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்தப் பகுதிக்கு நான் பெரிதும் வந்ததில்லை. இந்த வீதிகளிலே நான் அடிக்கடி நடமாடியதும் கிடையாது. இன்று நான் இத்திருமணத்திற்காக வந்தவுடன் இங்குள்ள தோழர்கள் காட்டிய அன்பும், ஆதரவும் அவர்களிடம் காணப்பட்ட ஊக்கமும், உற்சாகமும் எனக்கு உண்மையிலேயே பெரிதும் மகிழ்ச்சியளித்தது.

இந்த அன்பும், ஆதரவும், ஊக்கமும், உற்சாகமும் நிறைந்த மக்களுடன் நான் வீதியிலே வந்தபோது காலையிலே நான் கண்ட காட்சிகளும், கண்களிலே எதிர்ப்பட்ட நிலைமைகளும் எனக்கு இத்திருமணத்தைவிட வேறு பல அதிகமான எண்ணங்களை உண்டாக்கி விட்டிருக்கின்றன.

நாகரீகம் மிக்க இந்த சென்னை நகரின் மத்தியிலே, பாட்டாளி மக்களே பெரிதும் வாழ்கின்ற இப்படிப்பட்ட

பகுதிகளையும், அங்கே வசதியற்ற சின்னஞ்சிறு குடிசைகளே காணப்படுவதும், அப்படிப்பட்ட குடிசைகளும் சாதாரணமான சந்துகளிலே அமைக்கப்பட்டிருப்பதும், அவைகளைச் சுற்றியுள்ள இடங்கள் சுகாதாரமற்றுக்கிடப்பதும் நல்லதா? இப்படியும் ஒரு பகுதி, இந்த நகரத்தில் இருப்பதைக் காணும் எவரும் உண்மையிலேயே வெட்கப்பட வேண்டாமா?

நேற்றுத்தான் இந்நகரிலும் நாடுபூராவிலும் ஏழாண்டுகளுக்கு முன்னர் பெற்ற சுதந்திரத்தின் அருமை பெருமைகளைக் கூறி காங்கிரஸார் சுதந்திர தினம் கொண்டாடினர். மந்திரிகளும் இந்த ஏழாண்டு சுதந்திரத்தில் சர்க்கார் இதைச் சாதித்தனர் அதைச் செய்தனர் என்றெல்லாம் பேசிப் பெருமைப்பட்டனர். இப்படிக் காங்கிரசாரும், அந்தக் கட்சியைச் சேர்ந்த சர்க்காரும், ஒருசேரக் கீதமிசைத்து நேற்றுத்தான் சுதந்திரத் திருநாள் கொண்டாடினர்.

அந்தத் திருநாளுக்கு மறுநாளே நான் இங்கே வரவும் இங்குள்ள நிலைமைகளைக் காணவுமான வாய்ப்பு இத் திருமணத்தின் மூலம் ஏற்பட்டு விட்டது

சுதந்திரத் திருநாள் கொண்டாடிய காங்கிரசாரையும் அவர்களைச் சேர்ந்த சர்க்காரையும் இந்தப் பகுதியை ஒரு முறையாவது நேரில் வந்து சுற்றிப் பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட சுகக்கேடான பகுதிகளையும், வறுமையால் வாடி வதங்குகின்ற மக்களையும் ஒருபுறம் விட்டு வைத்துக்கொண்டே சுயராஜ்யத்தின் பெருமைகளைப்பற்றிப் பேசுவது நல்லதா? நாடு முன்னேறிவிட்டது என்றும், சுய

ராஜ்யம் வந்ததும் மக்கள் சுபிட்சமாய் வாழ்கிறார்கள் என்று கூறுவதும் சரிதானா? இப்படிப்பட்ட பகுதிகளை சீர் திருத்தாமல் மக்களை முன்னேற்றாமல், சுதந்திரத்தின் பெருமையைப் பேசுவது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதாகத்தான் இருக்கிறது. இதனைக் காங்கிரஸ் நண்பர்களும், சர்க்காரும் உணர வேண்டுகின்றேன்.

இத்தனை பெரிய சென்னை நகரத்தின் இடையிலே இப்படிப்பட்ட சீர்கேடான ஒரு பகுதியும் அதிலே சுகாதாரக் குறைகளுடன் வாழ்கின்ற மக்களையும் கவனிக்கத்தானே வேண்டும்.

இந்தப் பகுதியிலே ஓட்டைக் குடிசைகளிலே அண்டி வாழ்ந்திடும் மக்கள் அனைவரும் யார்? அவர்களில் பெரும் பகுதியினர் பாட்டாளித் தோழர்கள் தானே. நகரின் மற்ற பகுதிகளிலே சிங்காரமான மாளிகையில் வாழ்ந்திடும் மக்களின் நாகரீக வாழ்வுக்கான சாதனங்களை உண்டாக்கித் தருவது இவர்கள் தான். செல்வத்தில் புரண்டு சீமானாக வாழும் மற்ற நாகரீக மக்களைவிட இவர்கள் தான் அதிக அளவில் பாடுபடுகின்றனர், உழைக்கின்றனர் என்பதை யார் தான் மறுக்க முடியும்?

இந்தப்பகுதியில் வாழ்ந்திடும் மக்களில் பலர் ஆலையிலே கூலிவேலை செய்பவர்களாகவும் மற்றவர்கள் தனிப்பட்ட இடங்களிலே ஏதோ வேலை செய்து வயிறு வளர்ப்பவர்களாகவுந்தான் இருக்கின்றனர்.

இத்தகு மக்கள் இவ்வளவு சீரழிந்த பகுதிகளிலே சிதைந்த வாழ்வு வாழ்வதைக் கண்ட பிறகும் இப்படிப் பட்ட பகுதிகளைச் சீர்திருத்தாமல் இருப்பது சுயராஜ்ய

சர்க்காருக்கு அழகு தானு? நன்மை தானு? இப்படி இருப்பது அழகுதான். நன்மைதான் என்பதை எத்தகைய அரசியல் கருத்துக் குருடனும் ஒப்பான் என்பது உறுதி.

ஆகவே நான் இந்தப் பகுதி நகரசபை உறுப்பினரும், காங்கிரஸ் தலைவருமான டி.கே. கண்ணப்பர் அவர்களையும், மற்றுமுள்ள காங்கிரஸ் தலைவர்களையும் தங்களது செல்வாக்கையும், தங்களுக்கு அதிகார வட்டாரங்களிலே ஏற்பட்டுள்ள நல்ல தொடர்புகளையும் பயன்படுத்தி இன்னும் ஒரு நான்கு அல்லது ஐந்து வருடங்களுக்குள்ளாகவாவது இந்தப் பகுதிகளை நல்ல முறையில் நாகரீகமான பகுதிகளாக மாற்றுவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதைச் சென்னை சர்க்காரும் கவனிக்கும்படி குறிப்பிடுகிறேன்.

இந்தப்பகுதியிலே வாழும் மக்கள் அனைவரும் சொந்த மனைகூட இல்லாதவர்கள். இரவல் குடிசைகளில் தான் வாழ்கிருர்கள். வரும் ஆண்டுகளில் இந்தப் பகுதிகளிலுள்ள குடிசைகளை சிறு சிறு ஓட்டு வீடுகளாகவேனும் மாற்றியமைக்க வேண்டும் சுற்றுப்புறங்களை நல்ல சுகாதார வசதிகள் கொண்டதாக்க வேண்டும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் சொந்த மனை கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

சர்க்கார் பெருமையோடு பிரச்சாரம் செய்து கொண்டு வரும் ஐந்தாண்டுத் திட்டத்திலே இதைப்போன்ற பகுதிகள் சேர்க்கட்டு அதற்கான திட்டங்கள் வகுத்து நல்லதொரு மாற்றங்கண்டாக வேண்டும்.

இப்படிப்பட்ட காரியங்களைக் கூடச் செய்ய முடியாது. ஐந்தாண்டுத் திட்டம் என்று மட்டும் பேசுவதும் புகழ் வதும் மட்டும் நடந்தால்அதனைவெறும் ஏமாற்றுத்திட்டம் என்று தானே கூற நேரிடும். கொள்ளவேண்டிவரும்?

நமது தி. மு. கழக மாநாடுகளில்கூட பெரும்பாலும் ஊர்வலத்தில் கலந்துகொள்ளவிரும்பாத நான் இன்றைக்கு இங்கு வந்தவுடன் நண்பர்கள் என்னை வீதிகளின் வழியே ஊர்வலமாக அழைத்து வந்ததற்கு உடனே இசையக் காரணமே இந்தப் பகுதிகளை நன்கு சுற்றிப் பார்க்க வேண்டுமென்பதுதான்.

ஊர்வலத்தில் மக்கள் காட்டிய பெருத்த ஊக்கமும் உற்சாகமும் அதிகமாகத்தான் இருந்தது. ஊக்கமும் உற்சாகமும் எவ்வளவு அதிகமாக இருந்ததோ, அதைவிட அதிகமான அளவு வறுமை இந்தப் பகுதிகளிலே நிறைந் துள்ளதையும் நான் அதே நேரத்தில் கண்டேன். ஆகவே தான் நான் சர்க்காரையும் காங்கிரசாரையும் இதைப்பற்றி கவனிக்கும்படி கேட்டுக்கொண்டேன்.

இந்த நாட்டிலே யார் மற்றவர்களைவிட அதிகமாகப் பாடுபடுகிறார்களோ, யார் மற்றவரின் நாகரீக வாழ்வுக் கான வசதிகளைச் செய்து தருகிறார்களோ அந்தப் பாட் டாளி மக்கள் யார் மக்கள்? செம்மையான வாழ்வு நடத்தப் பல துறைகளிலும் ஈடுபட்டு அதிகமான அளவுக்கு கஷ்டப் படுகிறார்களோ, எந்த மக்கள் உழைத்து உழைத்து மேனி கருத்துப் போகிறார்களோ, யார் யார் கடின வேலைகளை வேகாத வெய்யிலிலும் செய்து வாடுகிறார்களோ அந்த ஏழைத் தொழிலாளர்கள் குந்தச் சிறு குச்சுமின்றித் தவிப் பதைக் காண்கிறோம் அவர்கள் தங்க சொந்த மனை

கிடையாது. சுகாதார வசதிகள் ஏதுமில்லை என்ற அவல நிலையில்தான் இருப்பதைப் பார்க்கிறோம்.

இந்த நிலைமையைச் சர்க்கார் இன்னும் சில வருடத் திற்குள்ளாக நிச்சயமாக மாற்றியமைத்தாக வேண்டு மென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

இங்குவாழும் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் சொந்த மனையும் சிறு ஓட்டு வீடும், போதுமான சுகாதார வசதி களும் கிடைக்கும்படியாக சர்க்கார் ஏற்பாடு செய்வது பெரிய காரியமல்ல.

ஐந்து ஆண்டு திட்டமென்ற பெயரால் வடநாட்டில் 200 கோடி, 150 கோடி, 100 கோடி என்று பல திட்டங்கள் போடப்பட்டு நடைபெற்று வருகின்றன என்பதை அனை வரும் பத்திரிகைளிலே படிக்கிறோம் அரசாங்க அறிக் கைகள் மூலமாகவும் அறிகிறோம்.

இப்படிப்பட்ட நிலையில் இந்த அரசாங்கம் இரண்டு கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டத்தை ஆரம்பித்தால் சென்னையிலுள்ள இதைப்போன்ற அத்தனை பகுதிகளையும் சீர் திருத்திவிடமுடியுமே!

அரசாங்கம் இது சம்பந்தமாக உடனடியாக ஈடுபட்டு அதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும். இதனை காங்கிரஸ் நண்பர்களும், கண்ணப்பரைப் போன்றவர்களும் முயற்சி செய்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

இந்தப் பகுதியிலே பலகாலமாகச் சொந்த மனைகள் தேவைக்கு அதிகமாக வைத்திருப்பவர்களைச் சர்க்கார்

அணுகி அவர்களை இத்தனை காலமாகப் பெற்றுவந்த பலன் போதும் என்று கூறி, அந்த இடங்களுக்கு மிகவும் நியாய மான விலைகளை நிர்ணயித்து, அதனை நஷ்ட ஈடாக கொடுத்தேனும் வீட்டு மனைகளைப் பெற்று; வீடற்ற ஏழைக் குடும்பத்தினருக்குத் தரவேண்டும்.

அதைப்போல இந்தப் பகுதிகளிலே உள்ள நகரசபை யினருக்குச் சொந்தமான இடங்களையும் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். போதுமான சுகாதார வசதிகளைச் சர்க்காரும் நகரசபையினரும் செய்து முடிக்க வேண்டும்.

அப்போதுதான் இந்த நாடு விடுதலை பெற்றதற்குச் சிறிதாவது பொருளிருக்கும். கொஞ்சமாவது பெருமை பேசிடவும் வழியிருக்கும். இதைக்கூடச் செய்யாமல் நாங்கள் கோட்டையிலே கொடி நாட்டி விட்டோம் என்று குதூகலிப்பதும், சட்டசபையிலே மந்திரிகளாகக் கொலு வீற்றிருக்கிறோம் என்று வீரம் பேசி வருவதும் அர்த்த மற்றதாகத்தான் போய்விடும். இப்படிப்பட்ட காரியங் களையாவது செய்தால்தான் இந்த சர்க்காருக்கும் பெருமை. இந்த நாடு சுதந்திரமடைந்ததற்காக விழாக் கொண்டாடு வதிலும், பெருமை பேசிடுவதிலும் உண்மையான மகிழ்ச்சி காணப்படும்.

இப்படிப்பட்ட பகுதிகளைச் சர்க்கார் அடிக்கடி சுற்றிப் பார்க்கவேண்டும். ஏழை மக்கள் படும் அல்லல்களையும் அவதிகளையும் கண்டு அவர்களது கஷ்ட நஷ்டங்களைப் போக்கவேண்டும்.

வெளிநாட்டிலிருந்து யாராவது சென்னை வந்தால் அவர்களை மெருகு குலையாத மோட்டாரில் ஏற்றிக்கொண்டு மாடமாளிகை போன்ற கட்டிடங்கள் நிறைந்த மவுண்ட் ரோடு, சைனுபஜார் பகுதிகளையும் ஹைகோர்ட் மரீனு கடற்

கரைகளையும் சுற்றிக்காட்டி கடற்காற்று வாங்கிவிட்டுச் செல்லும்படி செய்தால், அவர்கள் இந்த நாடு செழிப்பாக இருக்கிறதென்று ஏன் பேசமாட்டார்கள்! சுயராஜ்யத்திற்கு பின் இந்தியா சுபீட்சமாக இருக்கிறது என்பதைக் கூருமல் எப்படி இருக்க முடியும் அவர்களால்? கண்ணுக்கும் கருத்துக்கும் இனிய காட்சிகளையும், கண்கவர் கட்டிடங்களை யுமே பார்த்து விட்டு ஆகாய விமானமேறிவிடும் வெளி நாட்டானுக்கு இதைப் போன்ற பகுதிகள் தெரியுமா? எப்படித் தெரியும்?

வெளிநாடுகளில் வீண் பெருமை தேடிக்கொள்வதிலே இந்த சர்க்கார் காட்டிவரும் அக்கரையை இந்த நாட்டு மக்களையும் நாட்டுப் பணிகளையும் சீர் திருத்திச் செப்பனிடப் பயன்படுத்துவதில் செலவிடவேண்டும்.

நாடு நல்ல முறையில் இருப்பதுதான், மக்கள் அனைவரும் நல் வாழ்வு வாழ்வதுதான் இந்த நாட்டுக்கும் நாட்டை ஆண்டிடும் சர்க்காருக்கும் உண்மையான பெருமையென்பதை சர்க்கார் உணரவேண்டும்.

ஒருபாகத்தில் செல்வத்தில் புரண்டுகொண்டே நாகரீக வாழ்வு வாழும் மக்கள், தனியான பகுதிகளிலே சிங்கார மான மாளிகைகளிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அதே நேரத்தில் வாழ வகையான வழியின்றி குந்தச் சிறு குச்சுமின்றி சுகாதாரக் கேடுகள் பலவற்றைச் சகித்துக் கொண்டு பெரும் பகுதி மக்கள் இப்படிப்பட்ட இடங்களிலே வாழ்ந்து வருகிருர்கள் இந்த இரண்டு நிலைகளும் இருப்பது நல்லதா? நாட்டுக்குப் பெருமைதரும் நிலைதானு? இந்த நிலைமை மாற்றப்பட்டால்தானே, நல்லபடி சீர் திருத்தப் பட்டால்தானே இந்த சர்க்காரை நல்ல சர்க்கார் என்று கூறமுடியும்.

நல்ல மனிதன் என்று ஒரு மனிதனது உருவத்தைப் பொருத்தமட்டில் கூறவேண்டுமானால், அந்த மனிதனுக்கு எல்லா அங்கங்களும் சரிவர அமைந்திருக்க வேண்டாமா? அப்போதுதானே ஒரு மனிதனை நல்ல உருவமுள்ள மனிதன் என்று சொல்ல முடியும்.

ஒரு கால் வீங்கியும் கைகள் குட்டையாகவும் கழுத்து கோணலாகவும் வயிறு சரிந்தும் காணப்படும் ஒருவனைப் பார்த்து ஆணழகன் என்று கூற முடியுமா? முடியாது பொருந்தாது.

அங்கங்கள் பழுதடைந்திருந்த போதிலும் அவனும் மனிதன் தான் என்பதை நாம் ஒப்புக்கொள்ளலாமே தவிர அவன் ஒரு நல்ல மனித உருவம் என்பதை எப்படி ஒப்ப முடியும்.

இதைப்போலவேதான் ஒருநாட்டை நல்லநாடு என்று அழைக்கப்படும் அருகதையைப் பெறவேண்டுமானாலும் சரி அல்லது அந்த நாட்டுச் சர்க்கார் நல்ல சர்க்கார் என்று கருதப்படவேண்டுமானாலும் சரி, அந்த நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழவேண்டும். நல்ல நாகரீகமுடையவர்களாகவும் இருத்தல் அவசியம். மக்கள் அனைவரும் நல்லபடி வாழ நாகரீகத்துடன் வாழ நாகரீகத்துடன் இருந்திட அந்நாட்டுச் சர்க்கார் வழிவகை செய்துதர வேண்டும். அப்போது தான் எந்த நாடும் நல்ல நாடு என்று அழைக்கப்படும் எந்த நாட்டுச் சர்க்காரையும் நல்ல சர்க்கார் என்று போற்றப்படும், புகழப்படும்.

எனவே, இந்நாட்டுச் சர்க்கார் நல்ல சர்க்கார் என்ற பெயரையும், புகழையும் பெற்றாகவேண்டுமானால் இப்படிப் பட்ட பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் புறக்கணித்துவிட்டு

செல்வங் கொழித்திடும் நாகரீகமிக்க மக்கள் வாழும் பகுதிகளைப்பற்றியே அக்கரை காட்டும் மனப்போக்கினை உடனடியாக விட்டுவிடவேண்டும். பாட்டாளியின் பரிதாபத்தைக் கண்டு அவர்கள் கலக்கத்தைப் போக்கிட முன் வந்தாக வேண்டும். எல்லா மக்களும் ஒன்றுசேர நல் வாழ்வு வாழும் வழிவகைகளுக்கான திட்டங்களைத் தீட்டிக் காரிய மாற்றவேண்டும்.

இப்படிப்பட்ட பகுதியில் வாழும் மக்களின் குறைகளைக் களைந்திட சர்க்கார் உடனே ஆவன செய்யவேண்டுகின்றேன். சர்க்காரும் சரி அல்லது இந்த சர்க்காரை ஆட்டுவிக்கும் காங்கிரஸ் கட்சி நண்பர்களுஞ்சரி இப்படிப்பட்ட நல்லகாரியங்களுக்கான உருப்படியான திட்டங்கள் எதைத் தீட்டினாலும் அவைகள் அனைத்தையும் நிறைவேற்றி நடைமுறைக்குக் கொண்டுவர திராவிட முன்னேற்றக்கழகம் தனது முழு ஆதரவையும், ஒத்துழைப்பையும் எப்போதும் தரத்தயார் என்பதை தி. மு. கழகத்தின் பொதுச் செயலாளன் என்ற முறையில் இன்று வெளிப்படையாகவே அறிவித்து விடுகிறேன்.

அருமைக் காங்கிரஸ் நண்பர்களும், சர்க்காரும் இப்படிப்பட்ட நல்ல காரியங்களைச் செய்துவிட்டு சுதந்திரத்திருநாள் கொண்டாடிப் பூரிக்கட்டும். பெருமைப் படட்டும் அதற்குப்பொருளுண்டு. எங்களைப்போன்றவரின் பாராட்டும் ஒத்துழைப்பும் நிச்சயமாக கிடைக்கும்! எதையும் விட நாட்டு மக்களின் நல்ல மதிப்பைப் பெறமுடியும்!

எனவே. காங்கிரசாரும் சர்க்காரும் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய முயலவேண்டுமென்று மறுமுறையும் கேட்டுக்கொண்டு. இப்படிப்பட்ட வாய்ப்பு இங்கு நடைபெறும் சீர்திருத்தத்திருமணத்தின் மூலம் எனக்கு ஏற்பட்டதற்காக நான் பெரிதும் மகிழ்கிறேன்.

இப்போது தோழர் கிருஷ்ணன் அவர்களுக்கும் தோழியர் துளசிபாய் அம்மையாருக்கும் சீர் திருத்த முறையில் திருமணம் நடைபெற்றது. இப்படிப்பட்ட சீர் திருத்த முறையில் திருமணங்கள் நடைபெற வேண்டுமென்பதில் இப்போதெல்லாம் மக்களிடம் அதிகமான அக்கரை காணப்பட்டு வருகிறது.

இருபது ஆண்டுகளுக்கு முன்னர் இப்படிப்பட்ட திருமணங்கள் நடைபெறுவதற்கு எவ்வளவோ எதிர்ப்புகள் இருந்தன. அன்று இப்படிப்பட்ட திருமணங்கள் இல்லை அப்போது எதிர்ப்புகளும் ஏராளம். இப்படிப்பட்ட திருமணங்களுக்கு இப்போது எதிர்ப்புகள் குறைந்துள்ளன. அதனால் ஏராளமான சீர் திருந்தத் திருமணங்கள் மிகவும் தாராளமாக நடைபெறுகின்றன. என்றாலும் எதிர்ப்புகள் அடியோடு இல்லவே இல்லையென்று கூற முடியாதே.

எவ்வளவுதான் அதிகமான சீர் திருத்த திருமணங்கள் நடந்த போதிலும். அவற்றைப் பற்றிய சந்தேகங்கள் மக்களுக்கு இன்னமும் அடியோடு நீங்கிவிட்டதா? நீங்கப்பட்டு விட்டதா? இல்லையே!

சீர் திருத்தத் திருமணங்கள் அதிகம் நடைபெற வேண்டும் என்பதிலும், சீர் திருத்த முறையிலேயே திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்பதிலும் இன்றைக்கு பெரும் பாலான மக்கள் அக்கரை காட்டத்தான் செய்கிறார்கள். அவர்கள் யாராக இருந்தபோதிலும் காங்கிரஸ் கட்சியிலே உள்ள பகுத்தறிவுத் தோழரானாலும் கம்யூனிஸ்ட் கட்சியிலுள்ள சீர் திருத்த நண்பரானாலும் அல்லது வேறு எந்தக்கட்சிகாரர் ஆனாலும் சீர் திருத்த முறையில்தான் திருமணங்கள் நடைபெற வேண்டுமென்பதில் எந்தவிதமான மாறுபட்ட கருத்துக்களும் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

இதைப் போலவே எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் பார்ப்பனர்களுக்கு அடுத்த ஜாதி நாங்கள் தான் என்று பெருமை பேசிடும் முதலியார் வகுப்பைச் சார்ந்தவர்களாக இருப்பினும், அல்லது செட்டியார், நாயுடு, க்ஷத்திரியர் என்று கூறிக்கொள்ளும் எந்த வகுப்பைச் சார்ந்தவர்களாக இருப்பினும், அந்தந்த வகுப்பிலுள்ள பெரும்பாலான வாலிபத் தோழர்கள் அனைவரும் இப்படிப்பட்ட சீர்திருத்த திருமணங்கள் செய்துகொள்வதிலே பெரிதும் அக்கரை காட்டுகின்றனர்.

இன்று எந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களானாலும் உலக நிகழ்ச்சிகளைக்கொண்டு முன்னேற விரும்புகிறார்கள். தெளிந்த அறிவு காட்டும் நல்ல போக்கின்படி நடக்கத் துணிவுகொண்டுள்ளனர். எனவே தான் நாள்தோறும் இப்படிப்பட்ட சீர்திருத்தத் திருமணங்கள் நடைபெற்று வரும் நல்ல நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த வகையில் எவ்வளவு சீர்திருத்த திருமணங்கள் நடைபெற்றாலும், இன்னமும் சாதாரண மக்களிடையே இப்படிப்பட்ட மண முறைகளைப்பற்றிய தவறான கருத்துக்களும் பொருத்தமற்ற சந்தேகங்களும் தோன்றாது அடியோடு மறைந்துவிடவில்லை. எதிர்ப்புகள் அன்றுபோல அதிக அளவில் இல்லாமலிருக்கிறதே தவிர எதிர்ப்பே இல்லையென்ற நிலை ஏற்பட்டுவிடவில்லையென்பதை நாம் உணரத்தான் வேண்டும்.

இன்று சீர்திருத்தத் திருமணங்கள் ஏராளமாக நடைபெறுகின்றன. அதுவும் மிகத் தாராளமாக நடைபெறுகின்றன, என்றாலும் எதிர்ப்புகள் அங்கங்கே இருக்கத்தான் செய்கின்றன, இப்போது இங்கு நடைபெறுகின்ற திருமணத்திற்குக்கூட ஏதோ எதிர்ப்புகள் இருந்ததாக நண்பர்கள் குறிப்பிட்டார்கள்.

இப்படிப்பட்ட சீர்திருத்தத் திருமணங்களைக் கண்டு சிலர் பயப்படுவதற்குக் காரணமே கிடையாது. நாங்கள் என்ன நடக்கக் கூடாதது எதையும் செய்யவில்லையே! என்றைக்கும் போல ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்குந் தானே இங்கே திருமணம் நடத்தி வைக்கிறோம். அதிலும் ஆணின் கண்ணைக் கட்டிக்கொண்டு வந்து மணப்பந்தலில் நிறுத்திவிட்டு அதன் பின்னர் அதோ இருக்கும் அந்தப் பெண்தான் உனக்கு மனைவியாகப் போகிறவள் என்று கூறவில்லையே!

ஆணும் சரி, பெண்ணும் சரி, முன்னதாகவே ஒருவரைப் பற்றி மற்றவர் நன்றாக அறிந்து தெரிந்துகொண்ட பின்னர் தானே திருமணம் நடைபெற வேண்டுமென்று நாங்கள் கூறுகிறோம். செய்கிறோம்.

ஒரு ஆணுக்கும், மற்றொரு ஆணுக்கும், அல்லது ஒரு பெண்ணுக்கும் மற்றொரு பெண்ணுக்குமா திருமணம் நடத்துகிறோம்? இல்லையே! அப்படி ஏதாவது அக்கிரமமான காரியங்கள் செய்தால், செய்யவேண்டுமென்று பேசினால், ஆகா அக்கிரமக்காரர்கள், ஆகாத காரியம் புரிகிறார்கள் என்று எங்களைக் கண்டிப்பதற்கு இடமேற்படும். ஆனால் நாங்கள் அப்படி ஏதும் செய்யவில்லையே!

நாங்கள் இங்கே திருமணம் செய்து கொள்ளும் மணமக்கள் தங்கள் வாழ்க்கையில் ஒருவருக்கு ஒருவர் துணைவர்களாகிறோம்என்று இன்று எடுத்துக்கொள்ளும் உறுதிக்குச் சாட்சிகளாகத்தான் வந்திருக்கிறோம். இங்கே கூடியுள்ள அத்தனை பேரும், உற்றார் உறவினர் உட்படவும் அதற்குத் தானே வந்துள்ளனர்.

மணம் செய்துகொள்வதற்குச் சாட்சிகளாக இருக்கவும் மணமக்களை வாழ்த்தவும். புத்திமதிகளைக் கூறவுந்தான் நாம் அனைவரும் இங்கே கூடியுள்ளோம். இதைத்தான்

நாம் செய்கிறோம். இதைக்கண்டு ஏன் சிலர் சந்தேகப்பட வேண்டும்? எதற்காக எதிர்ப்புக்காட்டவேண்டும்?

சில பெரியவர்கள், வைதீகத்தில் பெரிதும் ஊறியவர்கள் வேண்டுமானால் சில காரணங்களைக் கூறுவார்கள். அதாவது இந்தத்திருமணத்திலே அவர்கள் எண்ணப்படியும் முறைப்படியும் காரியங்கள் நடைபெறவில்லை என்பதுதான் அவர்களுக்கு ஏற்படும் குறைகள்!

அவர்கள் எண்ணப்படி, முறைப்படி நாம் இங்கே அய்யரை அழைத்து அக்கினி வளர்க்கவில்லை. அகல் விளக்கு ஏற்றிவைக்கத் தவறிவிட்டோம். அம்மி மிதித்து அருந்ததி காட்டும் வழக்கத்தை விட்டுவிட்டோம். அரசாணிக்கால் நாட்டி அதைச்சுற்றி வரவில்லை. மணமகன் அய்யர் மந்திரம் ஓதித் தாலி கட்டவில்லை.

இப்படிப்பட்ட சில வழக்கமான பல சடங்குகளைச் செய்யவில்லை. இதுதான் இன்று எதிர்ப்புக் காட்டும் சிலரது குற்றச்சாட்டுகள். சீர் திருத்தத் திருமணங்களைப் பொருத்தமட்டில் இக்குற்றசாட்டுகளை நாங்கள் மறுக்கவில்லை; மறுக்கவும் மாட்டோம். அவைகளை அப்படியே ஏற்றுக்கொள்கிறோம்.

நாங்கள் சீர் திருத்தம் என்று கூறுவதே. இப்படிச் சடங்குகளை நீக்கவேண்டும். அடியோடு விட்டுவிடவேண்டும் என்பதுதானே! அப்படியிருக்க சடங்குகள் இல்லையென்று கூறுவதைக்கேட்டு அவைகளை எப்படி எங்களால் மேற்கொள்ள முடியும்?

சீர் திருத்தத் திருமணம் தேவையென்பதற்காக நாங்கள் கூறும் காரணங்களை மறுத்தல்ல இன்று காணப்படும் எதிர்ப்புகள். எதிர்ப்புகள் எங்கு காணப்பட்டாலும் அது ஏதோ சில சடங்குகளை அழித்துவிடுகிறோம். ஒழித்து விடுகிறோம் என்பதற்காகத்தான் காணப்படுகிறது.

சங்கராச்சாரியாரிலிருந்து சாதாரண அய்யரிலிருந்து சாதாரண சாமியார்வரை படித்த பார்ப்பனர்களிலிருந்து படிக்காத பாமரர்வரை. அவர்கள் யாராக இருப்பினும் இது வரை சீர்திருத்த முறையில்தான் திருமணங்கள் நிகழ வேண்டும். நடத்தப்பட வேண்டும் என்பதற்காக சுயமரியாதைக் காரர்களாகிய நாங்கள் கூறிவரும் காரணங்களை ஒருவரும் மறுத்துப் பேசியது கிடையாதே!

அவர்கள் நாங்கள் கூறும் காரணங்களை மறுத்துப் பேசுவதில்லை. பேசவும் முடிவதில்லை. ஆனால் அர்த்தமற்ற சடங்குகளை பொருத்த மற்ற காரணங்களைக் காட்டிக் கடைப் பிடிக்கவில்லை என்றுதான் குற்றஞ் சாட்டுகிறார்கள்.

நாங்கள் மேற்கூறப்பட்ட எந்தவிதமான சடங்குகளையும் செய்வதில்லை. செய்யத்தேவை இல்லையென்றும் கூறுகிறோம். அத்தகையச் சடங்குகளைச் செய்வதற்கு எந்தவிதமான அர்த்தமுமில்லை. அதற்குக் கூறப்படும் காரணங்களும் பொருத்தமானதாகத் தெரியவில்லை. ஆகவேதான் அவைகளை நாங்கள் செய்வதில்லை யென்பதுடன் செய்வதும் கூடாது எனவும் குறிப்பிடுகிறோம்.

இந்தச் சடங்குகளை நாம் ஏன் செய்யவேண்டும்? அவைகளை விட்டுவிட்டால் என்ன? என்ற கேள்விகளுக்கு அவைகள் அந்தக் காலத்திலிருந்து இருந்துவரும் பழக்கங்களாயிற்றே! அவைகளை எப்படி விட்டுவிட முடியும்? என்ற முறையில் தானே பதில் கிடைக்கிறது. வேறு ஏதாவது தக்க காரணங்கள், பொருத்தமான பதில்கள், அர்த்தமுள்ள, அறிவுக்குப் பொருத்தமான விளக்கங்கள் தரப்படுகின்றனவா? கிடையாதே!

ஏதோ சில காரியங்களைச் சடங்குகள் என்றும் சாஸ்திர முறைகள் என்றும் பழைய வழக்கங்கள் என்பதற்காக மட்டும் எந்தவிதமான காரணங்களுமின்றி நம்மையறி

யாமலேயே நாம் செய்து வருகிறோம். இதைத்தான் நாம் சரியா? தேவைதானா? என்று சீர் தூக்கிப் பார்த்து முடிவு கட்டவேண்டும்.

மக்கள் தமது அன்றாட வாழ்வில் எத்தனையோ காரியங்களைச் செய்கிறார்கள். செய்கின்ற அத்தனை காரியங்களுக்குமா காரண காரியங்களையும் பொருத்தத்தையும் எண்ணிப் பார்த்துச் செய்து கொண்டிருக்கிறார்கள்! இல்லை! அப்படிச் செய்வதில்லை.

எத்தனையோ காரியங்களை ஏன் செய்கிறோம்! என்ன அர்த்தம். எப்படிப் பொருத்தம் என்றெல்லாம் பார்த்துக் கொண்டிராமலே ஏன்? ஒரு சிறிதும் எண்ணிப்பாராமலுங் கூடத் தங்களை யறியாமல் பல காரியங்களை பலர் செய்து வருவதை நாம் காண்கிறோமே!

உதாரணத்திற்காக நான் சிலவற்றைச் சுற்றிக்காட்ட விரும்புகிறேன். சிலருக்குத் தூக்கம் வருவதற்கு முன்னர் கொட்டாவி வரும் அப்படிக் கொட்டாவி விடும்போது விரல்களால் மூன்று சிட்டிகை போடுவதைப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட நண்பரைப் பார்த்து அவர் கொட்டாவி வரும்போதெல்லாம் மூன்று சிட்டிகை போடுகிறாரே அதற்கு என்ன காரணம் என்று கேளுங்கள்.

கொட்டாவி விடும் நண்பர் சிறிது கோபக்காரராக இருந்தால் முறைத்துப் பார்ப்பார் அல்லது சாந்தமானவராக இருந்தால் மெதுவாக சிரித்துக்கொண்டே 'அது ஏதோ பழக்கம்' காரணம் ஒன்றுமில்லை என்று பதில் கூறுவார்.

இதைப்போலவே சூளையில் உள்ள ஒரு பெரியவர், புரசைவாக்கத்தில் நடந்த ஒரு சச்சரவில் பஞ்சாயத்து செய்யப் புறப்படுகிறார் என்று வைத்துக்கொள்வோம். சூளையிலுள்ள பெரியவர் புரசைவாக்கம் போவதற்காகத் தன்னுடைய வீட்டை விட்டுப் புறப்பட்டுப் போகிறார்.

அவர் புறப்பட்டுத் தெருவில் சிறிது தூரம் செல்லும் போது அடுத்த வீட்டின் கூரையில் இருந்த பூனே எதிர்த்த வீட்டுத் திண்ணைப்பக்கமாக ஒரு எலியைப் பிடிக்க குறுக்கே ஓடுகிறது. இதைக் கண்டவுடனே, பஞ்சாயத்துக்காக வேகமாக நடந்து சென்ற பெரியவர் திடுக்கிட்டுத் திரும்பி வந்து தன் வீட்டுத்திண்ணையில் உட்கார்ந்து விடுகிறுர்.

திரும்பி வந்தவர் திண்ணையில் உட்கார்ந்தபடியே 'அடியே காமாட்சி!' என்று தனது மனைவியை அழைப்பார் இப்படி அவர் அழைத்த உடனே அந்த அம்மையார் சகுணம் சரியில்லை போலிருக்கிறது. அது தான் திரும்பி வந்துவிட்டார்' என்று தீர்மானித்துக் கையில் தண்ணீரு டன் திண்ணைப் பக்கம் வருவார். பெரியவர் அந்தத் தண் ணீரைக் குடித்துவிட்டுச் சிறிது நேரம் உட்கார்ந்தபிறகே தான் மீண்டும் எழுந்து புரசைவாக்கம் போவார்.

இந்தப் பெரியவர் போவதே புரசைவாக்கம் சச்சர வைத் தீர்ப்பதற்காக. குறுக்கே பூனை ஓடியதோ எதிர்த்த வீட்டுப் பக்கம் ஓடிய எலியைத் துரத்திப் பிடிப்பதற்காக! குறுக்கே ஓடிய பூனையைக் கண்டு இவர் திடுக்கிடுவா னேன்? திரும்பி வருவானேன்? திண்ணையில் உட்கார்ந்து தண்ணீர் சாப்பிடுவதும்தான் எதற்காக?

இவர் போகின்ற காரியத்திற்கும் பூனை குறுக்கே ஓடியதற்கும் என்ன தொடர்பு இருக்கிறது? ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லையே! என்றுலும் பூனை குறுக்கே ஓடினல் அவர் மேலே போகமாட்டார். சகுணத்தடையாகி விட்டது. போகிற காரியம் தடையாகி விடும் என்று அஞ்சுகிறுர்!

'ஏன் இப்படி?' என்று அந்தப் பெரியவரைக் கேட் டால் பொருத்தமான காரணம் ஏதாவது கூறமுடிகிறதா என்றுல் அதுதானே இல்லை. 'ஏதோ பழக்கம்' என்று தானே அனைவரும் இப்படிப்பட்ட காரியங்களுக்குப் பதில் கூறுகின்றனர்!

இதேபோன்ற மற்றொரு உதாரணத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு வீட்டுத்திண்ணையில் இரண்டு தோழர்கள் உட்கார்ந்து கொண்டு காரசாரமாக அரசியல் பிரச்சினைகளைப்பற்றி விவாதித்துக் கொண்டிருக்கின்றனர். கையில் 'தினமணி' பத்திரிக்கை இருக்கிறது. அதில் உள்ள அகில உலகச் செய்திகளைப் படித்து ரசமான பேச்சு நடக்கிறது.

அந்த இரண்டு தோழர்களில் ஒருவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். மற்றவர் பிரஜா சோசலிஸ்டுக் கட்சியில் பங்கு கொண்டவர். காங்கிரஸ் தோழரைப்பார்த்து பிரஜா சோசலிஸ்ட் 'டாக்டர் லோகியாவை காங்கிரஸ் சர்க்கார் கைது செய்தது நியாயமா? என்று கேட்பார். அதற்குக் காங்கிரஸ்காரர் உடனே 'உங்கள் பட்டம் தாணுப்பிள்ளை மட்டும் திருவாங்கூரில் குஞ்சன் நாடாரைக் கைது செய்தது மட்டும் என்ன நியாயம்' என திருப்பிக் கேட்பார். இதைத் தொடர்ந்து ரசமான விவாதம் தொடரும்.

இவர்கள் இப்படி விவாதம் செய்துகொண்டு இருக்கும் போது அந்த வீட்டுக் கூறையில் உள்ள பல்லி ஒன்று ஒரு பூச்சியைப் பிடிப்பதற்காக பாயும். அப்போது அது சிறிது சத்தமிடும்.

பூச்சியைப் பிடிக்க பல்லியிடும் சத்தம் கேட்டதும், திண்ணையில் உட்கார்ந்து அருமையான அரசியல் விஷயங்களைப்பற்றி விவாதித்துக் கொண்டிருக்கும் நண்பர்கள், தாங்கள் பேசிக்கொண்டிருக்கும் பிரச்சினைகளையும் விட்டுவிட்டு வாயில் சப்புக்கொட்டி தரையில் மூன்றுதரம் விரலால் தட்டுவார்கள்!

பூச்சி பிடிக்கும் பல்லி சத்தமிட்டால் இவர்கள் ஏன் பேச்சை நிறுத்த வேண்டும். தரையை மூன்று தரம் தட்ட வேண்டும்.

அந்த நண்பர்களைக் கேட்டால் சாந்தமான நேரமாக இருந்தால் 'என்னமோ பழக்கம் சார் விடமாட்டேன்கிறது'

என்று பதில் சொல்வார்கள்! இன்னும் சிலர் நாம் இப்படிக் கேட்டால் உங்களுக்கு வேறு என்னதான் வேலை! சுயமரியாதைக் காரர்களுக்கு இப்படி எதையாவது கிளரிக் கொண்டுகேலிசெய்துகொண்டிருக்கத்தான் தெரியும் என்று சலித்துக் கொள்வார்கள்.

பூச்சி பிடிக்கச் செல்லும் பல்லியின் சத்தத்தைக் கேட்டதும் தாங்கள் பேசி அலசிக் கொண்டிருந்த அகில உலகப் பிரச்சினைகளையும் அலட்சியப்படுத்தி விட்டுத் தரையில் மூன்று தரம் தட்டுவதற்குப் பொருத்தமான காரணம் எதையுமே கூற முடியாது.

கொட்டாவி விடும்போது மூன்றுதரம் சிட்டிக்கை போடுவதும், போகும்போது எதிரே பூனை குறுக்கே வந்தால் சகுணம் சரியில்லை என்று திரும்பி விடுவதும், பல்லி சொல்லுக்குத் தரையைத் தட்டுவதும், அதற்குப் பலன் பார்த்துப் பதைப்பதும் மக்களிடம் எப்படியோ ஏற்பட்டுவிட்ட பழக்கமும் அதனுல் ஏற்பட்ட அறியாமையினுலும்தான்.

இவைகளை யெல்லாம் காரணம் தெரியாமல், ஏன் செய்கிறோம். எதற்காகச் செய்கிறோம் என்பதைப் பற்றிய எண்ணம் ஒரு சிறிதுமின்றி, தங்களை யறியாமலே பழக்கத்தினுல் செய்து வருகிறுர்கள். இப்படிப்பட்ட காரண காரியமற்ற செயல்கள் பழக்கத்தின் பேராலும், வழக்கத்தின் மூலமாகவும் பல நடைபெறுவதை நாம் காணமுடியும்.

இவைகளைப் போலவேதான் திருமணக் காலங்களிலேயும் சில அர்த்தமற்ற காரியங்களைச் செய்து வருகிறுர்கள். தேவையற்ற பொருள்களைச் சேகரித்து வைத்து வீணுக்குகிறுர்கள்.

இத்தனை காரண காரியங்களுடன் கூடிய இப்படிப்பட்ட சடங்குகளைத்தான் நாங்கள் சடங்குகள் கூடாது என்று கூறி, அவைகளை அடியோடு நீக்கிவிட்டுப் பல

ஆண்டுகளாக எத்தனையோ சீர்திருத்தத் திருமணங்களை நடத்தித்தான் வருகிறோம். அதனால் என்ன கெட்டுவிட்டது? ஏதும் இல்லையே!

எனவே மக்கள் சடங்குகளைத் தள்ளிவிடுவதைக் கண்டு சந்தேகப்படுவதும், பழைய வழக்கங்களை விட்டு விட்டோமே என்பதற்காக பதை பதைப்பதும் அர்த்த மற்றதாகும்!

திருமணத்தின் போது தாலிகட்டும் பழக்கம் மக்களிடையே இருந்து வருகிறது. தாலிக்கயிற்றில் புலியின் நகத்தைப் போலும் பல்லினைப் போலும் பொன்னால் சேர்த்துக் கட்டுகிறார்கள். இதற்கு என்ன அர்த்தம்?

நம்முடைய பெரியவர்களும் இதற்கு ஒரு விதமான விளக்கங் கூறுகிறார்கள். அதாவது பழங்காலத்திலே காடுகள் அதிகம் நாடுகள் குறைவு. காட்டிலே புலிகளும் அதிகம் ஆதலால் ஒரு மங்கையை மணக்க விரும்பிடும் வாலிபன். காட்டிற்குச் சென்று புலியை வேட்டையாடிக் கொன்று அதனுடைய பல்லையும், நகத்தையும் கொண்டு வந்து, தான் காதலிக்கும் பெண்ணிடம் காட்டுவானாம். இதோ பார்! நான் வேட்டையாடிக்கொன்ற புலியின் நகம். இது தான் அதனுடைய பல் என்று மங்கை நல்லாளிடம் தன் வீரத்தை அறிவிப்பான். இதைக்கண்ட மங்கையும் இப்படிப்பட்ட வீரனைத்தான் நான் மணப்பேன். என்று கூறி அந்த வீரனையே மணந்துகொள்வாள். தனது காதலனின் வீரத்தின் சின்னமாக அந்த புலி நகத்தையும், பல்லையும் தன் கழுத்தில் அணிந்துகொள்வாள். இதுதான் தாலி கட்டுவதன் பொருள் என்று கூறுகின்றனர். அன்று காடுகள் அதிகம் நாடுகள் குறைவு. எனவே காட்டிலிருந்து நாட்டுக்குள் புகுந்து மனிதனை தாக்கிடும் புலியையும் எதிர்க்கும் உடல் வலிமையும் உள்ள உரமும் படைத்தவனைத்தான் பெண்கள் மணக்க வேண்டும் என்ற ஏற்பாடு- தீர்மாணம் இருந்தது. பொருத்தமாக இருந்திருக்கலாம்.

இதே ஏற்பாடு இன்றைக்கும் இருக்கவேண்டுமா? உண்மையில் எத்தனை பேர் திருமணம் செய்துகொள்வதற்காக இத்தகைய புலி வேட்டைக்குப் போய்வரத் தயாராக இருப்பர் இந்த நாளில்? ஒருவரும் இருக்கமாட்டார்களே!

இன்று அத்தகைய ஏற்பாடும் பழக்கமும் ஒரு சிறிதும் இல்லையென்றாலும், தாலிக்கயிற்றில் மட்டும் பொன்னால் புலி நகமும் பல்லும் செய்து கோர்த்திட நாம் தவறுவதில்லை இது தேவைதானா?

இன்றைக்கு நாடுகள் அதிகமாகவும் காடுகள் குறைவாகவும் இருக்கின்றன இருக்கின்ற காடுகளிலும் புலிகள் காணப்படுவதும் குறைவு அந்த நாட்களைப்போல இன்றும் நான் போய் காட்டில் புலிவேட்டையாடி, புலியைக் கொன்று அதன் பல்லையும், நகத்தையும் எடுத்துச்சென்று என் காதலியிடம் என் வீரத்தைக்காட்டி அவள் கழுத்தில் இவைகளைத் தாலியாகக் கட்டுவேன் என்று எந்த இளைஞனாவது இன்றைக்குக் கிளம்ப முடியுமா? அப்படிக் கிளம்பினாலும் காடுகள் அனைத்தும் சர்க்காரின் காட்டு ரிசர்வ் இலாகாவைச் சேர்ந்திருப்பதால் புலி வேட்டையாட விடமாட்டார்கள்.

பழைய காலத்தைப் போலவே இன்றும் புலிவேட்டையாடி காதலிக்கு தன்னுடைய வீரத்தை வெளிப்படுத்திய பிறகே மணமுடிப்பேன் என்று எவனாவது ஒரு வாலிப வீரன் எப்படியோ ஒரு புலியைக் கண்டுபிடித்து அதனைக் கொன்று விடுகிறான் என்றே வைத்துக்கொள்ளுங்கள்.

தான் வேட்டையாடிக் கொன்ற புலியின் நகத்தையும் பல்லையும் காதலியிடம் காட்டி, 'பெண்ணே' இதோ பார் நானே வேட்டையாடிய புலியின் நகம்! இது தான் அதனுடைய பல்! என் வீரத்தைக் கண்டாயா! இவைகளை என் வெற்றிச் சின்னமாக உனக்குத் தருகிறேன். இவைகளைக் கயிற்றில் கோர்த்து கழுத்தில் தாலியாகக் கட்டுகிறேன்.

என்று கூறுவதனுல் எத்தனை பெண்கள் 'சரி' என்று ஏற்பர்! ஏற்கும் சூழ்நிலை இன்று இருக்கிறதா? இல்லையே!

புலியைக் கொன்றேன். இதோ அதன் பல்! அதன் அளவைப் பார்! நகத்தின் கூர்மையைக் கண்டாயா! என்று கேட்கும் காதலனின் வீரத்தையா இந்தக் காலத்துப்பெண் எண்ணிப் பெருமைபட முடியும்?

காதலனிடம் சிக்கிய காட்டுப் புலிக்கே இந்தக்கதி ஏற்பட்டுவிட்டதே! இப்படிப்பட்டவனிடம் நாம் சிக்கிவிட்டால் என்ன பாடு படவேண்டியிருக்குமோ என்று தானே அஞ்சி நடுங்குவாள்.

இந்தக்காலத்துப்பெண்கள் தன் கணவன்மாரிடம் புலி வேட்டையாடும் அளவுக்கு உள்ள வீரத்தை எதிர்பார்க்க வில்லை. எந்தக் கணவனும் புலி என்றவுடனே கிலிகொண்டிடும் நிலையில் தானே இருக்கிருர்கள். பெண்கள் இன்று தங்கள் கணவன்மார்களின் கட்டற்ற வீரத்தை மட்டுமே பெரிதாகக் கருதவில்லை.

அவர்கள் தங்களுக்கு வரப்போகும் கணவன் அழகாக இருக்கவேண்டும். அதோடு அன்புடையவனுக நடந்து கொள்ளவேண்டும். நல்ல குணவானுக பண்புள்ளம் படைத்தவனுக இருக்கவேணடும். வெளியில் செல்லும்போது தங்களையும் அழைத்துச் செல்லவேண்நும். நல்ல நாகரீகமுடையவனுக விளங்கவேண்டும். குடும்பத்தில் அக்கரையுள்ளவனுகத் திகழவேண்டும் என்று தான் விரும்புகிருர்கள்.

எதிர்ப்பவர்களைத் தாக்கித் தகர்த்திடும் கட்டான உடலும், உள்ள உரமும், உருட்டு விழியும் உள்ளவனுக ஊரார் கண்டு நடுங்கிடும் மனிதனுகத் தங்கள் கணவன்மார் இருக்கவேண்டும் என்பதைப் பெண்கள் விரும்பிய காலம் போய்விட்டது.

எனவே தாலி கட்டுவதிலும் நாம் செய்யும் காரியம் அர்த்தமுள்ளதா? அறிவுக்குப் பொருத்தமுள்ளது தானு என்பதை எண்ணிப்பார்க்க வேண்டுகிறேன்.

அய்யரை அழைத்து மந்திரம் ஓதாமல், அம்மி மிதித்து அருந்ததி காட்டுவதுபோன்ற சடங்குகளைச் செய்யாமல் நடைபெற்று வரும் திருமணங்கள் சட்டப்படி செல்லாது என்று மக்களிடையே ஒருபயம் முன்பெல்லாம் நிலவி வந்தது சந்தேகம் உதித்து வந்தது.

நான் கேட்கிறேன். யாருக்கு சட்டத்தின் பாதுகாப்புத் தேவையென்று? நாமெல்லாம் பெரும்பாலும் ஏழைகள் தானே? நமக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்கு நமது சொத்து பற்றிய உரிமை ஏற்பட வேண்டும் என்பதற்குத் தானே சட்டம் தேவைப்படுகிறது.

ஏராளமான பணத்தைத் தேடி வைத்துள்ள பணக்காரர்கள் தானே இதைப்பற்றிக் கவலைப்படவேண்டும்.

மக்களுக்கு இனி இத்தகைய அச்சமும், ஆயாசமும், பரிதவிப்பும், பயமும் ஏற்படுவதற்குக்கூட காரணமில்லாமற் போய்விட்டது. ஏராளமான சீர்திருத்தத் திருமணங்கள் நாட்டில் நடைபெற்று வருகின்ற காரணத்தால், இப்படிப்பட்ட சீர்திருத்த் திருமணங்களும் இனி சட்டப்படி செல்லுபடியாகும் என்ற சூழ்நிலை இப்போது உருவாகி வருகிறது.

ஆச்சாரியார் மந்திரி சபையில் சட்டமந்திரியாக இருந்த குட்டி கிருஷ்ணன் நாயர் காலத்தில் சீர்திருத்தத் திருமணங்கள், சுயமரியாதைத் திருமணங்களைப் பற்றிய கேள்வி நீதிமன்றங்களில் எழுந்தது இதன் காரணமாக அவர் ஏற்கனவே நடந்துவிட்ட சுயமரியாதைத் திருமணங்கள் அனைத்தும் சட்டப்படி செல்லுபடியாகும் என்று ஒரு சட்டம் கொண்டு வந்தார்.

ஆனால் இன்று காமராசர் ஆட்டியில் இதனை ஏற்கன வே நடந்த திருமணங்கள் மட்டுமல்லாமல், இனி நடக்கும் சுயமரியாதைத் திருமணங்களும் சட்டப்படி செல்லுபடி யாகும் என்ற முறையில் மாற்றியமைக்கத் திட்டமிட்டுள்ள னர்.

இதன் மூலம் சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி செல்லாது என்று பேசி வந்த நிலைமை அடியோடு மாறி விடுகிறது இப்படிப்பட்ட சீர் திருத்தத் திருமணங்களுக்குச் சட்டத்தின் பாதுகாப்பும் ஏற்பட்டுவிட்டது.

இதுவரையில் நாம் சட்டம் ஒப்புகிறதா? இல்லையா என்பதைப்பற்றிக் கவலைப்படவில்லை. சமூகம் ஒப்புகிறதா? மக்கள் மனந்திருந்துகிறார்களா? என்பதை மட்டுந்தான் கவனித்துச் சுயமரியாதைத் திருமணங்களை நடத்தி வந் தோம் நாம் எதற்கும் அஞ்சாது தொடர்ந்து இத்தகைய பணியினைச் செய்து வந்ததன் பயன் தான் இப்பொழுது சட்டம் நம்மைத் தேடி வந்து நமக்குப் பாதுகாப்புத் தரும் நிலைமை எற்பட்டுவிட்டது.

இதே முறையில் நாம் நாடு முழுவதும் பேசியும் எழுதி யும் பிரச்சாரம் செய்து வந்த மற்றொரு காரியமும் இன்று சட்டமாகி வருகிறது. நாம்தான் கேட்டோம் முதன் முத லில் ஒரு ஆண் பல மனைவியரை மணந்து கொள்வது நியாயமா? என்று.

அவனுக்கென்ன ஆண்மகன்! ஒன்னென்ன ஒன்பது மனைவிகளைக் கூட கட்டி ஆளலாம்! என்று பெருமைபேசி வந்த காலமும் இருக்கத்தான் இருந்தது! சமூகத்திலும் இப்படிப்பட்ட பலதார திருமணத்திற்குச் சம்மதம் அளிக்கப்பட்டிருந்தது.

ஆசைக்கு ஒரு மனைவி, சொத்துக்கு ஒரு மனைவி, சுகத்திற்கு வேறொருத்தி, போகிற இடத்தில் வேறொருத்தி, பெருமைக்கு மற்றொருத்தி என்ற முறையிலே ஒரே ஆண்,

பல மனைவியரை மணந்து வந்த முறையினை நாம்தான் த்காது எனக் கூறினேம். முறையல்ல வென்று கண்டித் தோம்.

பல பெண்களை ஒரு ஆண் மணந்துகொள்வதில் எவ் வளவு கேடுகள் விளைந்தன! எத்தனை பெண்கள் கணவனை கட்டிய பிறகு, கணவன் முகத்தைக் கூட பார்க்க முடியாத பயங்கர நிலைமையில் தத்தளித்தனர்? எத்தனை குடும்பங் களில் கண்ணீர் வெள்ளம் புரண்டோடியது.

இந்தக் கொடுமையைக் களையவேண்டும். ஒரு ஆண் ஒரு பெண்ணைத்தான் மணக்க வேண்டுமே தவிர, இஷ்டம் போல் எத்தனை பெண்களை வேண்டுமானுலும் மணப்பேன் என்று நடப்பது அநாகரிகம் என்று நாம் கண்டித்தோம், அதன் பலனை இன்று காண்கிறேம்!

இன்று சட்டப்படி ஒரு ஆண் ஒரு பெண்ணைத்தான் மணந்து கொள்ளமுடியும். ஒரு மனைவி உள்ள போது மற்றெரு பெண்ணை மணந்து கொள்வது சட்டப்படி செல்லு படியாகாது. இதோடு இரண்டாவது மனைவியை மணந்து கொள்ளும் ஆணுக்கும் அவனுக்குப் பெண் தரும் பெண் வீட்டாருக்கும் சட்டப்படி பலவருடம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்படும்.

பல மனைவியரை நான் மணப்பேன். என்னைத் தடுப் பவர் யார்? என்று ஆண்மகன் பேசிவந்த காலம் போய் விட்டது. ஆணுக்கு என்ன எத்தனை பெண்களை வேண்டு மானுலும் மணக்கலாம். ஆண்டவனே பல மனைவியை 'மணந்துள்ளரே' என்று பேசி வந்த வைதீகர்களின் போக்கும் இன்று சட்டத்தின் மூலம் தடுக்கப்பட்டுவிட்டது. ஏற்கனவே ஒருமனைவி இருக்கும்போது மற்றெரு பெண்ணை மணப்பது இன்று கிரிமினல் சட்டப்படி குற்றமாகும்.

இந்த நிலைமை ஏற்படக் காரணமானவர்கள் யார் நாம் தானே! கல்லடிகளையும் அதைவிட எதிர்த்தவர்களின் படு

மோசமான சொல்லடிகளேயும், பிறர் ஏளனத்தையும், ஏசலே யும் பொருட்படுத்தாது தாங்கி செய்துவந்த சுயமரியாதைப் பணியின் பிரச்சாரத்தின் விளேவாக மக்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்ச்சிதான். சர்க்கார் இப்படிப்பட்ட சட்டமியற்று வதற்கான சூழ்நிலே ஏற்பட்டதற்குக் காரணமாகும்.

முன்பெல்லாம் தனது மனேவியைப் பிடிக்கவில்லே என் பதற்காகத் தள்ளிவைத்து விட்டுத் தன்னிஷ்டமாக வேறு மனேவியைத் தேடிக்கொள்வதைப் போலச்செய்யமுடியாது. தனது மனேவியை அர்த்தமற்ற காரணங்களுக்காக எவரும் ஒதுக்கிவிட்டு புதுமனேவியைத் தேடவும் முடியாது.

இருக்கும் மனேவியைத் தள்ளிவிட்டு வேறு மனேவியை மணம் புரிந்துகொள்ள வேண்டுமானுல், கணவன் முதலில் நீதிமன்றத்தில் தெரிவிக்க வேண்டும். பிறகு தன் மனேவி கருத்தரிக்கவே முடியாது என்ருே, அவள் குடும்ப வாழ்க் கைக்கு இலாயக்கே இல்லே யென்பதையோ, தக்க டாக்டர் களேக்கொண்டு நிருபிக்கவேண்டும்.

தன் மனேவிக்கு தீராத நோய் இருந்தால் நீக்கலாம். அதைக்கோர்ட்டில் டாக்டர் மூலம் உறுதிப்படுத்திக்காட்ட வேண்டும். மனேவிக்குக் குட்டம் என்பதையோ அல்லது தீராத பைத்தியம் என்பதையோ கோர்ட்டாரின் அனுமதி பெற்ற பின்னர் தான் எந்த மனிதனும் இன்று வேருெருத் தியை மீண்டும் மணக்க முடியும்!

இதைப்போலவே இன்றைக்கு சட்டத்தின் மூலம் மண மக்களுக்கு விவாகரத்து உரிமைதரப்போகிருர்கள். இதற் கான சட்டம் டில்லியில் தயாராகி வருகிறது. இதற்கும் நமது பிரச்சாரம் தான் முக்கிய காரணமாகும்.

மண வாழ்க்கையில் இருவரும் ஒன்றுபட்டு வாழ முடி யாத நிலேமை ஏற்பட்டுவிட்டால், அந்த நிலேமையில் அவர்கள் விவாக விடுதலேபெறும் உரிமை இருக்கவேண்டும் என்று நாம் கூறி வந்தோம்

நாம் இப்படி கூறிய நேரத்தில் பலரும் ஏளனம் செய்தனர். எதிர்க்கவும் செய்தனர். ஆகாத வேலை, தகாத காரியம் என்று கூடக்கூறினர். கட்டிய மனைவிக்கு விடுதலை உரிமை தருவதா என்றெல்லாம் ஆர்பரித்தனர்.

இவைகள் அத்தனையும் தாங்கி, நாம் தொடர்ந்து செய்வ வந்த பணி இன்று பலன்தர ஆரம்பித்துவிட்டதே!

எத்தனையோ குடும்பங்களில் நாம் கணவனால் கவனிக்கப்படாத மனைவியரைக் காண்கிறோம். குடிகாரக் கணவனின் அடிக்கும், உதைக்கும் தினந்தோறும் ஆளாகி அவதியுறும் மனைவிமாரின் கண்ணீரைக் காண்கிறோம். கட்டிய மனைவியைக் கண்ணெடுத்தும் பாராது, விலை மாதரிடமே திரிந்து வரும் வீணர்களால் மனம் வெதும்பித் துடித்திடும் பெண்களையும் நாம் பார்க்கிறோம்.

ஆகவேதான் கணவனால் கொடுமைப்படும் மனைவியும் சரி, அல்லது மனைவியினால் தொல்லைக்கு ஆளாகும் கணவனும் சரி, தங்களுக்குள் பிடித்தமில்லாதபோது விவாகரத்து செய்துகொள்ளும் உரிமை பெற்றாக வேண்டும் என்று நாம் வலியுறுத்தி வந்தோம்.

விவாகரத்துரிமை இருந்தால், பொருத்தமற்ற திருமணங்கள் தவறுதலாக நடந்துவிட்டாலும் பின்னர் அதனைத் திருத்திக்கொள்ள வழிவகைகள் பிறக்க முடியும். பிடித்த மற்றவர்கள் காலமெல்லாம் கூடி வாழ்வதென்பது நடவாத காரியந்தானே. எனவே பிடித்தமற்றவர்கள் விவாகரத்துக் கோரி விடுதலை பெறும் உரிமையைப் பெறுவது நன்மை தானே!

விவாகரத்து உரிமை வழங்கும் சட்டமும் அமுலாக்கப் பட்டு விட்டால் கண்டபடி திரியும் கணவனை மனைவி தட்டிக் கேட்டு திருந்தாவிடின், விவாக விடுதலை பெற்றுக்கொள்ள முடியும் குடிகாரக் கணவனின் கொடுமைக்கு நாமெல்லாம்

ஆளாகி அவதியுறும் மனைவி அவனிடமிருந்து விடுதலை பெற வழி பிறக்கும்.

மனைவியைக் கவனியாது பிற பெண்கள் மீது நாட்டம் செலுத்தும் கணவனிடமிருந்து விடுதலைபெற மனைவி கோர்ட்டில் வழக்கு தொடர முடியும். என் கணவன் வீட்டுக்கு இரவில் வெகுநேரம் கழித்தே வருகிறார். வந்தாலும் என்னிடம் பேசுவதில்லை, சம்பாதிக்கும் பணத்தையும் செலவுக்குக்கூட தருவதில்லை. தூக்கத்தில் காந்தா சாந்தா என்று கனவு கண்டு வாய் பிதற்றுகிறார். இவருக்கு என் மீது பிரியமில்லை. வேறு பெண்களுடன் தொடர்பு கொண்டிருக்கிறார் என்று தெரிகிறது. ஆகவே தான் இவரிடமிருந்து விவாக ரத்து கோருகிறேன் என்று மனைவி கோர்ட்டில் கூறமுடியும்.

கோர்ட்டாரும் இதைத் தீரவிசாரித்து கேள்விகளுக்கு மேல் கேள்விகளை போட்டு, ஒழுங்கான வாழ்க்கை நடத்த கணவன் இலாயக்குள்ளவன் தானா என்பதை ஆராய்ந்து பார்த்து அவசியமாயின் அந்த மனைவிக்கு விவாகரத்து உரிமையைத் தருவர்.

இதைப்போலவே குடும்பத்திற்கு சிறிதும் பொருத்தமற்ற மனைவியையும் ஒழுங்கீனமான பெண்ணையும் விலக்க ஆண்களும் உரிமை கோரலாம். ஒத்த கருத்தின்மை ஏற்படும்போது விலகி வாழ உரிமை பெறுவது இருவருக்கும் நல்லதுதான். இதனால் சமூகத்திற்கும் நன்மை உண்டு.

விவாக ரத்து உரிமைக்கான சட்டம் வருவதைப் போலவே நாம் நெடு நாட்களாகத் தேவையென்று பாடுபட்டு வரும் மற்றொரு பிரச்சினைக்காகவும் சட்டமியற்றப் படுகிறது டில்லியில்.

நாம் பல ஆண்டுகளாகக் கூறிவருகிறோம் பெண்களுக்கும் ஆண்களைப் போலவே தகப்பன் சொத்துக்களில் உரிமை இருக்க வேண்டும் என்று.

நாம் இப்படிக் கூறியபோதும் பெரும்பாலோர் எதிர்த்தனர். ஏளனம் செய்து தூற்றவும் செய்தனர். பெண்ணுக்குச் சொத்துரிமையா? பெண்ணிடம் பணம் இருந்தால் ஆணை அவள் எப்படி மதிப்பாள் என்று கூக்குரலிட்டனர். நாம் எதற்கும் அஞ்சாது இதனை வலியுறுத்திப் பிரச்சாரம் செய்து வந்தோம்.

அதன் பலன் இன்று பெண்களுக்குச் சொத்துரிமை தரும் மசோதா விரைவில் டெல்லி பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்படுமென்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாம் எந்தக்காரணத்திற்காகப் போராடி வந்தோமோ அவைகள் எல்லாம் இன்று சட்டமாகி வருகின்றன என்பதைக் காணும்போது நாம் செய்து வரும் பணி எவ்வளவு மகத்தானது என்பது மட்டுமல்ல நாட்டுக்குத்தேவையான நல்ல பணியைச் செய்து வந்தோம் என்பது தெரிகிறது.

இந்த நிலையைக் கண்டு நாம் பெரிதும் மகிழ்கிறோம். பெருமைப் படுகிறோம்.

இந்த முறையில்தான் நாம் சீர்திருத்தத் திருமணங்கள் செய்து வருவதிலும் வெற்றி கண்டோம்! மேலும் மகத்தான வெற்றிகளைக் காண்போம் என்பது உறுதி.

சீர்திருத்த முறையில் திருமணங்களை நடத்த வேண்டும். என்பதற்காக நாங்கள் கூறும் காரணங்களை ஒருவராலும் மறக்க முடியாமற் போனாலும் சிலர் அந்தகாலம் முதல் இருந்து வரும் 'பழக்கங்களையா தள்ளி விடுவது' என்று கேட்கிறார்கள்.

அந்தக்காலம் அந்தக்காலம்! என்று பேசி வரும் தோழர்களையும். பெரியவர்களையும் நான் கேட்கிறேன்! நீங்கள் குறிப்பிடும் அந்தக்காலம், எந்தக்காலம் என்பதை! சென்னையில் ஒரு பகுதிக்கு 'சூளை' என்ற பெயரிடப் படுகிறது. இங்கிருந்து இதுவரை சூளை என்பதற்குக்

குறிப்பிட்ட நிர்ணயம் இருக்கிறது. புரசைவாக்கம் என்பது அங்கேயிருந்து அதுவரையுள்ள பகுதிகள் என்பதற்கு அத்தாட்சியான வரம்பு கூறப்படுகிறது! ஒரு ரூபாய் என்றால் 16 அணு என்று ஒரு திட்டம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு வீசை என்பது 40 பலம் கொண்டது என்று ஒரு நிர்ணயம் உண்டு. ஒரு கஜம் என்றால் இத்தனை அடி அல்லது இத்தனை முழம் என்று அறுதியிட்டுக் கூற முடியும்.

இதைப்போலவே 'அந்தக்காலம்' அந்தக்காலம் என்று பேசி வரும் பெரியவர்கள் 'அந்தக்காலம்' எதிலிருந்து எதுவரை அந்தக்காலம்? அவர்கள் எடுத்துக்காட்டி கூறும் காலம்?

காலம் என்பதற்கு ஒரு நிர்ணயம் கூறட்டுமே கூற முடியுமா அவர்களால்?

என்னுடைய மகன் இன்று பத்தாவது வகுப்பில் படிக்கிறான். அவன் படிப்பில் ஏதாவது தவறுகள் செய்யும் போது நான் கூறுகிறேன் இதெல்லாம் என்ன படிப்படா? இதற்கே இவ்வளவு கஷ்டப்படுகிறீர்களே! அந்தக் காலத்தில் நான் படித்த போது–? என்று பேசுகிறேன்.

நான் சிறுவனாக இருந்தபோது, நான் என்னுடைய மகனைப்பார்த்து கேட்டதைப் போலவே என்னுடைய தகப்பனார் என்னைப்பார்த்து கேட்டார். நீ படிப்பது என்னடா படிப்பு. அந்தக்காலத்தில் நாங்கள் படித்த படிப்பு என்ன அருமையானது தெரியுமா? என்று. இதைப்போலவே எனது தகப்பனாரைப் பார்த்து அவருடைய தகப்பனார் அதாவது எனது பாட்டனார் இதே முறையில் தான் கேட்டார். என்னுடைய பாட்டனாரின் தகப்பனார்கூட எனது பாட்டனாரைப் பார்த்துக் கேட்டார். நீங்கள் படிப்பதற்கு இப்படி அழுகிறீர்களே? அந்தக்காலத்திலே நாங்கள் எல்லாம் மணலைக்கொட்டி அதில் ஹரிகமோத்து சித்தம் என்று கைவிரலால் எழுதிமுடிவதற்குள் கை விரலிலுள்ள இரத்தம் எல்லாம் சுண்டியே விடும் என்று.

இவர்களில் யார் குறிப்பிடும் அந்தக்காலத்தை வைதீகர்கள் அந்தக்காலம் என்று கூறுகிறார்கள். நான் குறிப்பிடுகிற அந்தக்காலத்தையா? எனது தகப்பனார் குறிப்பிட்டாரே அந்தக்காலத்தையா? அல்லது எனது பாட்டனார் சொன்னாரே அந்தக்காலமா? அதைவிட அவரது தகப்பனார் கூறினாரே அந்தக்காலமா? எந்தக்காலத்தை இவர்கள் அந்தக்காலம் என்று கூறுகிறார்கள்? அந்தக்காலம் எது என்பதற்கு ஒரு நிர்ணயம் ஏற்படுத்திவிட்டுப் பிறகு கூறட்டும் அந்தக்கால பழக்கங்கள் என்று அதற்குப் பிறகு நல்லதா கெட்டதா என்பதைப்பற்றி பேசுவோம். அந்தக்காலம் எந்தக்காலம் என்பதைக் குறிபபிட்டுக் கூறிடாமல் வெறும் அடிமுச்சுக்குரலால் அந்தக்காலம் அழிவதா? அந்தக்கால ஏற்பாடுகள் தொலைவதா? என்று உரத்துப் பேசுவதால் என்ன பயன்?

இன்று வெள்ளைக்காரன் கூடத்தான், பேசுகிறான். நாங்கள் அந்தக்காலத்தில் இந்தியாவை ஆண்டபோது என்ன செய்தோம் தெரியுமா' என்று இதைப்போலவே முஸ்லிம்களுந்தான் சொல்லுகிறார்கள், 'அந்தக்காலத்தில் டெல்லியில் ஔரங்கசீப் ஆண்டபோது முஸ்லிம்களுக்கு இருந்த செல்வாக்கே செல்வாக்கு' என்று முஸ்லிம்கள் பேசுகிறார்கள். 'அந்தக்காலத்தில் ஆண்ட விக்கிரமாதித்திய ராஜாவின் காலமே காலம்' என்று இந்துக்களும் பெருமையோடு பேசுகின்றனர். பௌத்தர்கள் அந்தக் காலத்தில் ஆண்ட அசோகனை நினைக்கிறார்கள் இப்படி பலரும் அந்தக்காலத்தைப்பற்றி பலவிதமாகப் பேசுகிறார்களே! பெருமைப்படுகிறார்களே! இதில் எதை அந்தக் காலம் என்று திட்டவட்டமாக ஏற்பது பின்பற்றுவது.

அந்தக்காலம் எது என்பதற்கு யாராலும் திட்டமான முடிவு கூறமுடியாது. நிர்ணயத்தையும் காட்டமுடியாது. அந்தக்காலம் என்பது முடிவற்றது அளவிட்டுக் கூறமுடியாதது. அளக்க அளக்க நீண்டு கொண்டே போகிற கெஜக்கோல் அது!

ஆகவே அந்தக்காலம் என்று பேசுவதும் அந்தக்கால ஏற்பாடுகள் என்று கூறுவதும். பழக்கங்கள் என்றுசுட்டிக் காட்டுவதும் நிச்சயமற்றவைகளாகும். பொருத்தமானதாக வும் இல்லாதவைகளாகும்.

வைதீக நண்பர்களையே கேட்கிறேன்! அவர்கள் புராணப்படி பார்த்தாலும் அந்தக்காலம் என்பதைக்கூற முடியுமா? ஹரிச்சந்திரன் ஆண்ட காலமா? இராமன் ஆண்ட காலமா? அவருக்கு முன்னர் அறுபதினாயிரம் மனைவியரை மணந்து வாழ்ந்ததாகப் பேசப்படும் தசரதன் காலமா? அதற்கு முன்னர் இருந்ததாகக் கூறப்படும் இலட்சுவாகு பரம்பரையினர் காலமா? எது அந்தக்காலம்? கூறுங்கள்!

உலகம் தோன்றியது எனக் கூறப்படும் காலமா? அல்லது உலகம் தோன்றாத அநாதி காலமா? மகாவிஷ்ணு ஆலிலை மீது திருப்பாற் கடலில் பள்ளிகொண்டிருந்தார் என்று கூறும் புராண காலமா? அப்படி பள்ளிகொண்டி ருந்த மகாவிஷ்ணுவின் உந்திக்கமலத்திலிருந்து முளைத்த தாமரைமீது பிர்மா வீற்றிருந்த காலமா? பிர்மாவின் நாவில் இருந்து சரஸ்வதி வேதங்களை ஓதிய காலமா? அது எந்தக்காலம்? புராணங்களின்படி பார்த்தாலும் அந்தக்காலம் இதுதான் என்றோ. அதுதான் என்பதாக வோ உறுதியாகக் கூறமுடியுமா? முடியாதே! முடிய வில்லையே!!

எந்தக் காலத்தையாவது குறிப்பிட்டு அதுதான் அந்தக்காலம் என்று. நாங்கள் கூறும் காலம் என்று சொல்லி விடட்டும். அந்தக்காலத்தில் உள்ள பழக்க வழக்கங்களை மட்டும்தான் பின்பற்ற வேண்டும். என்றாவது நிர்ணயம் செய்யட்டும்,

அப்படி ஏதாவது ஒரு காலத்தை 'அந்தக்காலம்' என்று தீர்மானித்து விட்டாலும், அதன்படி நடக்க வாழ யாராலும் முடியாதே!

அந்தக்காலல் போலவே இந்தக்காலத்திலும் நடக்கத் தான் வேண்டுமென்ருலும், காஞ்சீபுரத்திலுள்ள நான் இந் தத் திருமணத்திற்கு வரவேண்டுமானுல், நான்கு நாள் முன்னதாகவல்லவா புறப்பட்டு இருக்கவேண்டும். கட்டுச் சோறு கட்டிக்கொண்டு கட்டை வண்டியில் பிரயாணம் செய்ய வேண்டும். அல்லது கால் நடையாக காடு மேடு சுற்றித் தானே வந்தாகவேண்டும். ஆனுல் இன்று அப் படி நடக்க முடியுமா? அல்லது நடப்பதுதான் நல்லதா?

இராமன் காலந்தான் அந்தக்காலம் என்று முடிவு கட்டினுல் அந்த நாளைப்போலவே இந்த நாளிலும் வாழ முடியுமா? வாழத்தான் வேண்டுமென்ருலும் முடியுமா? இராமர் காலத்தை நல்ல காலம் என்று போற்றிப் புகழ் பவர்களால் கூட அப்படி வாழ முடியாதே!

இராமர் காலத்தில் இரயில் கிடையாது. ஆகவே இரயில் கூடாது என்று இந்த நாளில் தள்ளிவிட முடி யுமா? அல்லது இராமரே ஏராத இரயிலில் நாம் ஏறுவதா? என்று இரயிலில் ஏராமல் எத்தனை இராமபக்தர்கள் இருக் கிருர்கள். இருக்கமுடியும். இராமர் காலத்தில் இல்லாத ரயிலில் ஏறித்தானே இராமேஸ்வரம் போகிருர்கள். அதைப்போலவே அரிச்சந்திரன் காலத்தில் ஆகாய விமா னம் இல்லையென்று ஆகாய விமானம் ஏருமலா இருக்கிருர் கள். தர்மராஜா காலத்தில் தபால் கார்டு இல்லை. தந்தி கிடையாது என்ரு தள்ளி விடுகிருர்கள். கிடைதாதே!

எனவே அந்தக்காலம் அந்தக்காலம் என்று பேசுவ தும் அந்தக்காலப் பழக்கங்கள் என்று கூறி அவைகளை அப்படியே பின்பற்றவேண்டும் என்று பிடிவாதம் செய்வ தும் பொருத்த மற்றவைகள் என்பது நன்கு விளங்குகிறது.

எந்தக்காலத்துப் பழக்கமானாலும் சரி அது இந்தக் காலத்துக்குப் பொருந்துகிறதா. வாழ்க்கைக்குத் தேவை யானதுதானா? அறிவுக்கு ஏற்றதா? என்றுதான் நாம் பார்த்துப் பின்பற்றவேண்டுமே தவிர. அந்தக்காலத்துப் பழக்கம் என்பதற்காகவும் கண்ணை மூடிக்கொண்டு எதை யும் அர்த்த மற்றும், பொருத்தமில்லாமலும் பின்பற்றக் கூடாது.

உலகத்தில் மற்ற நாடுகள் எவ்வளவோ முன்னேற்ற மடைந்துள்ளன. இந்த நாடு மட்டுமே தான் எல்லாத் துறைகளிலும் பழம் பெருமை பேசிக்கொண்டும், அந்தக் காலம் என்று கூறிக்கொண்டும் முன்னேறாமல் பின்தங்கிக் கிடக்கிறது. நாமும் மற்ற நாடுகளைப் போலவே எல்லாத் துறைகளிலும் முன்னேறியாகவேண்டும். நாம் அறிவுத் துறையில் முன்னேறியாகவேண்டும்.

நாம் அறிவுத்துறையில் முன்னேற்றமடைந்தால்தான் நம்மிடமுள்ள பழமைக் கருத்துக்கள் அகலும். பாசிபிடித் துப் போன கண்மூடி பழக்கங்களும் தொலையும், மதமூட நம்பிக்கைகள் முறியடிக்கப்படும் என்பதை நாம் உணர வேண்டும்.

இப்படிப்பட்ட சுயமரியாதைத் திருமணங்கள் செய்து கொள்வதும், சீர்திருத்தத் திருமணங்களைப் பரப்புவதும் அறிவுத்துறையில் நாம் முன்னேறுவதற்கான அடிப்படை களில் முக்கியமானதாகும். சீர்திருத்தம் திருமணத்தி லிருந்து துவங்குவது. வாழ்வில் நல்லதொரு நிகழ்ச்சி யாகும் எனவே இதைக்கண்டு யாரும் அச்சப்படத் தேவை யில்லை யென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

உலகம் அறிவுத்துறையில் எவ்வளவோ முன்னேறி யிருந்துங்கூட இந்த நாடு மட்டும் உலக முன்னேற்றத் துடன் ஒட்டி முன்னேறாது பழமையிலே பெருமைகண்டு பின்தங்கித் கிடக்கிறது என்று குறிப்பிட்டேன்.

இதனை நாம் நாட்டில் தினமும் காணும் காட்சிகளி லிருந்தே காணலாம். அண்மையில் வட நாட்டில் நடந்த கும்பமேளா என்ற விழா எதைக்குறிக்கிறது? அதில் நடந்த நிர்வாண ஊர்வலம் எதைக் காட்டுகிறது? அறி வுத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்தையா? அல்லது இன்னமும் இந்த நாட்டில் காட்டுமிராண்டித்தனம் மக்களி டம் இருக்கிறது என்பதைத் தானே காட்டும்! இத்தகைய காட்சியைக் காணும் எந்த வெளிநாட்டானும் நம்மைப் பற்றி எவ்வளவு கேவலமாக எண்ணுவான்.

இதைப்போலவே நான் அடிக்கடி குறிப்பிட்டுவரும் கோவைக்கு அருகிலுள்ள காரமடை என்ற ஊரில் நடக்கும் அர்த்தமற்ற ஆபாசத் திருவிழாவும் இருக்கிறது! அங்கே அனுமார் ஆவேசமாடும் ஒரு சாமியார் வாயிலிட்டு மென்று கீழே துப்பும் எச்சில் வாழைப்பழத்தைப் புசிப்பதால் பிள்ளைப்பேறு கிடைக்குமென்று நம்பி, எத்தனையோ பெண் கள் எடுத்துப் புசித்து வருகிறார்களே! இதெல்லாம் சரியா? இந்தக் காலத்திற்கும் தேவைதானா?

அண்மையில் எங்கோ ஒரு இடத்தில் பாரதப் பிரசங் கம் நடந்ததாம். அதன் கடைசி நாளன்று பீமன் வேஷம் போடுபவன் துரியோதனனைக் கொல்வதற்காகப் படுகளம் நடந்தது. அன்று 6 அடி நீளமுள்ள துரியோதனன் உரு வம் மண்ணினால் செய்யப்பட்டிருந்தது. இதனை பீம வேட தாரி வெட்டி வீழ்த்தினான். இதனைச் சுதேசமித்திரன் பத்திரிகை படம் பிடித்துப் பெரிதாகப் போட்டுக்காட்டி யிருக்கிறது

இப்படிப்பட்ட படத்தைப் பார்க்கும் வெளிநாட்டான் என்ன நினைப்பான்? இன்னும் இந்த நாட்டில் மண் பொம்மை வெட்டுவதில்தான் வீரம் காணப்படுகிறது என்றுதானே கருதுவான்.

இப்படிப்பட்ட கேவலமான பழக்கங்களையும், அர்த்த மற்ற திருவிழாக்களையும் பொருத்தமற்ற சடங்குகளையும்

விட்டொழித்தால் நாம் உண்மையிலேயே முன்னேற முடியும் ஆகவேதான் சீர்திருத்தத் திருமணங்கள் நடப்பதின் மூலம் அறிவுப்பட்டணி நன்கு வேரூன்றி நிலைத்துப்பரவ வழியிருக்கிறதென்று குறிப்பிடுகிறோம்.

சுயமரியாதைத் திருமணங்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் நடக்கத் தொடங்கி விட்டால், நாட்டிலே பரவிக்கிடக்கும் மூடகொள்கைகள் தாமாகவே சீந்துவாரற்றுப் போய் விடுமே. ஆகவேதான் இப்படிப்பட்ட மணம் செய்து கொள்ளும் இந்த மணமக்களை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.பனதார வாழ்த்துகிறேன்.

இந்த திருமணத்திலே தேவாரம் ஒன்று பாடுவார்களா? ஒரு திருவாசகமாவது பாடக்கூடாதா என்றும் கேட்டதாக நண்பர்கள் குறிப்பிட்டார்கள். இப்படிப்பட்ட திருமணங்களிலே அப்படிப்பட்ட பாடல்களைப் பாடத்தான் மாட்டோம். பாடவும் கூடாது என்பதை நண்பர்களுக்குத் தெரிவித்து விடுகிறேன்.

அந்தக்காலத்தில் ஊசி முனையில் நின்றும், ஒற்றைக் காலில் நின்றுல், பற்பல விதமாக அகோர தவம் செய்த முனிவர்கள் அனைவரும் ஆண்டவனைப் பார்த்து எதைக் கேட்டார்கள்? மற்ற ஆழ்வார்களும் சரி, நாயன்மார்களும் சரி, கடவுளிடம் எதைக்கோரினார்கள்?

மக்கள் வாழ வேண்டும்; உலகம் உருப்பட வேண்டும்; வறுமை ஒழிய வேண்டும்; உலகத்தில் உண்மை தழைக்க வேண்டும் என எந்த முனிவராவது, எந்தப் பக்தவனாவது நாயன்மாராவது கேட்டிருக்கிறார்களா? இல்லையே! பொது நன்மைக்காகக் கடவுளை வரம் கேட்ட பக்தர்கள் யாரையாவது காட்டமுடியுமா? ஒருவரும் கிடைக்கமாட்டார்கள்.

எல்லோரும் தங்கள் சுயநலத்தைத்தானே பெரிதாகக் கருதியிருக்கிறார்கள். 'எனக்கு இந்திரப் பதவியைக்

கொடு' என்றொரு முனிவர் கேட்பார் எனக்குக் காம தேனு வேண்டும், கற்பக விருட்சம் தேவை என்று மற்றொரு தவரிசி கேட்டிருக்கிறார். மேனகை, ரம்பை, திலோத் தமை, ஊர்வசி போன்ற தேவலோகத்து நடன மாதர் களின் சுகத்தையனுபவிக்க சொர்க்கவாசம் தேவையென்று ஒரு நாயன்மார் கேட்பார்.

வைகுந்த பதவியையும் சிவலோக வாசத்தையும் தங் களுக்காக கேட்ட அந்த முனிவர்களையும், அவர்கள் பாடிய பாடல்களையும் இந்தத் திருமணத்தில் அழைப்பதும் பாடு வதும் பொருத்தமற்றதுதானே! இங்கே வந்தாலும் அவர் கள் தங்களுக்குத்தான் எதையாவது கேட்பார்களே தவிர நமக்காக ஒன்றும் பேசமாட்டார்கள்; கேட்கமாட்டார் களே. ஆகவேதான் இங்கே எந்த பக்தரையும் சரி. அய்ய ரையும் சரி நாங்கள் அழைக்கவில்லை அழைப்பதுமில்லை. அதைப் போலவே நமக்காக எழுதப்படாத பாடப்படாத எந்தப்பாடலையும் பாடுவதில்லை. பாடவும் விடுவதில்லை.

நம்மைப்பற்றியும், நமது வாழ்க்கையைப் பற்றியும் கவலைப்படும் அக்கரை காட்டும் நண்பர்களைத்தான் நாம் அழைக்கிறோம். அப்படிப்பட்டவர்களால்தானே நாம் முன் னேற வழிவகைகளைக் காட்ட முடியும்! கூறமுடியும்.

ஆகவே தேவாரம் பாடவில்லை திருவாசகம் படிக்க வில்லை. அய்யரைக் கூப்பிட்டு மந்திரம் ஓதவில்லை என்ப தற்காக எவரும் கவலைப்படத் தேவையில்லை என்பதை முறையும் வலியுறுத்திக் கூறுகிறேன்.

கடைசியாக சில பெரியவர்கள் இங்கே அம்மிமிதித்து அருந்ததி காட்டவில்லை. அக்கினி வளர்க்கவில்லை. ஆண்டவனைப் போற்றவில்லை என்று குறைபடுவதற்கும் அர்த்தமில்லை என்று சொல்லிவிடுகிறேன்.

திருமணத்தில் அக்கினி வளர்ப்பது எதற்காக? திரு மணத்திற்கு அக்கினித்தேவன் சாட்சியாக இருக்கிறான்

என்பதற்குத்தானே அந்த அக்கினிபகவான் யோக்கியதை என்ன? அருந்ததி என்று ஒரு சினிமாக்கூட வந்ததே அதைப் பார்த்தவர்களுக்கு மிக நன்ருகத் தெரியும். நான் கூறப்போவது.

ஒரு காலத்தில் சப்தரிஷிகள் ஒரு யாகம் செய்தனராம் அந்த யாகத்திற்குச் சென்று அவிர்ப்பாகம் வாங்கச் சென்ற அக்கினி பகவான் அந்த ஏழு ரிசி பத்தினிகள் மீதும் காமுற்ருனும். இதனை வெட்கத்தை விட்டுத் தன் மனைவியிடமே கூறினுனும் இந்தக் காலத்தில் எப்படிப் பட்ட கேடுகெட்ட மனிதனுங்கூட தான் கட்டிய மனைவி யிடம், தான் பிற பெண்ணின் மீது ஆசை வைத்திருப்ப தாகக் கூறமாட்டான். ஆனுல் ஆண்டவனுன அக்கினி தன் மனைவியிடம் தான் ரிசி பத்தினியிடம் காமுற்று இருப் பதைக் கூறியவுடன் தன் மனைவியரையே அதற்கான ஏற் பாடுகளையும் செய்யும்படிக் கேட்டானும். அவன் மனைவி யும் சப்த ரிஷிகளில் ஆறு பேர்களின் மனைவியரைப் போலவே உருவமெடுத்து தன் கணவனின் காமத்தைத் தடுத்தாளாம். ஆனுல் ஏழாவது முனிவரின் மனைவியான அருந்ததியைப் போல மட்டும் உருவம் எடுக்க முடிய வில்லை என்றும், அதற்குக் காரணம். அருந்ததி ஆதி திராவிடப் பெண்மணி என்றும் புராணம் மேலும் தொடரு கிறது.

பிறர் மனைவியைக் காமுறும் தீயகுணம் படைத்த அக் கினியையா நம்முடைய திருமணக் காலங்களிலே சாட் சிக்கு அழைப்பது? கூடாது கூடவே கூடாது. ஆகவே தான் அக்கினி வளர்ப்பதில்லை.

இப்படித்தானே மற்ற கடவுள்களும் இருக்கிருர்கள்? புராணங்கள் சொல்லுகிறபடியே பார்த்தாலும், எந்தக் கட வுளும் யோக்கியமான கடவுளாகத் தெரியவில்லையே! பிரமன் திலோத்தமையைக் கெடுத்தான். சிவன் தாருகா வனத்து ரிஷிபத்தினிகளைக் காமுற்ருன். இந்திரன் அகலி கையையும், சந்திரன் குரு பத்தினி தாரையையும், மகா

விஷ்ணு சலந்திரன் மனைவியையும் கெடுத்தனர். இப்படித் தான் புராணங்கள் சொல்கின்றன.

இப்படிப்பட்ட ஒழுக்கக்கேடான கடவுளையா நாம் நமது விழாவிற்கு வழிகாட்டியாகக் கொள்வது?

காமக்குரோதம் மிகுந்த அக்கினி பகவானை அழைத்து அவனைச் சாட்சியாக வைத்துத் திருமணம் நடத்துவது அறிவுக்குப் பொருத்தமானதுதானா? அதைப்போலவே கண்மூடித்தனமாக நடந்து, காமக் களியாட்டங்களில் ஈடுபட்ட மற்றக் கடவுள்களையும் திருமணம் காலங்களிலே எண்ணுவதும் கூடாதே!

இவைகளை நாம் கூறும்போது சில ஆத்திக நண்பர்களுக்குக் கோபம் ஏற்படலாம்! கோபம் ஏற்பட்டு என்ன பலன்? நாங்களாகக் கதைகட்டி எதையும் கூறவில்லையே?

நாங்கள் எடுத்துக்காட்டி விளக்குவதும் ஆபாசங்கள் என்று கூறிக் கண்டிக்கும் ஆண்டவன் திருவிளையாடல்களும் எங்கள் கற்பனைகள் அல்லவே அல்ல! அவைகள் அத்தனையும் பக்தர்கள் பக்தியோடு படித்துப் பாராயணம் செய்து வரும் புராணங்களில் காணப்படுபவைகள் தான் என்பதை ஆத்தீக நண்பர்கள் உணர்ந்து திருந்த வேண்டுகிறேன். கடவுள் என்றும், மதம் என்றும், சாஸ்திர சடங்குகள் என்றும், மக்கள் தங்கள் காலத்தையும், கருத்தையும், நேரத்தையும், நினைப்பையும், உழைப்பையும், ஊக்கத்தையும், பணத்தையும், பகுத்தறிவையும் சிறிதும் பயன் படுத்தாது பாழாக்குவதைத் தடுத்தாகவேண்டும்!

பழைய காலத்தைப்போல நாம் நடக்க முடியாது. நடக்கத் தேவையுமில்லை. புதிய கருத்துக்களைத் தைரியத்

துடன் கவனித்து ஏற்று புதுவாழ்வு நடத்த நம்மை நாம் தயாராக்கிக்கொள்ள வேண்டும்.

மக்களைப் பழமைப் பிடியிலிருந்து மீட்டு, பகுத்தறிவுப் பாதையில் நடத்திச் செல்ல திராவிட முன்னேற்றக்கழகம் பெரிதும் பாடுபட்டு வருகின்றது.

பழமைக் கருத்துக்களையும், மதமுட நம்பிக்கைகளையும் அர்த்தமற்ற சடங்குகளையும், கண்மூடி வழக்கங்களையும் மக்கள் அடியோடு விட்டொழிக்க வேண்டுமென்று தி. மு. க. பல காலமாகவே வற்புறுத்தி வருகின்றது.

சுயமரியாதைப் பிரச்சாரத்தின், சமுதாய சீர்திருத்த முன்னேற்றமுந்தான் தி. மு. கழகத்தின் அடிப்படை வேலையாகக் கருதப்பட்டு வருகின்றது.

ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற கருத்துடன் வாழ்ந்த திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் நாம் என்பதை மக்கள் உணர்ந்து, இனத்தால் ஒன்று பட்டு வாழும் முறையை மக்களிடையே எங்கள் கழகம் ஏற்படுத்தி வருகின்றது.

நாம் திராவிடர், நமது இனம் திராவிடம், நமது கலை கலாச்சாரம் இவையிவை என்பதை மக்கள் நன்குக உணர வேண்டும். அப்போதுதான் பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் மனபான்மை வேற்ருேடு அழியும். மத முட நம்பிக்கைகள் இருந்த இடம் தெரியாமல் மறையும், கருத்தற்ற கண்மூடிப் பழக்க வழக்கங்களும் மாய்ந்தொழியும்.

ஆகவே நாமெல்லாம் திராவிடர், நமது இனம் திராவிடம் என்ற உணர்ச்சி மக்களிடையே ஏற்பட்டுப் பெருகி திராவிட சமுதாயம் நல்வாழ்வு வாழ வழி வகுப்போம்..

நாம் எந்தெந்தக் கொள்கைகளை வலியுறுத்திப் பாடு பட்டு வருகிறோமோ அவைகளில் சில இன்று சட்டமாகி வருகின்றன என்று குறிப்பிட்டேன். இதனால் நமது பணி நாட்டு மக்களுக்கு மிகவும் தேவையானது. அவசியமானது என்பதை நாம் அறிகிறோம். நமது எண்ணம் ஈடேறிய தைக் கண்டு மகிழ்கிறோம்.

இந்த மகிழ்ச்சியால் பெறும் ஊக்கத்தையும் உணர்ச்சி யையும் சமுதாயத்துறையில் உள்ள சீர்கேடுகளைப் போக்க வும் மக்களிடையே மேலும் தீவிரமான முறையில் அறிவுப் பணி புரியவும் பயன்படுத்தி பாடுபட வேண்டும்.

சமுதாயம் சீர் திருந்த இப்படிப்பட்ட சீர் திருத்தத் திரு மணங்கள் நல்லதொரு அடிப்படை என்று குறிப்பிட்டேன்.

எந்தக் காரணங்களைக் கொண்டு பார்த்தாலும் நாம் இந்த சீர் திருத்த திருமணம் நடத்தும் முறை தவறு என்று எடுத்துக்காட்டவோ அல்லது பழைய முறைதான் சரி என்று வாதிடவோ ஒருவராலும் முடியாது.

இந்நிலையில் நாம் அறிவுத்துறையில் முன்னேறவும் சமுதாயம் சீர்திருந்தவும் அடிப்படையான இத்தகைய சீர் திருத்தத் திருமணங்களைத் தொடர்ந்து செய்துவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்று நடை பெற்ற சீர்திருத்தத் திருமண மணமக்களான தோழர் கிருஷ்ணன் அவர்களையும். தோழியர் துளசிபாய் அம்மையாரையும் மீண்டும் பாராட்டுகிறேன். இதற்கு துணையாக இருந்து பணியாற்றிய மற்ற பெரியோர்களை யும். உறவினர்களையும் நண்பர்களையும். கழகத் தோழர் களையும் பாராட்டுவதோடு என்னை இத்திருமணத்தில் கலந்துகொள்ளும் வாய்ப்பளித்தமைக்கு மீண்டும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜோதி

[மதுரை மன்னன் திருமலையின் மாய மரணம் பற்றிய குறிப்புக்களைக்கொண்டு சித்தரிக்கப்படும் ஓவியம் இது. இட்டுக்கட்டியதோ என்று ஐயப்படுவோருக்கு. எம். எஸ். சுப்ரமணிய ஐயர் தீட்டிய 'கன்னியர் வீரம்' என்ற சிறு நூலில் பட்டர் புதல்வி என்னும் சிறுகதையைப் பார்க்கும் படி கேட்டுக்கொள்கிறோம்!]

(சுந்தரவல்லி)

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் பிரதம பட்டாச்சாரி யின் திருமகள் நான். பெயர் சுந்தரவல்லி. இளமங்கை—எழில்மிக்கவள் — பூங்கொடி — ஊர் புகழ்கிறது என்னை. இதோ என் எதிரில் இருப்பது விஷகோப்பை, தங்கக் கோப்பை மன்னன் முன்பு தந்த பரிசு இது—அப்பாவுக்கு! எனக்கும் பரிசு தந்திருக்கிறான். விஷம்!

"குழந்தை விக்ரஹம் போலிருக்கிறது! பாப்பா!! வாம்மா, வா! ஏன் பயம்? ஓடிவா, ஓடிவா! இதோபார், உனக்குத்தான் மல்லிகை—வா! நான் சிறுமி, பட்டாச்சாரி

மகள் – அவர் –! நடாளும் மன்னன், அவருடைய அன்பு மொழி எனக்குத்தேனுக இனித்தது. அப்பா பூரித்துப் போவார். என்னைப்பிடித்திழுத்துக்கொண்டுபோய் மன்னன் முன் நிறுத்துவார். அவர் என் முகவாய்க் கட்டையைப் பிடித்துத் தூக்குவார். கன்னத்தைக் கிள்ளுவார் துவள் வேன். தூக்கி உட்காரவைத்துக்கொள்வார். மடியிலே! ஊரார் சுந்தரவல்லி மஹா அதிர்ஷ்டக்காரி! மகாராஜா வுக்கு அவள்மீது உயிர் – என்பார்கள். பலநாள் எனக்கு பழமும் பட்சணமும், மல்லியும், முல்லையும் கொண்டுவந்து தருவார் ராஜ காரியங்கள் ஏராளம் என்ருலும், என்னைப் பார்க்கவும். எப்படியோ அவருக்கு நேரம் கிடைத்தது. சிறுமிதானே நான் – எனக்கு ஒரே பெருமை! என்னைப் போன்ற சிறுமிகளைப் பார்க்கும்போது பெருமையாகச் சொல்வேன். உங்க ஆத்துக்கு ராஜா வர்ராரோ? எங்காத் துக்கு ராஜா வர்ரார் – என்னேடு வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருப்பார். என்மேலே பிராணன் மஹாராஜாவுக்கு– என்றெல்லாம் சிறுமிகளே குறும்புக்காரர்கள் கேலி பேசும் –சுந்தரியோட கண் இருக்கே. அது ராஜாவை மயக்கி விட்டிருக்கும் என்று ஒருத்தி சொல்வாள். கோடி ஆத்து கோமளம், "சுந்தரி சிரிக்கிறப்போ கன்னத்தில் குழிவிழ றது பாரடி" என்பாள். "சுந்தரியோட கலியாணத்துக்கு ராஜா நிறைய சன்மானம் செய்வார்" என்று எல்லோரும் பேசிக்கொண்டனர்......!

இந்தத் தென்றலால் நான் வளர்க்கப்பட்டேன்–பருவ மங்கையுமானேன்! மன்னன் எப்போதும் போலே வந்து கொண்டிந்தார்—சுந்தரி—சுந்தரி' என்று கனிவுடன் கூப் பிடுவார். நான் நமஸ்காரம் செய்துவிட்டு, உள்ளே போய் விடுவேன் — அப்பாவும் அவரும் பேசுவார்கள் — நான் வீட்டு வேலைகளைச் செய்துகொண்டே இருப்பேன், சிறுமி

யாக இருந்தபோது இருந்தபடி இப்போது முடியுமா?—அடே அப்பா, அப்போது வேடிக்கைதானே! அதை எண்ணிக்கொள்வேன் புன்சிரிப்புடன். போகும்போது ஒரு முறை நமஸ்காரம் செய்வேன், அவர் மட்டும் அடிக்கடி சுந்தரி, சுந்தரி என்று கூப்பிட்டபடி இருப்பார்...!

அப்பாவிடம் எனக்கு பிரமாதமான கோபம் பிறந்தது அரசர் மீது குற்றம் கண்டுபிடிக்கத் தொடங்கினர் யாரா ரோ அப்பாவின் மனதைக் கெடுத்தனர்—இருவரும் பிறகு பலருடைய மனதைக் கெடுக்கலானார்கள். மன்னர் எங்கள் நாட்டுக்கு வந்து கிறிஸ்தவப் பாதிரிகளுடன் கூடிக்குலவு கிருர் என்பதுதான் புகார். இதிலே என்ன தவறோ தெரிய வில்லை! கிறிஸ்தவப் பாதிரிகள் என்ருல் என்ன? அவர் களும் மனிதர்கள் தானே? ஏன் அப்பாவுக்கும் மற்றும் சிலருக்கும் அருவறுப்பு—நான் கெட்டே விட்டேன் அப்பா வை—அவர் 'பைத்தியம் உனக்கென்னடி தெரியும். நம்ம புராதன மதத்துக்கு வைரிகள் இந்தக் கிறிஸ்தவர் நம்ம மதத்திலே உள்ளவாளை ஏழை எளியவர்களையும். விவரம் அறியாதவர்களையும் பிடித்து. கிறிஸ்தவ மதத்திலே சேர்த்துக்கொள்ளுகிருர். இந்த அக்கிரமத்தை இராஜன் அனுமதிக்கிருன் இவனே கிறிஸ்தவனுகிவிடுவானோன்னு நேக்கு பயமாயிருக்கு—ஊர் முழுவதும் இதைப்போலத் தான் பேசிக்கொள்ரு''—என்று சொன்னுர். இவ்வளவு தானு! தங்கக்குன்றப்பா மகாராஜா! அவரைச் சந்தேகிப் பது மகாதோஷம் என்று நான் வாதாடி வந்தேன்.

ஒரு நாள் அப்பா வெளியே போயிருந்தார்—அவர் வந்தார். நமஸ்காரம் செய்யவேண்டுமே—ஊராளும் ராஜா வந்திருக்கிருர். உட்காருங்கள் என்று நான் சொல்லி உட்கார்ந்தார். நான் அவர் கண்களில் பட்டும் படாதது மாக நின்றுகொண்டிருந்தேன்...!

"அப்பா இல்லையோ?—சரி வருவார்; சீக்கிரம்" என்று சொல்லியபடி. மன்னர் நான் இருந்த பக்கம் கவனித்தார்—என்னையுமறியாமல், கூச்சம்—தலைகுனிந்தபடி நின்றேன். "ஏன் கூச்சமோ? சிறு பெண்ணாக இருக்கும்போது எவ்வளவு விளையாடுவாய்? மான்குட்டிபோல, நான் என்ன புது மனிதனா? என்னைக்கண்டு, ஏன் இவ்வளவு வெட்கம்?" என்று கேட்டார்.

நியாயந்தான்!—ஆனால் இந்தப் பாழாப்போன வெட்கம் உன்னைப் பிடித்து உலுக்கிவிட்டது. 'கொஞ்சம் ஜலம்' கேட்டார் ஓடினேன். உள்ளே வெள்ளிச் செம்பிலே வெட்டிவேர் தண்ணீர் நிரப்பி, ஊஞ்சலருகே கொண்டு சென்றேன்—அதை அவர் வாங்கும்போது, அவர் கரம், என் கரத்தின் மீது படுவது போலிருந்தது—ஊஞ்சலின் மீது—செம்பை வைத்து விட்டு, விலகி நின்றேன். புன்னகையுடன் அவர் "அடே அப்பா எவ்வளவு ஜாக்கிரதை! நான் என்ன பூதமா, பிசாசா? என்றார். நான் என்ன பதில் சொல்வது?—புன்னகை புரிந்தேன். அப்பா வந்தார் எனக்கு அப்போது தான் மன அதிர்ச்சி மறைந்தது—பிறகு அவர்கள் பேசிக்கொண்டிருந்தனர்......!

அப்பா இல்லாத வேளையில் இதுபோல அவர் வருகிற போதெல்லாம் எனக்குப் பெரிய மன நெருக்கடியாகவே இருந்து வந்தது. வேண்டுமென்றே அப்பா இல்லாத நேரமாகப் பார்த்து வருகிறாரோ. தெரியவில்லையே, என்று சந்தேகம் கிளம்பிற்று—இலேசாகத் திகிலும் பிறந்தது. ஏனென்றால் மகா உத்தமர். தர்மிஷ்டர் என்றாலும், மன்னருக்கும் மாதர்களிடத்தில் மையல் அதிகம் என அப்பாவும் மற்றவர்களும் பேசிக்கொண்டது எனக்குத்தெரியும். முன்னூறு அழகிகள் இருக்கிறார்கள். அந்தப்புரத்தில் என்று சொன்னார்கள். நானோ பருவ மங்கை! அவரோ அடிக்கடி

நான் தனியாக இருக்கும்போது வருகிறார். அன்னியராக இருந்தால் அப்பா இல்லை, என்று ஒரே வார்த்தையில் அனுப்பிவிடுவேன். அரசர்! குழந்தைப் பருவ முதல் விளையாடியப் பழக்கம்! எப்படி அலட்சியப்படுத்த முடியும்? ஆனால்...! என் அடி வயிற்றிலே அடிக்கடி இந்த 'ஆனால்' கிளம்பும். ஆனால் மறுகணம் சேச்சே! என் அப்பாவுக்குச் சமாதானம்—என்ற எண்ணம் தோன்றி, சாந்தி உண்டாகும்!

என்ன அவசரமாகத்தான் இருக்கட்டும். இப்படி வெள்ளிச் செம்பை நானாகத் தருவதற்குள் அவர் என் கரத்தைத் தொடுவதா—நான் கொஞ்சம் முகத்தைச் சுழித்துக்கொண்டேன். அவர் சேச்சே! இதென்ன இவ்வளவு பயம்! பைத்தியம்! உன் அப்பா. ஜெபதபாதிகளை முடித்துக்கொண்டு வீடு வர வெகு நேரமாகும் என்றார்"—என் மனம் பதறிவிட்டது விலகினேன்—விடவில்லை—கரத்தை உதறித் தள்ளினேன். கருத்து புரிந்துவிட்டது. அவரோ...என்ன சொல்வேன்—அணைத்துக்கொண்டார்—பிறகு—கூவுவேன் என்று மிரட்டினேன். கோமளமே என்று கொஞ்சலானார்—இதென்ன அக்ரமம் என்றேன். அவர் காதல் பேசலானார். என்மீது கோபித்து என்ன பயன் கண்ணே! தேவரும் மூவரும் கூட மதிமயங்கக்கூடிய அழகை உனக்குத் தந்த அவன் மீது கோபித்துக்கொள். அல்லது உன் அழகைக்காண எனக்குக் கண்ணளித்த கடவுளின் மீது கோபித்துக்கொள். நான் மன்னன். ஆனால் மனிதன்! முனிவனுமல்ல! மோகனாங்கி!—என்றார்—அரசர் பேசும் பாஷையா இது—என் உடல் துடித்தது—நான் துணிந்து அவரைக் கண்டித்தாகவேண்டும்—விலகினேன்—விழியிலே நீர் தளும்பிற்று...!

'இந்த அக்ரமம் ஆகாது—அரசரின் புத்தி இப்படி அழியக்கூடாது' என்று சொன்னேன் கோபமாகத்தான்.

ஆனால் உரத்த குரலில் அல்ல—வெளியே தெரியக்கூடாதே பதில் பேச வாயில்லை — ஆனால்...என்னை விடவில்லை. உன்னிடம் பிச்சை...'' என்று கெஞ்சினார்...இந்தத் துர்ப் பாக்கியனைச் சாகடிக்காதே என்றார் சாரமாக எனக்கும் கோபம் ஏசினேன். என்மீது என்ன கோபம்—தவறுசுந்தரி கருப்பு வில்லோன் என்னைக்கொல்கிறான்' என்று கூறினார் ஆத்திரம் எனக்கு, கரும்பு வில்லோன் இப்படித்தான் கதி யற்ற கன்னியைக் கற்பழிக்கச் சொல்கிறானா! கபடத்துக்கு கவசமிடாதீர் காவலரே! விநாசத்தைச் தேடிக்கொள்ளா தீர் அழிந்து போவீர்—நிச்சயமாக—சத்தியமாக'' என்று கூறினேன்- அழுதபடி பயம் போய்விட்டது கோபம் அதி கரித்தது. ஓடிவந்து என்னைப் பிடித்திழுத்தபடி அழிவேனா நானா? உன்னைப் பெறாவிட்டால் தான் பேரழகி நான் அழி வேன்—பெற்றால் பெருவாழ்வு. புது வாழ்வு. இருவருக்கும் என்றார். வெறுப்பு எனக்கு—அவர் பிடியிலிருந்து விடுபடக் கூட முயற்சிக்கவில்லை — வாழ்வு! எனக்கு கற்பிழந்த பிறகு என்று சொன்னேன்! என் கூந்தலைக் கோதியபடி யே அவர் "கற்பு! யார் வேண்டாமென்பர் அந்தப்பூஷணத் தை—என்னைக் கணவனாகக்கொள்— பதி சொல் தவறாத உத்தமியாக வாழ உன்னை அழைக்கிறேன். வெறும் உல் லாசத்துக்கு அல்ல'' என்றார். ஒரு கணம் திகைத்துப் போனேன். என்ன சொல்வது என்று தெரியாமல்! கெடா தாமே! திருமணம் செய்து கொள்ளச் சொல்கிறாரே என்று யோசித்தேன், வார்த்தைகள் வெளிவரத் தாமதமாயின— அவருடைய சேட்டைகளோ துரிதமாயின.

"அரசே, குலம் அறியாது பேசுகிறீர்'' என்றேன். அணைப்பிலிருந்து என்னை விடுவித்துக்கொண்டபடி. அழகு அறிந்து நாடுகிறேன் சுந்தரி!—அவ்வளவுதான் எனக்குத் தெரியும் பேச என்றார். அவருடைய போக்கை மேலும் பேச

எண்ணி, அழகு கண்டு அகலிகையிடம் மோகம் கொண்ட இந்திரன் என்னகதியானுன், தெரியுமே உமக்கு, என்றேன். அவர் என் வாயை அடைக்கும் விதமாக உனக்கு ஒரு கௌதமன் இல்லையே சுந்தரி. அதை மறந்து பேசுகிருயே என்ருர். ஆமாம் நான் கன்னி, அவரோ கலியாணம் செய்து கொள்ள அழைக்கிருர். ஒரு வேளை என்னை மனைவியாகக் கொள்ளத்தான் விரும்புகிருரோ, என்றெல்லாம் எண்ணம் பிறந்தது. ஆனுல் இதை அவர் அப்பாவிடமல்லவா கூற வேண்டும். இப்படி என்னைத் தனியாகச் சந்தித்தா...முறை வேண்டாமா எதற்கும். கோபம் குறைந்தது, பரிதாபமாக இருந்தது. எனவே, நான் என் தந்தை ஆதீனம்; என்று கூறி நிலைமையை விளக்கினேன். அவர் கொஞ்சும் மொழியில் நீ உன் தந்தை ஆதீனம். அவரோ சாஸ்திர ஆதீனம். சாஸ்திரமோ பிரம்மகுல மங்கையை க்ஷத்திரியன் மணம் செய்துகொள்ள இடந்தராது-என்ன செய்வது என்று கேட்டார். எனக்கு அவருடைய வாதம்கூட சிறிது மகிழ்ச்சி தந்தது. ஆனுல் அவருடைய செய்கை—எனக்குக் கோப மூட்டியது. கடுமையாகவே "என்ன செய்து — மனதை அடக்குவது—தர்மத்துக்குக் கட்டுப்படுவது—பாபதோஷத் துக்குப் பயந்து. நடந்துகொள்வது" என்று சொன்னேன் நான் சொல்லச் சொல்ல அவர் என்னை நெருங்கி ஏட்டுச் சுரை எல்லாம் ஏட்டுச்சுரையடி எழிலரசி என்று கூறிவிட்டு கட்டிப்பிடித்தார்—காட்டு முறை இது—வேண்டாம் என்று கூறியபடிவிலகினேன்-சுவற்றில்கூடமோதிக்கொண்டேன் மேலே போக இடமில்லை. அவர் விடவும் இல்லை—ஐயோ என்று அலறினேன். ஆஹா என்று புகழ்ந்தார்—இதழை இதழ் தொட்டது, துடித்தேன் — அடபாவி, என்று சபித் தேன். என் அன்பே என்று சரசமொழி பேசிவிட்டு,........

அக்ரமம் என்று கூறியபடி என் பலம் கொண்டமட்டும் பிடித்துத் தள்ளினேன். ஆனால் நான் தான் கால் இடறிக் கீழே விழுந்தேன் – அழிந்தேன். நான் அழுத கண்ணைத் துடைத்தபடி பாவி, பாதகா என்று ஏசினேன். அமிர்தம் தேவாமிர்தம் - என்று அந்தப் பாபி பஜனை பாடிக்கொண்டிருந்தான். உள்ளே சென்று. படுக்கையில் புரண்டு புரண்டு அழுதேன். சுந்தரீ–சுந்தரீ–சுந்தரீ- என்று வேறுவிதமாகக் கூறினார்- காலால் எட்டி உதைத்தேன் கதவை, உரத்த குரலில் சிரித்துவிட்டு, வெளியே போய்விட்டார் இரத்தம் குடித்த நரிபோல நான் நானா? நாசப்படுகுழியிலே தள்ளப்பட்ட நான் என்ன செய்வது- நான் யார் இனி? மதுரை மீனாட்சி அம்மன் கோவில் பிரதம பட்டாச்சாரியின் மகள் சுந்தரவல்லி மன்னனின் காமப் பசிக்கு பலியாக்கப்பட்டு விட்ட பாபியானாள். என்ன செய்வது. ராஜ சர்ப்பம் தீண்டி விட்டது. துடைக்க முடியாத கறை படிந்து விட்டது. அரசன் சாமான்யன் – சகல கலா வல்லவன் சாமான்யன். நல்லவன், கெட்டவன் - என்று ஆடவர்களை எப்படி வேண்டுமானாலும், நிலையையும் குணத்தையும் கொண்டு பிரித்துக்காட்டலாம். ஆனால் பெண்கள் விஷயத்திலோ ஆடவர்கள்கொள்ளும் போக்கைக் கவனித்தாலோ சேச்சே, எல்லா ஆடவரும் ஒரே தரமாகத்தான் இருக்கிறார்கள். இந்த அரசன்; நான் பந்து ஆடுவதைக் கண்டு மகிழ்ந்தவன் தான். "பாப்பா. பாப்பா" என்று கூப்பிட்டவன் தான். இப்போது காமப்பசி பிடித்து என்னை நாசம் செய்துவிட்டான்- நிலமையை அறிந்து இனி என் கதி...!

மறுமுறை அந்த மாபாவியின் முகத்தை ஏறெடுத்தும் பார்க்கலாகாது என்று தீர்மானித்தேன்! அப்பா வருவதற்குள் என் அலங்கோலமான நிலையை திருத்திக் கொண்டேன்– தலைவலி அதனால்தான், முகத்திலே மாறுதல் என்று தந்திரம் பேசினேன். அப்பா மீனாட்சி கோயிலிலே வந்திருந்த பக்தர்களின் பெருமையைப்பற்றி பேசிக் கொண்டே பிரசாத வகைகளை வைத்தார் — அம்பிகே! என்னை இந்த கதிக்கு உள்ளாக்கினையே — என்று ஏங்கினேன். அப்பா. வேதாந்த விவகாரத்தில் ஈடுபட்டார் — வேதனையில் நான் மூழ்கிக்கிடந்தேன். வேட்டைக்காரன்

அரண்மனையில் 'தர்பார்' நடத்தியிருப்பான். ஊரார்? அவர்களுக்கென்ன......!

மறுபடியும் புலி வந்தது. நான் என் கோபத்தையும் வெறுப்பையும் வெளிப்படையாகக் காட்டினால், அப்பா இல்லாத சமயங்களிலேயோ, அப்பா அரசனாகவா இருந்தான். சித்ரவதை செய்தான். செந்தேனே என்று அவன் கொஞ்சுவது கருந்தேள் கொட்டுவது போலிருந்தது. சரி, இனி நிலைமையை வேறு விதமாகவாகிலும் சரிப்படுத்திக்கொண்டாக வேண்டும் என்று எண்ணி, திருமணப் பேச்சைத் துவக்கினேன்– அதற்குத் தடை ஏது என்றான் - அந்த ஏற்பாட்டை துரிதப்படுத்தச் சொன்னேன். அவன் அதற்காகவே அச்சாரம்' பெற்ற வண்ணம் இருந்த நான் உரிமையோடு பெற நான் என்ன செய்வேன். இனிப்பு பண்டம் கசக்கலாயிற்று. பால் புளித்தது. பசி குறைந்தது. பாதகன் எனக்குப்பரிசு தந்துவிட்டான். நான் கருவுற்றேன்—அவன் சொல்லத்தான் அதையும் அறிந்து கொண்டேன். பயத்தால் முகம் வெளுத்தது. அப்பா இதைக் கண்டுகொண்டர். "ஒன்றுமில்லை" என்ற பதில் எத்தனை நாளைக்குப் பலன் அளிக்கும் உண்மையைக்கூற வேண்டியதாயிற்று.

"சுந்தரி! ஏன் முகம் சோபிதமிழந்து கிடக்கிறது? கசங்கிய தாமரை போலாகி இருக்க என்னம்மா காரணம்?

"ஒன்றுமில்லையப்பா"

"என்னம்மா ஒன்றுமில்லை? தேகம் காந்தி மயங்கிக் காட்டுகிறது. விழி சதா ஏதோ மிரட்சி தூங்குவதில்லை சரியா. மனதிலே உனக்கென்னம்மா விசாரம்"

"அப்பா என்னை வேதனைக்காளக்காதீர்கள்..."

"பைத்தியமே! காரணம் கூறாமல் கலங்கி நிற்கிறாயே ...கண்களிலே...நீர்...என்னம்மா!"

"அப்பா நான் ஒரு பாபி"!

"பாபியா? பைத்தியமே! பித்தமா உனக்கு?"

"பித்தனின் காமப் பசிக்கு இரையான பேதையப்பா. நான் படு—குழியில் தள்ளப்பட்டேன்—பாவியால்!"

"காமப்பசி பலி! படுகுழி! என்னம்மா, பிதற்றுகிருய்!"

"ஐயோ, அப்பா, நான் எப்படிக்கூறுவேன்...என்னை —மன்னன் எவ்வளவோ தடுத்தும் பலாத்காரமாக"

"சிவ. சிவ! என்ன பாபம் என்ன கருமம் இது! திருமலையா இத்தீய செயல் செய்தான்! அழியாத அபகீர்த்தியை உண்டாக்கி விட்டான்...என் குலக்கொழுந்தைக் கெடுத்தானு மகளைக்கெடுத்தானு மாபாவி—அடே பாதகா! வஞ்சகா என் குடும்பத்தைக் கெடுத்தாயே! மகளே பேதைப் பெண்ணே! எப்படி இடங்கொத்தாய்; உன் கையில் ஒரு கத்தி கிடைக்கவில்லையா? அவனைக் கொல்ல உன்னுல் முடியாவிட்டாலும் நீ செத்திருக்கலாமே! என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால்—என் குலப்பெருமை குடும்ப பெருமை எல்லாம் போயிற்று. எப்படி தேவி இந்தத்தீய காரியம் நடைபெற அனுமதித்தாய்? உன்னைத் தொழுது வரும் எனக்கா இந்த அபகீர்த்தி. என் மகள்; விபச்சாரி—கற்பிழந்தவள்..."

"அப்பா அந்தக் கபடன்; என்னைக்கலியாணம் செய்து கொள்ளவும் சம்மதம் என்று பேசுகிருன்"

"உரக்கப் பேசாதடி" புத்தி யுக்தியற்ற பேதையே! கலியாணம்—ஜாதி; ஆசாரம்—சாஸ்திரம்-எல்லாம் என்ன ஆவது?"

"இப்போ அதெல்லாம் நாசமாகித்தான் போயிற்று"

"திருமலை! உன்னைப்பழிவாங்கா திருக்கப்போவதில்லை! —நாடாளும் உன்னை நான் நாசமாக்காவிட்டால் என் பெயர் சந்திரசேகர பட்டர் அல்ல. மமதைகொண்டு வேதியர் குலம் என்றும் பாராமல்; உன் நண்பன் என்றும் யோசிக்காமல்; தேவி மீனுட்சி கோயில் திருப்பணி செய்யும்

பட்டர் என்பதையும் பார்க்காமல்; என் மகளைக்கொடுத்தாய். உன்னை நான் பழிவாங்கவண்ணம்; ஊண் உரக்கம் கொள்ளேன்—இது சத்தியம்—தேவிமீதாணை—உன்னைத் தொலைத்துவிட்டு மறுகாரியம் பார்க்கிறேன்.

தேவி கோயிலுக்கு வா. தெளிவற்ற பெண்ணே! ஆலயம் வா! பக்தர்களை அழைக்கிறேன். உன்னை மன்னன் கெடுத்த பாபக்கிருத்திய தீதை எடுத்துக்கூறி, பாபிக்கு என்ன தண்டனை என்று கேட்கிறேன். கற்பழிக்கும் காதகனையா, காவலனுகக்கொள்கிறீர்? என்று கேட்கிறேன்... கல்மனம் கொண்டவனும் கண்ணீர் விடாமலிருக்க முடியாதே கல்லால் அடித்துக்கொள்வர் "காவலனுக உள்ள காதகனை!".

"சொல்லடியை நாம் தாங்க வேண்டும்! ஊர்மக்கள் இழித்தும் பழித்தும் பேசுவாரே..."

"ஆமாம் அதைக்கேட்டுச் சகிக்க முடியாதே... ஆத்திர பட்டுப்பயன் இல்லை! ஆனல் என்அடிவயிற்றில்நெருப்பைக் கொட்டிய அக்கிரமக்காரனைச் சும்மா விடுவது இல்லை— ஆமாம் என்னம்மா, என் ஐயா, அப்பா ...என்ன"

"வலியா?"

"பாப மூட்டையைச் சுமக்கிறேன்".

"பரமேஸ்வரா! ஏனேடாப்பா இந்தச் சோதனை? நான் செய்த பாவம் என்னவோ தேவி! தேவி!

இதற்குமேல் தந்தையும் மகளும் என்ன பேசமுடியும்?

அவர் தலை தலையென்று அடித்துக்கொண்டு அழுதார் நான் என்ன கூறிச் சமாதானப்படுத்துவேன்?

நான் துணிந்துவிட்டேன்—இனி நான் வாழ முடியாதவள்—என் கற்பைக் காப்பாற்றிக்கொள்ள முடியாமல் போய்விட்டது. ஆனல், என் உயிரைப் போக்கிக்கொள்ள வா முடியாது.

மானம் போயிற்று. பறித்தவனே மன்னன். மணம் செய்துகொள். என்று வற்புறுத்தலாம். மக்களிடம் முறையிடலாம் அந்தப்புரத்தில் போய்ச் சேரலாம். ஆனால் அப்பாவோ சாஸ்திர விரோதம் என்றார். ஆகவே நான் இனி பிழைத்திருக்க முடியாது. செத்தாக வேண்டும். குடும்பத்துக்கு இழிவைத் தராதிருக்க வேண்டுமானால், சாகத்தான் வேண்டும்.

அப்பாவிடம் வாதாடினேன்—திருமணத்துக்கு மன்னன் எப்படியும் ஒப்புக்கொள்வாரப்பா. என்று கெஞ்சினேன்—அவர் வெந்த புண்ணிலே வேலைச்சொருகாதேடி என்று கொக்கரித்தார். பெண்ணின் வாழ்வு பெரிதா. என்று கேட்டுத்துடித்தேன். நான் அழுகிய பழம். அப்பாவுக்கு அந்த நாற்றம் குறையும்போது நான் 'வாதாடுவது' வேதனையாகத்தானே இருக்கும் ஆகவே சாவு தவிர வேறு மார்க்கம் இல்லை. ஆமாம் நான் சாகத்தான் வேண்டும். விஷம்! சாவு! சாவு! வேறு வழியில்லை.

(சந்திரசேகர பட்டர்)

என் மகள் மாண்டுபோனாள்—அந்த இரகசியமும் அவளோடு. மண்ணோடு மண்ணாகப்புதைந்து போய்விட்டது.

ஆனால் என் மனம்! நான் கோயில் அர்ச்சகன். என் மூலம்தான் எண்ணற்றவர்கள் தேவியின் அருளைப்பெறுகிறார்கள்.

தேவி எனக்கு அளித்தது?...ஊரெல்லம் தான் புகழ்ந்தது...? சுந்தரியின் அழகை! மன்னன் காட்டிய பிரிவு. பலருக்கு பொறாமைத்தீயைக் கூட மூட்டிவிட்டது. அந்தப் பாவி என் மகளைக்கொன்றான். மாரடைப்பு—ஊராருக்குக் கூறினேன். ஆனல் என் உள்ளம் அறியுமே! விஷமருந்திச் செத்தாள் என் மகள்! பாதகன் என்ன காரியம் செய்துவிட்டான்? சபலம், ஆமாம் நடந்தது நடந்துவிட்டது, என்னையுமறியாமல் நேரிட்டுவிட்டது. அவள் அழகு என் அறிவை அழித்துவிட்டது. அந்தணரே! இனி அதுபற்றிப் பேசிப் பயனில்லை. நிலையையை, நெஞ்சிலே கபடமின்றிக் கூறி

விட்டேன், நீர் மதியூகி! வேறென்ன சொல்ல—அவ்வளவு தான்—இப்படிப் பேசினன். என் மகளை இரைகொண்ட காமாந்தகாரன்.

அவளைத் திருமணம் செய்து கொள்வானும், கைவிட மாட்டானும்—வேறு ஏதாகிலும் ஏற்பாடுசெய்ய வேண்டு மென்ருலும் தயாராம்! இந்த மண்டலத்திலேயும், எந்த மண்டலத்திலேயும், எனக்குப் பெரும் பழியைத் தேடிக் கொள்வதா! எப்படி சம்மதிக்க முடியும் திருமணத்துக்கு?

சுந்தரியும் திருமணம், திருமணம் என்று வாதாடினுள் அவளுக்கு என்ன தெரியும் சாஸ்திர சம்பிரதாய மகிமையும் மேன்மையும். வேதியர் குலம் முழுவதும் என்னை வெறுக் கும் கண்டிக்கும். சசிக்கும். இதை எண்ணித்தானே திரு மணம் கூடாது என்றேன். ஒருவேளை, சுந்தரியைத் திரு செய்துகொண்டு சுகமான வாழ்வளித்து இருக்கக்கூடும் மன்னன். தங்கப்பல்லக்கிலே செல்லும் அந்தஸ்து கிடைத் திருக்கும் மகளுக்கு.

ஆனல் நான்? சண்டாளன் என்றல்லவா தள்ளப்பட் டிருப்பேன். கேவலமாகத்தானே கருதியிருப்பர். இதற்கா கத்தான். மன்னனை சதாசர்வகாலம் வீட்டிற்குவரவழைத்த படி இருந்தான் போலும் என்று இழிமொழி பேசுவர் ஏற்க னவே. ஏதோ ஓர் விதமான வதந்தி பரவித்தான் வம்பளந் தார்கள் விஷமக்காரர்கள். அன்று கைலாசநாத பட்டரும் கனகசபேச பட்டரும் பேசியது ஒரு தினுசாக இருந்தது— ஏன் அவ்விதம் பேசினர்கள் என்பது பிறகல்லவா புரிந்தது பித்துக்குளிகள் ஏதோ பிதற்றுகிருர்கள் என்று நானே ஏமாளி எண்ணிக்கொண்டிருந்தேன். அப்போது...

"சௌக்கியந்தானே, ஸ்வாமிகளே"

"இருக்கிறேன்—ஏன்..."

"கேட்டேன் ஸ்வாமி, லோகாசாரப்படி......"

"சந்தோஷம்...வரட்டுமா"

“ஆஹா! நான் தடைசெய்வதை க்ஷமிக்கணும்-ராஜா இன்னேரம் தங்கள் தரிசனத்துக்காக தவித்துக்கொண்டிருப்பார்—போய்வாரும்”

“ஓய் நீர், பேசுகிறதை கவனிச்சா, ஏதோ என்ணை கேலி செய்கிறமாதிரியாகத் தோன்றுதேஎன்னவிஷயம்...”

உம்......

“ஓய் ஏன் பெருமூச்சு விடறேள்......”

‘பட்டாச்சாரியாருக்கு என்னங்காணும் குறை! ராஜன் அவர் வீட்டு வாசல்லே காத்திருக்கான் சதாகாலமும்.”

“வேதவேதாந்தத்தின் இரகசியத்தை அறிந்து கொள்ள வேண்டுமென்ற நோக்க......”

“ஆமாம் தேவரும் மூவரும் கூடத்தானே அந்த இரகசியத்துக்காக......”

“படாதபாடு பட்டிருந்தாளேன்ஞே......”

“அட ஏன் ஓய் சும்மா சுத்தி வளைச்சி பேசிண்டிருக்கேள்—வேதமாம்—வேதாந்தமாம்—இரகசியமாம்?”

“ஓய் நீர் ஏன் இவ்வளவு கோபிக்கிறீர்?”

ஒன்றுமில்லே ஸ்வாமிகளே-புறப்படும், புறப்படும்... ராஜா கோபிக்கப்போகிறுர்......

“கோபிக்கமாட்டார் ஓய்! பட்டாச்சாரியார் ஆத்துக்குப் போறபோது வழியிலே பேசிண்டிருந்தேன். தாமதமாச்சினு தெரிஞ்சா உமக்கு ராஜா சன்மானம் செய்வார் ஓய்! பிரதிதினமும், இந்தக்கைங்கரியத்தைச் செய்திண்டிரும்னு கூடச் சொல்வார்.”

“ஓய் என்ன இது—குறும்பு—போக்கிரித்தனம்-என்ன பேசறேள்—ஏதோ பூடமாக இருக்கு.”

ஒன்றுமில்லே ஸ்வாமி! இவன் ஒரு வயத்தெரிச்சல் பிடித்த ஆசாமியேன்ஞே?...உமக்கு ‘ராஜகிருபை’ கிடைத்திருப்பதாலே பொருமை கொண்டு பேசருன்.

"ராஜகிருபை, பட்டாச்சாரி ஸ்வாமிகளோட ஜாதகப் பலன் அல்ல. குமாரி சுந்தரியின் ஜாதகப்பலன் தந்ததாக்கும் இந்தக் கிருபை."

இப்படி எல்லாம் பேசினுளே, பட்டர் கூட்டம். அதை எல்லாம் எண்ணிக்கொண்டா என் மனம் படுகிற பாடு, அட அடா! சர்வேஸ்வரா மகளை இழந்தேன்—செல்லத்தை இழந்தேன். மானம் போகாதிருப்பதற்குக் காரணம், விஷயத்தை வெளியே பேசாமல் 'நம்மவா' இருப்பதாலேதான்–அவள் மாண்டு போனதும் ஒரு விதத்திலே நல்லதுதான்... இருந்தால் என்ன நிலை ஆகும். மீனுட்சிகோவில் பட்டருக்கு மகள் மாரடைப்பால் இறந்துவிட்டதாலே மனக் கவலை என்று பேசுகிருர்கள். அவனே நடந்தது நடந்து விட்டது! நாடாள்பவனல்லவா...தைரியமாக–ஆணவமாகக் கூறுகிருன். நடந்தது நடந்துவிட்டது இனி நடக்கவேண்டியது ஒன்றுமே இல்லை. என்பது அவன் நினைப்பு... யார் என்ன செய்யமுடியும் என்ற அகம்பாவம்...ஆமாம் நம்மால் என்ன செய்ய முடிந்தது, இதுவரையில் அவனைக் காணும் போது கடுங்கோபம் பிறக்கிறது ... பிறந்து பழிபாவத்திற்கு அஞ்சாத பாவி, கெம்பீரமாக உலாவுகிருன். ஊரில் கோலாகலமாக கொலு நடத்துகிருன்...அந்தப்புறத்திலே மாதர்களின் கூட்டம் இருப்பது கேட்டு, மக்கள் ஒரு விதமாகப் பேசுகிருர்கள் என்று சொன்னுல் அவன் வாய்க் கொழுப்பு — ஏன் பட்டரே! மகளுக்கு ராமாயணம் தெரியாதோ! அவருடைய அந்தஸ்துக்கு அவர் அறுபதினுயிரம் கொண்டார் — ஏதோ சக்தியாசாரம் நமக்கு என்று கூறக் கூடாதோ என்று கேலி பேசுகிருன் கோமதியாளன்.

சுந்தரி ஒரு ராஜகுமாரியா? அவள் சார்பாக ரதகஜ துரதபதாதிகள் கிளம்ப, அல்லது நான் படிக்கும் புண்ய கதைகளிளே கூறப்படுவதுபோல, சபிக்கக்கூடிய காலமா இது— கல்லாய்ப்போக, என்று சாபம் கொடுக்க ... என்ன செய்வது? எரியும் கொப்பரை போலுள்ள என் மனதுக்கு எப்போது தான் சாந்தி கிடைக்கும்...மன்னனை மாபாவி என்று கூற மனம் துடிக்கிறது. உண்மையைக் கூறவோ முடியவில்லை - மனம் தடுக்கிறது — பழிவாங்கியாக வேண்

டும் – ஆனால், எப்படி...? ஆமாம் லிங்கண்ணுவைத்தான் கருவியாக்கவேண்டும்.

லிங்கண்ணு! என் மகள் மாரடைப்பால் சாகவில்லை. மாபாவி செய்த அக்ரமத்தால் இறந்தாள், என்று சொன்னால் லிங்கண்ணுவுக்கு மன்னன்மீது கோபம் இருக்கிறது. நாம் அவனை ஏவி விட்டால், மன்னனை ஒழிக்கலாம். மன்னனை ஒழிக்கா முன்பு என் மனமோ சாந்தி அடையாது. கோயில் பட்டாச்சாரிக்கு மன்னன்மீது கோபம் பிறக்க விடக் கூடாது. என்ன செய்யலாம்? எதையாவது செய்தாக வேண்டும், பாம்பாகி அவனைப் பிடுங்க வேண்டும். எப்படி? திருமலையைத் தீர்த்துக்கட்டியாக வேண்டும்— காரணம் வெளியே தெரியக் கூடாது. லிங்கண்ணுவின் மனதை அறிந்து, தூபமிடவேண்டும். மன்னன் மதியிலி! என் மகளின் மரணத்துக்குப் பிறகு நான் பழைய சம்பவத்தை மறந்தே போனேன் என்று எண்ணிவிட்டான். என் மனதிலே மூண்ட தீ, அணையக்கூடாதா? நானே பக்குவமாகத்தான் நடந்துகொள்கிறேன் — அவனை நேரிடையாக எதிர்த்து ஒழிக்க முடியாது. மாமரத்தின் பின்புறமிருந்துதான் இந்த வாலியைக் கொன்றாகவேண்டும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு யோசனை உதயமாகிறது. ஆனால் மறுநாள் அது பயித்தியக்கார யோசனை என்று புரிகிறது– தெளிவு பிறக்கவில்லை, சுந்தரியின் உருவம் நித்த நித்தம் என்முன் தெரிகிறது, அப்பா ஆகமம், சாஸ்திரம் என்றீர். இல்லையானால், நான் அந்தப்புரம் சென்று சுகப்பட்டு இருக்கும் என்று அழுகுரல் கூறுகிறது அந்த உருவம். எப்படிச் சம்மதிக்கமுடியும் அவள் சொன்ன நீச ஏற்பாட்டுக்கு, மதுரை மீனாட்சி அம்மன் கோவில் பட்டாச்சாரியே வர்ணாஸ்ரம விதியை, சனாதன தர்மத்தை, சாஸ்திர சம்பிரதாயத்தை, மீறி நடந்தால், பிறகு நமது குலப்பெருமை, மத மகிமை நிர்மூலமாகிப் போகுமே! ஏற்கனவே கிறிஸ்தவ பாதிரிகள் மக்கள் மனதை மயக்கி விடுகிறார்கள்! என் மகளை நான் 'ஜாதி கெட' விட்டிருந்தால் போதுமே, மதமே மாண்டு போகும்! தேவி கோயிலிலிருந்து துரத்தப் பட்டுமிருப்பேன். ஆமாம், அவள் செத்தாள் — வேறு வழி கிடையாது. ஆனால் இவன் இவனைத் தொலைக்க வேண்டும்

எப்படி? அதுதானே இன்னும் புரியவில்லே. மன்னன் நாஸ்திகனுக வருகிருன். தேவியை மறந்துவிட்டான். புராதன மார்க்கத்தைப் பழிக்கிருன் என்பதை மெல்ல மெல்லப் பலரிடம் கூறி வருகிறேன். பரவுகிறது இந்தச் சேதி, மக்கள் மனம் பதறுகிறது. இது நல்ல சுப சகுணம். ஏன்? அந்தப்புற மாதர்கள்கூட என் தூபத்தால் மன்ன னுக்கு விரோதமாகக் கிளம்பத் தயாராகிவிட்டனர். அத ஞல்தானே அந்தப்புரத்திலேயே அரசனேக் குத்திக் கொல்ல ஏற்பாடு செய்தேன்— அரசனின் அபிமான ஸ்திரி களும் சம்மதித்தனர்—அந்த மடையர்களால் முடியவில்லே, மன்னனேக் கொல்ல வேறு- ஏற்பாடு செய்தாக வேண்டும்- அதுவும் லிங்கண்ணு மூலமாகத்தான்! பார்ப்போம், பழி வாங்காது விடக்கூடாது — முடியாது போனுல் இப்புவி யேது...; எப்புவியிலும் நம்மவர் போட்ட திட்டம் தோற் றது கிடையாது. மதுரை மண்டலத்திலே மட்டும் நமது முறை தோற்று போகும்? இல்லே, இல்லே. வெற்றி கிட்டும். லிங்கண்ணு வெறிகொண்டவனுகவே காணப்படுகிருன், ஒரு நல்ல திட்டம் தயாரித்துக்கொண்டு, அவன் உதவியை நாடினுல் வெற்றிதான். திட்டம் வேண்டும் — திட்டம் வேண்டும்.

(லிங்கண்ணு)

மோசமாகிவிட்டது, மன்னன் போக்கு இந்த கிறிஸ் தவ பாதிரிகளுக்கு இப்படியா இடம் தருவது? மதுரைகொந் தளிக்கிறது. மன்னன் ஏதும் நேரிடாது என்று இருக் கிருன், மமதையுடன். என்னிடம் துளியாவது மதிப்பு இருக் கிறதா, என்ன செய்துவிட முடியும் என்ற தைரியம்.

ராஜ சபையிலே நம்மை எல்லாம் அலட்சியப்படுத்து கிருன். எவ்வளவு தைரியமாக மத விஷயத்தைக் கண்டிக் கிருன். இந்த மண்டலத்திலும், வேறு மண்டலங்களிலும் மறையவர்களிடம் மன்னர்கள் பயபக்தி விசுவாசத்துடன் நடந்து கொள்கிருர்கள். திருமலே மட்டும்தானே தர்க்கிக் கிருன். தர்க்கிப்பது மட்டுமா...அன்று ஒரு நாள் சந்திர சேகர பட்டரிடம் சில புதிய கேள்விகள் பாதிரி தயாரித்

தார்கள் படிக்கிறேன் கேளுங்கள் — பட்டரே பதில் கூற முடியுமானால் நல்லது. கவனமாகக் கேட்கவேண்டுமென்று கூறி. என் எதிரிலேயே அந்தப் பிராமணனை எவ்வளவு கேவலப்படுத்திவிட்டான், மதத்தையும் பழித்தான்.

'ஓய்! பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்தவர் கடவுள் தானே!'

'ஆமாம்... சந்தேகமென்ன... வேதப் பிராமணாதிகள் அதைத்தான் வலியுறுத்துகின்றன... உபநிஷத்தும்...'

போதுமய்யா... நான் தான் ஒப்புக்கொள்கிறேனே ஒப்புக்கொள்ளும் விஷயத்துக்கு ஓராயிரம் ஆதாரம் ஏன்?

'பிரபிஞ்சத்தைச் சிருஷ்டித்தான் கடவுள்...உம்மையும் என்னையும்—ஊராள்வோனையும் உழவனையும் — ஈ எறும்பு முதலான் எண்பத்திநான்கு கோடி, ஜீவராசிகளையும் சிருஷ்டித்தான்...'

'சிருஷ்டித்தான் அல்லவா? இதிலே மக்கள், ஆண்டவனின் குழந்தைகள் தானே'

'ஆமாம்'

'அப்படி இருக்க, இதிலே உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்று பேதம் ஏன்?'

'அது சாஸ்திரம்'

'சாஸ்திரம் சர்வேஸ்வரனுடைய வேலையைக் கெடுப்பதா சாஸ்திரத்தின் இலட்சணம்?'

'இல்லை'

'என்ன, இல்லை... இல்லை ... நமது ஜாதிக்கு என்ன காரணம் கூறுகிறீர்கள்...'

'பிரம்மனின் முகத்தில்...'

'முகத்திலே, தோளிலே, துடையிலே, பாதத்திலே! இப்படிக் கூறுகிறீர்களே, அது இந்த நாட்டுக்கு மட்டும் இருக்கிறது தவிர உலகிலே மற்ற நாடுகளிலே இல்லையே ஏன்?'

'தெரியவில்லை'

'விசாரிக்கப்படாதோ...'

'யாரை?'

'விஷயம்... தெரிந்தவர்களை' என்று பேசிவிட்டு ஒரு பேய்ச் சிரிப்புச் சிரித்தபோது, எனக்கு வந்த கோபம், கட்டாரி மீதே கை சென்றது. ஊர் மக்கள் இவனை ஒழித்துக் கட்டுபவர்களை வாழ்த்துவார்கள், அவ்வளவு வெறுப்பு வேந்தனிடம். யாரும் தன்னை ஏதும் செய்துவிட முடியாது. நான் என்ன மரமா! வாள் ஏந்தி அறியாதவனா! இந்த மண்டலத்தையே ஆளும் வல்லமை உண்டு எனக்கு! ஆள நினைத்தால் தான் என்ன தவறு! அன்னியருக்கு இடமளிக்கும் இந்த மன்னனை ஒழித்துவிட்டு, நானே மன்னனானல் ஒரு தவறும் இல்லை. பதவி ஆசை என்பார்கள்—ராஜ துரோகம் என்று சிலர் தூற்றுவார்கள். ஆனல் மக்களுடைய மனம் எனக்குத் தெரியும். நான் தான் மாபாவியை ஒழித்தேன் என்று தைரியமாகக் கூறிவிடலாம். ஆனல் அவ்வளவு வெளிப்படையாகச் செய்வது ஒரு வேளை ஆபத்திலே கொண்டுபோய்ச் சேர்க்கக்கூடும் வேறு விதமாகத் தான் ஏற்பாடு செய்யவேண்டும். நல்ல வேளையாக இந்த பட்டர் கிடைத்திருக்கிறார். பாவம் வெளியே சொல்ல முடியாத வேதனை அந்த ஆசாமிக்கு. இந்த நிலையில் உள்ளவரைத்தான் தக்க கருவியாகக் கொள்ளவேண்டும். அவருக்கு உள்ள வேதனையின் காரணத்தை அறிந்ததாகக் காட்டிக்கொள்ளக்கூடாது. அன்று மெல்ல ஒத்திகை பார்த்தேன்—நேர்த்தியாக இருந்தது. பட்டரின் ஒத்தாசை நிச்சயம் கிடைக்கும் என்பதிலே சந்தேகம் இல்லை. மக்கள் ஏதாகிலும் சந்தேகப்பட்டாலும் பட்டர் அவர்களைச் சரிபடுத்தி விடுவார்! அவர் என்ன சாமான்யமானவரா? தேவி சன்னதியில் பட்டாச்சாரியார்–அவர் வாக்கு சத்தியவாக்கு என்று தான் யாரும் எண்ணுவார்கள்.

மன்னனுக்கு மதி கூறுவதை விட, மணலை கயிராகத் திருகிவிடலாம் போலிருக்கு. மறையவரே! விதண்டாவாதம் பேசுவதெல்லாம், செய்வது மகா மோசமான மட்டரகமான காரியம்...!

"மன்னன்!—ராஜா...!"

"மரப்பொம்மைகளா மக்கள்?"

"மன்னன் என்ருல், எதுவும் செய்யலாம் என்று எண்ணுவார்கள்? அந்தக்காலம் மலையேறிவிட்டது."

"மதுரையிலா?"

"ஏன்? இங்கு மாவீரர் இல்லை என்று எண்ணுகிறீரா?"

"லிங்கண்ணு! வீரருக்கு இங்கு என்ன குறை. உமது வீரதீர பராக்கிரமத்தை நான் அறியமாட்டேனு?"

"ஆனுல்...!"

"ஆனுல் என்று இழுக்கக் காரணம் அந்தணரே! என்ன கூறும். ராஜவிஸ்வாசம் பலமான பாசமல்லவா!"

"ஆமாம்—ஆனுல் ராஜபதவி மிகவும் பொறுப்பானது அல்லவா?"

"நடை—தடை—என்ன—தர்மசாஸ்திரம் தவருமல் நடப்பது தான் ராஜதர்மம்..."

"தவறினுல்..."

"ஆண்டவன் தண்டிப்பார்...ஆண்டவன் அதற்காகத் தான் மக்களுக்கு அறிவையும் ஆற்றலையும் தந்திருக்கிருர்—கடிக்க வரும் பாம்பை எல்லாம் ஆண்டவன் தூரத்திக் கொண்டு வந்து அடிக்க வேண்டுமா-நாம் என்ன மண்ணுங் கட்டிகளா?"

"ஏது லிங்கண்ணு, புரட்சிபொறி வீசுகிறது. உன் பேச்சில்"

"பட்டரே! மன்னரிடம் கூறிவிடும்—லிங்கண்ணு உமது நடத்தையைப் பலமாகக் கண்டிக்கிருன்—மக்கள் ஆத்திரம் கொண்டுள்ளனர்—அக்கிரமத்தைச் சகிக்கமாட்டார்கள், என்று கூறிவிடும்."

"நானு......"

''ஏன்? வேறு யார் கூறுவது? உமக்குத் தெரியவில்லையா, மன்னன் நமது புராதன மார்க்கத்தையே நாசமாக்கத் துணிகிறான். பரங்கிகளின் பேச்சைக் கேட்டுக்கொண்டு...''

''தெரியும்—மனம் வேகிறது அந்த மாபாவி செய்யும் காரியத்தை நினைத்தால்'' என்றல்லவா பேசினார்...பட்டாச்சாரியாருக்கு மனம் எரிமலையாகிக்கிடக்கிறது. அந்தநெருப்புக் குழம்பிலே தள்ளிப் பொசுக்கிவிடலாம் மன்னனை. சரியான சமயம் வாய்க்கவேண்டும். திட்டம் தீட்டியபடிதான் இருப்பார் பட்டாச்சாரி. பழிவாங்கித் தீரவேண்டும் என்ற எண்ணம் அணையாத தீயாக இருக்கிறது அவர் மனதில்.

(திருமலை)

பணம் இல்லாமல் எவ்வளவு திட்டங்கள் பாழாகிவிடுகின்றன. நானும் கொஞ்சம் வீண் செலவு செய்துவிட்டிருக்கிறேன். அந்தப்புரத்திலே மட்டும், தேவிமார் முன்னூறு—பரிவாரம் பலநூறு—பொன் பாழாகிறது. இவ்வளவு அழகிகளும், என் சுந்தரவல்லியின் கால்தூசுக்கு இணையாகமாட்டார்கள்! அந்தப் பொற்கொடியைப் பெற அரும்பாடுபட்டேன்—பெற்றேன்—ஆனால் நிரந்தர விருந்தாகவில்லை. பழைய போதை இந்தப் பட்டாச்சாரிக்கு, பாதிரிமார்கள்தான் பட்டவர்த்தனமாகக் கூறினார்களே. வைதீகவெறி, லேசில் போகாது என்று. அவ்வளவு வாதாடினேன் சுந்தரியைத் திருமணம் செய்துகொள்ளவேண்டுமென்று. பிரளயம் வந்துவிடும் என்று பீதிகொண்டான். அவள் அழுதபோதெல்லாம், அஞ்சியபோதெல்லாம் தைரியம் சொன்னேன் உன்னை என் தேவியாக்கிக்கொள்கிறேன் என்று சில நாட்களில் இந்தப் பட்டாச்சாரியின் பித்தந் தெளிந்துவிடும். திருமணத்துக்குச் சம்மதிப்பான் என்று எண்ணினேன். அதற்காகவே, பழைய சாஸ்திர சம்பிரதாயங்களிலே உள்ள அர்த்தமற்ற, பொருத்தமற்ற விஷயங்களை எல்லாம் பட்டாச்சாரியிடம் கூறினேன்—வேடிக்கையாகப் பேசுவது போல, எதற்கும் அசையவில்லை. பாவம்! சுந்தரி திடீரென்று மாண்டுபோனாள். மாரடைப்பு என்று புரளுகிறான். இருக்காது. தற்கொலையாகத்தான் இருக்கவேண்டும்.

பேதைப் பெண் பீதிகொண்டுவிட்டாள். பட்டாச்சாரி அவள் செத்ததோடு, சம்பவத்தையே மறந்துவிட்டான். மகள் செத்தது கூட அவனுக்கு வருத்தமளிக்கவில்லை. ஜாதி கெடவில்லை என்று பகிழ்கிருன். எல்லாம் விதி என்ற ஆறுதல்! என் மீது கோபம்கூட இல்லை. மகாராஜாவைக் கருவியாக்கி பிரமன் தன் வேலையை முடித்துக்கொண்டான் என்று கூறி மனச்சாந்தி தேடிக்கொண்டான் மடையன். ஆனுல் 'ராஜபக்தி' அபாரம் அவனுக்கு. இல்லாமலா, நான் பணமின்றி திண்டாடுவது தெரிந்து, தேவி சன்னதியில் உள்ள இரகசிய சுரங்கத்திலே பெரும் பொற்குவியல் பேழைகளில் உள்ள இரகசியத்தைக் கூறினுன். பரம்பரை பரம்பரையாகச் சேர்க்கப்பட்ட பொன்! நல்ல சமயத்திலே உதவுகிறது. இன்றிரவு நடுநிசிப் பூஜையின்போது சென்று எடுத்து வரவேண்டும். பட்டாச்சாரி நமக்காகக் காத்துக் கொண்டிருப்பான். எத்தனை பேழைகளோ! எவ்வளவு பொற்குவியலோ!

(சந்திரசேகர பட்டர்)

நடுநிசி! பக்தகோடிகளெல்லாம் போய்விட்டார்கள். பேராசைக்காரன், காமாந்தக்காரன், என் மகளைக் கெடுத்துச் சாகடித்த காதகன் வரப்போகிருன். பேழைகள் எத்தனை! பொற்குவியல்கள் எந்த அளவு இருக்கும் என்றல்லவா கேட்கிருன். வா! வா! சந்திரசேகரன் கட்டிய சமாதி தயாராக இருக்கிறது. இதோ லிங்கண்ணுவும் வீரர்களும் எனக்குத் துணையாக வந்துள்ளனர். புல்லேந்தும் கரம் தான். ஆனுல் இன்று உன் உயிரைப் போக்கும் வலிமை இதற்கு! வேதனை, கோபம், வெட்கம், எது கிளம்பினுல் தான் என்ன? மணி அடிக்கும் இவன், நம்மை என்ன செய்துவிட முடியும் என்று இறுமாந்து கிடந்தான். இதோ சவக்குழி—தேவி கோவில் பட்டாச்சாரி வெட்டியிருக்கும் சவக்குழி! உள்ளே சென்று, பேழைகளைப் பார்த்து, வாய்ப் பிளந்து நிற்கும் போது இந்த விளக்குகள் அணைக்கப் படும்! இருள் சூழ்ந்துகொள்ளும். பிறகு, இந்தப் பெரும் பாறை—லிங்கண்ணு பலசாலி—இருவரும் சேர்ந்து சுரங்க வழியை இதனுல் அடைத்துவிடவேண்டும் — உயிரோடு

சமாதி—காற்று கிடையாது—பாறைக்கதவு—தட்டிப் பயனில்லை—உயிர் ஊசலாடும்—சித்திரவதை—அணு அணுவாக உயிர் கத்தரிக்கப்படும். பிணமாவான் பேயன். லிங்கண்ணு இதைத் தர்ம கைங்கரியம் என்றே எண்ணுகிருன். மதத்தைக் காப்பாற்ற மன்னன் ஆனுலும், அருமை மைந்தன் ஆனுலும், தாய் தகப்பன் ஆனுலும், யாராக இருந்தாலும் கொல்லுவது புண்ணிய காரியம் என்றேன்—ஆமாம் என்ருன். சொல்ல மலிருப்பானு சாஸ்திரம் அறிந்தவன் ஆயிற்றே! நான் எதற்காகப் பழிதீர்த்துக்கொள்கிறேன் என்பது நல்லவேளை, லிங்கண்ணுவுக்குத் தெரியாது. என் திட்டத்தை மெச்சினுன். ஆமாம் அதோ மன்னன்–தேவி! உனக்குப் பலி, நர பலி! சுந்தரி உன் தந்தை சாமான்யனல்ல—இதோ பார்! வருகிருன் சாக!

(மதுரை பக்தர்கள்)

காலம் கலியானுலென்ன, அற்புதம் நடவாமலாபோகும் நேற்று நடுஜாமப் பூஜையின்போது, நமது மன்னன் திருமலை, தேவியோடு ஐக்கியமாகி விட்டாராம், தேவியின் மகிமையே, மகிமை! திருமலைக்குக் கிடைத்த முக்தியே முக்தி! தேவியைத் தரிசித்தபடி நின்ருராம் மன்னர்–நெடுநேரம்! பட்டாச்சாரியார்கூட ஆச்சரியப்பட்டாராம். பாதிரிகளின் சகவாசத்தால், மன்னனுக்கு மத நம்பிக்கை குறைந்துவிட்டதாக எண்ணிக்கொண்டோமே! இவர் பக்திபரவசமாகியல்லவா நிற்கிருர் என்றுஎண்ணி,இப்படிப்பட்ட'பக்திமானைப்' பழித்தோமே என்று வருந்தினராம். மன்னன் கண்மூடி, கரம் கூப்பி, மவுனம் செய்த வண்ணம் இருக்கும்போது, பட்டாச்சாரியின் கண்களைப் பறித்துவிடும்படியான ஓர் ஜோதிதோன்றிற்ரும் அம்பாளிடமிருந்து முகத்திலிருந்தா காலிலிருந்தா என்று மட்டும் கண்டுபிடிக்க முடியவில்லையாம். ஜோதி தோன்றியதும் 'பக்தா' என்று தேவியின் குரல் கேட்டதாம். 'வந்தேன்' என்ருராம் திருமலை, அவ்வளவுதான்! மன்னர் ஜோதியில் கலந்துவிட்டாராம். என்ன பக்தியின் பெருமை. திருமலை நாமம் வாழ்க! திவ்விய ஜோதி வாழ்க! தேவியின் நாமம் வாழ்க! திவ்விய ஜோதியில் கலந்த திருமலையான் திருநாமம் என்றென்றும்வாழ்க!

கடிதங்கள்

அந்தக் கலியாணத்தைப் பார்த்தாக வேண்டுமென்று எனக்கு ஒரே துடிப்பு. கடன் வாங்கிக்கொண்டு கிளம்பினேன் கிள்ளிக்கு. என் அத்தை மகள் முத்தம்மாவையும் பாத்து விட்டு வரலாம் என்று ஆசைதான்—உங்களிடம் உண்மையைச் சொன்னால் தவறல்ல, சொல்லிவிட்டேன்! கலியாணம், வேம்புக்கும் அரசுக்கும்!!

கிள்ளியிலே முத்து, மாணிக்கம், மீனாட்சி, அருபம், அகிலாண்டம், இன்னுசிமுத்து, இபுராஹீம், சொக்கன், மாரிமுத்து என்று இப்படி பலர் உண்டு. எனக்குத் தெரிந்தவர்கள், பல கலியாணங்களும் நடந்திருக்கின்றன. நான் சென்றதில்லை. ஓய்வு எது? இங்கு தான் 'சர்வஜன சகாய நிதி'யில் எனக்கு கடுமையான வேலையாயிற்றே! லிவு தருவாரா, மானேஜர் மார்க்கபந்து சாஸ்திரி, இந்த வேம்பு—அரசு கலியாணத்தை மட்டும் எப்படியும் பார்த்துத் தீர வேண்டும் என்று ஒரே ஆவல், ஏன் என்கிறீர்களா, வேப்பஞ் செடிக்கும் அரசஞ் செடிக்கும் கலியாணம் அது. அடிக்கடி நடைபெறக்கூடியதா, கிள்ளிகள் மறைந்துகொண்டல்லவா வருகின்றன.

தற்செயலாகத்தான் இந்தக் கலியாணச் 'சேதி' எனக்குத்தெரிந்தது-நான் மும்மரமாக ஈடுபட்டிருந்த பகுத்தறிவுப் படிப்பகத்தில், 'பலகணி' பத்திரிகையில் கொட்டை எழுத்தில் இந்தக் கலியாணச் செய்தி வெளிவந்திருந்தது. மாஜி மந்திரி பாஜிராவ் அதன் ஆசிரியர்.

கலியாணம் செய்துகொள்ளும் பக்குவமடைந்த எவ்வளவோ பேர், பணவசதி இல்லாததால், மனப் பசியைப் பொறுத்துக்கொண்டிருக்கிறார்கள்—ஊராரைச் சொல்லுவானேன். எனக்கே ஒரு ஆயிரம் ரூபாய் இருந்தால், முத்தம்மா இப்போது இங்கு இருப்பாள்! இப்படி நிலைமை இருக்கிறது.

கிள்ளியில் வேம்புக்கும் அரசுக்கும் கலியாணமாம். அதற்குத் தங்க நாணயம் தணிகாசலம் கச்சேரியாம். பொய்க்கால் குதிரையாம். போகர் பரம்பரை பொய்யாமொழியார் 'திரிசடையும், விரிசடையும்' என்ற காலட்சேபம் செய்கிறாராம் பாயாசத்துடன் விருந்தாம். எல்லாம் பக்தர்கள் உபயமாம். இந்தப் பக்தியையும் அதை எடுத்துக்காட்ட பணத்தையும் திரட்டும் பொறுப்பை, பூமிநாத முதலியார் ஏற்றுக்கொண்டிருக்கிறாராம்!

இவ்வளவும் 'பலகணி'யில் வெளிவந்தது. இந்த வேம்பு அரசு திருமணம்; இனியும் நெடுங்காலத்துக்கு நடக்கப் போவதில்லை. கண் இருக்கும்போது பார்த்து விடுவோம். முடியுமானால் இந்த முயற்சி எவ்வளவு பைத்தியக்காரத்தனமானது என்பதை எடுத்துச்சொல்லுவோம். யார் கேட்டாலும், கேட்காவிட்டாலும் முத்தம்மாள் இருக்கிறாள் கேட்க! என்று எண்ணினேன். கடன் பெறுவது கஷ்டமான காரியமல்ல-பழகிப்போன காரியம் கிள்ளி வந்து சேர்ந்தேன்—முத்தம்மாவைக் கண்டு பேசினேனா என்று கேட்கிறீர்களா? அதிகமாகக் கிளறாதீர்களய்யா. நீங்கள் என்னசெய்திருப்பீர்கள், உங்கள்முத்தம்மாவைக்கண்டால்!

வேம்பு — அரசு திருமணம் வெள்ளிக்கிழமை — நான் கிள்ளிக்கு நாலு நாள் முன்னதாகவே வந்துவிட்டேன்—சிலரிடம் இலேசாகப் பேசிப் பார்த்தேன். 'பைத்தியக்காரப் பிள்ளை!' என்று கேலி செய்தார்கள்.

அத்தை வீட்டுத் திண்ணையில் ஆயாசத்தோடு உட்கார்ந்துகொண்டிருந்தேன். சுருள்கத்தி சுந்தரவாத்தியார் மீசையை முறுக்கியபடி வந்தார்—கையிலே கடிதத்துடன்!

'சுருள்கத்தி' விளையாட்டிலே அவருக்கு நிகர், அந்தப் பக்கத்திலே யாரும் கிடையாது—சிலம்பக்கூடம் நடத்தி வந்தவர்—வாத்தியார் பட்டம் அதனால்தான். கிள்ளியிலும் அதைச் சுற்றி பத்து மைலுக்கும் அவர் வைத்தது தான் சட்டம். "போக்கிரி தன்னந்தனியாக இராக்காலத்திலே

போகும்போது கத்தியால் குத்திவிடுவான். நமக்கேன் அவனிடம் பகை'' என்று பேசிக்கொள்வார்கள். எதிரே பார்க்கும்போது 'வாத்தியாரே! சௌக்கியமா?'' என்று கேட்பார்கள் ஆண்டவன் புண்ணியத்திலே சௌக்கியத் துக்குக் குறைவு இல்லை என்று அவரும் சொல்லுவார்.

"தம்பி! பட்டணத்துத் தம்பிதானேடா அது'' என்று கேட்டுக்கொண்டே அருகே வந்தார், பார்வை பழுதாகிக் கொண்டு வருகிற வயது.

"ஆமாம் வாத்தியாரே! நான் தான், நடராசன் என்றேன்.

"நல்ல வேளையாப் போச்சு-இதோ பாரு, ஒரே அடியா மூணு கடுதாசி வந்திருக்கு, முத்தாயிட்ட கொடுத்து படிக் கச் சொல்லி கேட்கலாம்னு வந்தேன். ராஜாவே இருக்கு றப்போ ராணியைத் தேடுவானேன், படி-'' என்று சொல்லி யபடி மூன்று கடிதங்களைக் கொடுத்தார், பக்கத்திலே உட்கார்ந்தார்.

ஒரு கடிதத்தைப் பிரித்தேன். அனுமார் படம் போடப் பட்டு, அதனடியில் அனுமத் உபாசகர், ஜெஹிந்து ஜோதிட சபா என்று அச்சிடப்பட்டிருந்தது.

"படி! படி'' என்று ஆவலுடன் கேட்டார்.

சீமான் சுந்தரத்துக்கு, பகவத் கடாட்சத்துடன், தெரி விப்பது என்னவென்றால், இப்பவும் உன்னுடைய பெயர் ராசிக்கும் கடிதம் எழுதிய நேரத்துக்கும் பிறந்த வருஷம் மாதம் தேதி குறித்து அனுப்பி இருந்ததுக்கும் சேர்த்து ஜோதிடம் கணித்துப் பார்த்தாகி விட்டது.

உம்முடைய 'ஜாதகம்' யோக ஜாதகம்; அதாவது நல்ல கீர்த்தியும், பெயரும் இருக்கும் ஐஸ்வரியத்துக்கும் குறைவு இல்லை. அது இல்லை என்ற குறைவும் உமக்கு

இராது. ஆரோக்கிய விஷயத்தில், உமக்கு அவ்வளவு யோக ஜாதகமாக இல்லை.

இப்போது உமக்கு ஒரு நல்ல 'கிரஹம்' உதவியாக வந்து சேர்ந்திருப்பதால், கூடிய சீக்கிரத்தில் தனம் தானியம் கிடைப்பதோடு, பெரிய இடத்திலே சிநேகமும், மனச் சந்தோஷமும் கௌரவமும், ஏற்படும். ராஜ பார்வை ஏற்படலாம்; அதாவது சர்க்காரிடமிருந்து விசேஷமான சன்மானங்கள் கிடைக்கும்.

மற்றபடிக்கு, உம்முடைய ஜாதகமோ, வேண்டியவாருடைய ஜாதகமோ அனுப்பிவைத்தால் முழு ஆயுள் பலன் எழுதி அனுப்பப்படும். அனுமான் காணிக்கை ஆறு ரூபாய் அனுப்பவும், ஆசீர்வாதம்.

அனுமத் உபாசி ஜே ஹிந்து

படித்துக்கொண்டு வரும்போதே 'வாத்தியார்' குதூகலமடைந்தார்! "சன்மானம்"-னு சொல்ருரே, தம்பி அதிலேயும் சர்க்கார்லே இருந்து சன்மானம்னு சொல்ருரே எதுக்குச் சர்க்கார் சன்மானம் தரப்போவுது, நான் என்ன எலக்ஷன்லே நிற்கறவனு? ராவ்பகதூரு பகல் பகதூரா? விளங்கலியே" என்று கேட்டார். நான் என்ன பதில் சொல்ல. "அளப்பு வாத்தியாரரே! வெறும் அளப்பு"என்று தான் சொல்லவேண்டும். சொன்னுல் கோபம்தானே வரும்! 'வாத்தியார்' தான், ஜோதிடர் எழுதி இருந்ததை அப்படியே நம்பிப் பூரித்துக் கிடக்கிருரே, மற்ருேர் கடிதத்தைப் பிரித்துப் படித்தேன்.

வந்தேமாதரம் ஸ்டோர்
வரதப்ப செட்டியார்

என்று அச்சிடப்பட்ட தாளில் எழுதப்பட்டிருந்தது.

"வந்தேமாதரம் இஸ்டோரா? அது என்ன தம்பி? வரதப்ப செட்டியாரு, யாரு...? என்று வாத்தியார் கேட்டார் நான் கடிதம் எழுதியவர் பெயர், என்ன என்று பார்த்தேன். சின்னச்சாமி சேந்தமங்கலம், என்று இருந்தது, சொன்னேன்.

"அடடே நம்ம சின்னுன்! என் மருமவனுக்கு தம்பி... படி படி" என்ருர் வாத்தியார், படித்தேன்.

"மகாராஜராஜஸ்ரீ வாத்தியாருக்கு, சின்னச்சாமி நமஸ்காரம். நம்ம தலேயிலே பெரிய இடி விழுந்து போச்சு, அண்ணனேப் போலிசிலே பிடிச்சி இருக்காங்க—கொலேக் குத்தத்துக்காக — வீடு பூராவும் இழவு விழுந்த மாதிரி இருக்குது. யாரார் காலிலேயோ, நானும் அண்ணியும் விழுந்து கும்பிட்டும் அண்ணனே விடமாட்டேனு சொல்லி விட்டாங்க, அண்ணிக்கு மயக்கம், வந்திடுச்சு, போன தை மாசம் நீ ஒரு பாவிப்பயலே அனுப்பி வைச்சதாலே வந்தது தான் இந்த ஆபத்து. பால் காவடி வேல்சாமியாராலே தான், அண்ணன் இப்ப ஜெயிலில் இருக்குது—அவனேயும் அடைச்சி வைச்சிருக்காங்க, எங்க வீட்டுத் தோட்டத்திலே பெரிசா புதையல் இருக்குதுன்னு சொல்லி அண்ணனே ஏமாத்தி இருக்கிருன் அந்தப் படுபாவி, அண்ணன் பைத்தியக்காரத்தனமா அதை நம்பிக்கிட்டு, அவன் சொன்னபடி ஐந்து வயது பையனேக் 'காவு' கொடுத்துதாம்—பக்கத்துத் தெருவு பையன், போலிசுக்கு எட்டிப்போச்சு—அண்ணனேப் புடிச்சிக்கிட்டாங்க, உடனே ஒரு நூறு ரூபா கைமாத்து வாங்கிக்கிட்டு, வரணும் மறக்காம, பணம் வாங்கி வர வேணும், இங்கே ஊரே, அண்ணன் மேலே விரோதமா இருக்கிறதாலே ஒத்தக்காசு கூட கடன் கிடைக்கல்லே, நம்ம போருத வேளே குடி முழுகுது, உடனே வரணும்.

சின்னச்சாமி

ஊரையே மிரட்டுகிற 'வாத்தியர்' பட்ட வேதனையைப் பார்த்து, எனக்கு பரிதாபமாக இருந்தது. 'ஐய்யய்யோ'

என் தலையிலே இடிவிழுந்ததே! கொலை குத்தம்னு இலேசானதில்லவே! நான் என்னு செய்வேன்! என்று கண்ணீர் விட்டபடி சொன்னார்.

மூன்றுவது கடிதத்தைப் பிரித்தேன் — வாத்தியார் தலையில் கைவைத்துக்கொண்டு, சோகமாக இருந்தார். படிக்கும்படி கூடச் சொல்லவில்லை—எனக்கும் கடிதத்தை ஒருவாறு பார்த்தவுடன், படிக்கத்தோன்றவில்லை-மடித்து உரையிலே போட்டுவிட்டு, சேந்தமங்கலம் போகிற ஏற்பாட்டைப் பாருங்க, வாத்தியாரே! என்றேன்.

''என்னடாப்பா, சொல்றே'' என்று அழுதுகொண்டே கேட்டார்.

''கிளம்பறேன்டாப்பா, கிளம்பறேன்—என் மருமவன் கதி இப்படி ஆச்சே...'' என்ருர்...சொல்லிவிட்டு, இந்த இழவிலே என்ன இருக்கு படிடாப்பா, என் தலைக்கு இன்னும் என்ன தீம்பு வருமோ, படி'' என்ருர் படிக்க என் மனம் இடம்தரவில்லை. ''இது ஒண்ணுமில்லை, வாத்தியாரே யாரோ ஒருத்தரு, எதை எதையோ எழுதி இருக்குருரு. வேப்ப மரம் அரசமரம் கலியாண விஷயமாக'' என்றேன்.

''என்ன எழவோ, படிச்சுச் சொல்லு'' என்ருர்—மீற முடியவில்லை, படித்தேன்.

சுருள்கத்தி சுந்தரவாத்தியாருக்கு, அருள்வாக்கு அம்பலவாண குரு எழுதியது.

நம்ப கிள்ளையிலே, நடக்கிற சகல காரியத்துக்கும், நான் உன்னை நம்பி இருக்கிறவன் என்பது உனக்கே தெரியும். அதனுலேதான், நம்ம அருள்சாமி கோயில் தோப்பு 'குத்தகை' இந்த வருஷம் உனக்குக் கொடுத்திருக்கிறது. கவனப்படுத்தத் தேவையில்லேன்னு நினைக்கிறேன்.

கிள்ளையிலே, பூமிநாதர் புண்யகாரியமாக, 'வேம்பரசு விவாஹ சுபகூர்த்தம்' செய்கிருர் என்கிறதாகக் கேள்விப்

பட்டு, ரொம்ப சந்தோஷமானேன் — நம்ம தோப்புலே இருந்து அவா கேட்கிற இளநீரு. வாழை தரவேண்டியது கூடமாட இருந்து ஆகவேண்டிய காரியத்தைக் கவனிக்க வேண்டியது. நீ கிணத்துத் தவளை மாதிரி இருக்கிறதாலே உனக்கு ஊர் விவகாரம் தெரியறதில்லே. சொல்லி வைக்கிறேன்.

இப்ப ஒரு தறுதலைக்கூட்டம் கிளப்பியிருக்கு, சாமி இல்லே, பூதம் இல்லே, ஜோதிடம் பொய், ஆரூடம் அர்த்த மில்லே, கோயில் வேண்டாம், குளம் வேண்டாம்னு கூவிக் கொண்டு, நல்ல காரியத்தைக் கெடுக்கிறானுங்க.

கிள்ளையிலே நடக்கப்போகிற, வேம்பரசு விவாஹத்தை 'பைத்தியக்காரத்தனம்' என்று சொல்லி, பேசி, ஏசி கலாட்டா செய்ய, அந்த பசங்க ஏற்பாடு செய்கிறதாக வதந்தி வந்திருக்குது. நம்ம மதம், எப்படிப்பட்டது என்கிற விஷயம், அதுகளுக்கு என்ன தெரியும்? நம்ம பெரியவர்கள் காலத்திலே இருந்து ஜோதிடம் இருக்குது அதிலே இருக்கிற விசேஷம், மகத்துவம், இந்த மதிகெட்ட வனுங்களுக்குத் தெரியாது. உன்னைப்போல இருக்கிறவர் களுக்குத் தெரியும். அதனாலே நம்ம ஊரிலே எந்த ஒரு கலகமும் நடக்காதபடி பார்த்துக்கொள்ளவேணும், வாய் மிரட்டு, கைமிரட்டு, எதைச் செய்ய வேணுமோ அதைச் செய்து, நம்ம பூமிநாதர் காரியத்துக்குக் குந்தகம் வராத படி பார்த்துக்கொள்ள வேணும். இங்கே இருந்து இந்தக் கழகத்தானுங்களுடைய ஆள், ஒருத்தன், முன்னதாகவே கிள்ளைக்கு வந்திருக்கிறானாம் — நடராசன்னு பேராம் — ஆசாமியை முதலிலே, கவனிச்சுக்கோ—பிறகு மத்ததுங்க தலைகாட்டாது. கேசுக்குப் பயப்படாதே, நான் இருக் கிறேன்.

இப்படிக்கு,

குருநாதன்

சிரமப்பட்டுத்தான் படித்தேன் — அவ்வளவு சோகத் துக்கிடையிலேயும், வாத்தியார் சிரித்தார்.

தம்பி! மூணு கடுதாசியும் ஒண்ணு வந்ததே — என் கண்கள் தொறந்தது. இந்த ஜோசியக்காரனுங்க, சாமி வேஷக்காரனுக்க, குருவுங்க, இவன்களை நம்பறது, பைத்தியக்கார வேலே! இபபத்தான் புரியுது. மூணு ரூபாயை முள்ளங்கி பத்தை மாதிரி அனுப்பினேன்—அந்த அனுமார் காரன் எனச்கு 'வெகுமானம்' கிடைக்கப் போவுதுன்னு ஒரு அண்டப்புளுகு கடிதம் அனுப்பினுன் — அங்கே என் மருமவன், சாமியார் பேச்சாலே கொலேகாரனுனுன்! இப்ப இந்த அகப்பட்டதைச் சுருட்டற ஆசாமி உன்னே உதைக்ச் சொல்லி, எனக்கு தூபம் போடுகிருன், பார்த்தாயா? வேடிக்கையை, நான் ஒரு மடையன், இப்படிப்பட்ட விஷயத்தை எல்லாம், நம்பிக்கிட்டே கிடந்தேன்—புத்தி வருது இப்பத்தான் என்ருர்.

எனக்கு எற்பட்ட சந்தோஷத்தில், என்னிடம் நூறு ரூபாய் இருந்தால் அவரிடம் அப்போதே கொடுத்து சேத்த மங்கலம் அனுப்பிவிடுகிறேன்—நான்தான் மாதம் நாற்பதுக்கு மார் உடையும்படி வேலே செய்பவனுயிற்றே.

சுக்கு நூருகக் கடிதங்களேக் கிழித்துப் போட்டபடி வாத்தியார், 'இந்த ஜோசியக்காரனுங்க, சாமியாடற பசங்க கொளம் குட்டையைக் காட்டி முட்டை அடிக்கிற வனுங்க. இவனுங்களே நம்பினு. நம்பினவன் தலேயிலே இடிதான் விழும்—இதோ என் தலேயிலே விழுந்ததே, தெரியவில்லேயா? என்று கூறிக்கொண்டே போகிருர்.

முத்தம்மாவின் குரல் கேட்கிறது, குழந்தையைக் கூப்பிடுகிருள்...என்னேத்தான் ... எனக்கல்லவா! அவளுடைய பிளான்' தெரியும்! போகிறேன்!!

ஏழை பங்காளர்

"கொடுமை! கொடுமை!"

ஒரு பெருமூச்சு.

"அக்ரமம்! அநீதி! அடுக்காது."
கண்ணீர் புரள்கிறது.

"எனக்கா இந்தக்கதி?"

ஏக்கமான பார்வை, கடலைக் கடந்து சென்று பாரிஸ் பட்டணத்திலே மாளிகை, மனைவி, மக்கள், உற்றார் உறவினர் மீது பாய்கிறது.

> "ஒரு குற்றமும் செய்யாத எனக்கு இந்தக் கடுந் தண்டனையா? நீதிக்காகப் போராடுபவர்கள் இல்லையா? நிரபராதியைக் காப்பாற்ற யாரும் இல்லையா? பொய்யை மெய்யென்றுக்கும் வஞ்சகரை வீழ்த்த ஒரு வீரன் இல்லையா? உண்மைக்காகப் பரிந்து பேச, யாரும் இல்லையா? ஏழை பங்காளர் உண்டோ இல்லையோ! ஒரு பிழையும் செய்தறியா என்னை இந்தத் தீவிலே தள்ளிய தீயர்களின் போக்கை, எதிர்க்கும் துணிவு கொண்ட ஒரு தீரன் இல்லையா! எல்லோருமா மண்டியிட்டு விட்டனர்? ஒருவர் இல்லையா உண்மை உரைக்க! என் பொருட்டுப் போரிட! நீதியை நிலைநாட்ட!"

சோர்வுமேலிட்டுச் சாய்கிறுன்! அவனுடைய உடை சுக்குநூருகிக் கிடக்கிறது. ஒரு காலத்தில் ராணுவ உடை

தரித்துக் கம்பிரமாகப் பாரிசில் உலவியவன், ஆயுட்தண்டனை பெற்று, (அந்தமான் தீவு போன்ற டெவில்ஸ்) தீவிலே உழல்கிறுன். அவன் செய்த குற்றம் என்ன? அதைத்தான் அவன், தண்டிக்கப்பட்ட அன்றும் கேட்டான் தீவிலே ஒவ்வொரு நாளும், கேட்டபடி இருந்தான்; பதில் என்ன? காற்று ஏதோ பேசிற்று; புரியாத மொழி! அலை ஒலித்தது; ஒலிதான், பொருள் இல்லை! அவனுடைய பெருமூச்சு ஒன்றுதான் புரியக்கூடிய மொழியாக இருந்தது. அநியாயமாகத் தண்டிக்கப்பட்டான். வஞ்சகரின் வலையில் சிக்கினுன். வதைபடுகிறுன். அக்ரமக்காரரின் இலக்காகி இம்சைப்படுகிறுன். குற்றமற்றவன், கொடுமை செய்கின்றனர் என்று தெரிவிக்கிறது பெருமூச்சு. அது, தீவில்! பாரிஸ் நெடுந்தூரத்தில் இருக்கிறது. பாரிஸ்...

தீவிலே, திக்கற்ற நிலையிலே, தீயவர்களின் சூழ்ச்சியினுல் தண்டனை பெற்ற 'டிரைபஸ்' "ஒரு குற்றமும் நான் செய்யவில்லையே" என்று குமுறிக் கொண்டிருந்தான். அலைகடலிடையே உள்ள அந்தத் தீவிலே அவன் ஆறுதல் கூறுவாரின்றி அவதிப்பட்டான். கண்ணெதிரே கடல்—கருத்திலேயும் கடல்தான். அலை அலையாக எண்ணங்கள். தாய்நாட்டுக்குத் துரோகம் செய்து அரசாங்கத்தாரின் இராணுவ இரகசியத்தை வெளியிட்டான் என்று 1895-ல் குற்றம் சாட்டப்பட்டு, ஆயுட்தண்டனை தரப்பட்டவன் டிரைபஸ். அவன்மீது சுமத்தப்பட்டது, அபாண்டம் என்று நிரூபிக்க முடியவில்லை—இடந்தரப் படவில்லை. உண்மைக் குற்றவாளிகள் டிரைபசைப் பலியிட்டுச் சட்டத்தைச் சரிப்படுத்திவிட்டுத் தங்களைக் காப்பாற்றிக் கொண்டனர். அவன் தீவிலே திகைக்கிறுன்; தீயர்கள் தேசத் தலைவர்களெனத் திகழ்கின்றனர். டிரைபசுக்காக வாதிட யாரும் இல்லை! அவன் மனைவி ஓயாது அழுதாள். நண்பர்கள் கதறினர். ஆனுல், அவன் பொருட்டுப் போரிட ஒரு மாவீரனும் தோன்றவில்லை. அவனுக்காகப் போரிட வேண்டுமென்றுல், பலம் பொருந்திய பிரஞ்சு சர்க்காருடன் போர் என்று பொருள். வஞ்சனையில் கைதேர்ந்தவர்களுடன், புன்னகைப் புலிகளுடன், நயவஞ்சக நரிகளுடன், போர் தொடுக்க வேண்டும். இணையில்லாத வீரம், ஏழைக்காக

எதையும் சகித்துக்கொள்ளும் துணிவு நீள்வையமே எதிர்த்தாலும் அஞ்சாமல் நீதிக்காகப் போரிடும் பண்பு, இவை வேண்டும்! போக போக்கியத்தில் புரண்டு கொண்டிருந்தவர்கள், ஏன் தமது சிறு விரலையும் தூக்கவில்லை! அவர்களின் அலுவல் அதுவா! மது நிறைந்த கோப்பை, மதுர மொழி வழியும் அதரம், மயக்கமூட்டும் கண்கள், இவைகளில் மனதைப் பறிகொடுத்தவர்களுக்கு, ஒரு டிரைபஸ் அக்கிரமமாகத் தண்டிக்கப்பட்டது பற்றி என்ன கவலை!

"பாவம்! டிரைபஸ், எவ்வளவோ கண்ணியமாக வாழ்ந்துவந்தவன், கம்பீரபுருஷன்; அவன் கதி கடைசியில் ஆயுட் தண்டனை!"

"என்ன செய்யலாம் சட்டப்படி, உயர் தர நீதி மன்றத்தார் விசாரித்தல்லவா தண்டித்தனர்; அரசாங்கத்தின் இராணுவ இரகசியத்தையல்லவா, டிரைபஸ், வெளிப்படுத்தி விட்டான். சாதாரண குற்றமல்லவே!"

"செய்திருப்பானா? டிரைபஸ் உண்மையில் குற்றவாளிதானா?"

"இல்லாமலா, தண்டித்தார்கள், தக்க ருஜு இருந்ததால் தான் நீதிபதிகள் தண்டித்தனர்."

இவ்வளவு தான் டிரைபசைப்பற்றிய பேச்சு; மாளிகை கொலுமண்டபம், நிர்வாக நிலையங்களில் இவ்வளவாவது, பேசபபட்டதற்குக் காரணம், தீவாந்திர சிட்சை பெறுவதற்கு முன்பு டிரைபஸ் பட்டணத்தில் அதிகாரியாய், அந்தஸ்துடன் வாழ்ந்ததால்தான். நாதியற்றவனாகி தீவிலே நலிகிறான் டிரைபஸ்; பாரிஸ் நகைமுகம் காட்டும் நங்கையாகவே திகழ்ந்தது. டிரைபசின் கண்ணீர் கடல் நீருடன் "நான் குற்றமற்றவன்...!" டிரைபஸ், கூறுகிறான் தீவில். "ஆதாரம் எங்கே? நீ நிரபராதி என்பதற்கு ருஜு எங்கே?" என்று சட்டம் கேட்கிறது. டிரைபஸ் தன் இருதயத்தின் தூய்மையை எடுத்துக் காட்டுகிறான். சட்டம் சிரித்துவிட்டு, வேறு வேலையைக் கவனிக்கிறது. "நான்

குற்றமற்றவன் என்று டிரைபஸ் கூறிக்கொண்டிருந்தான் தீவில்; நாட்கள் மாதங்களாயின! ஆண்டுகள் உருளத் தொடங்கின; டிரைபஸ், கந்தலாடையில் இருக்கிறன். கண்கள் குளமாகிப் பிறகு வறண்டுபோயின; கைகால்கள் எலும்புருவாயின; டிரைபஸ் நடைப் பிணமானன். ஈனக் குரலில் அப்போதும் கேட்டவண்ணம் இருந்தான் "நான் செய்த குற்றம் என்ன?" என்று.

டிரைபஸ் செய்த குற்றம் என்ன? அவன் நன்ருகப் படித்தவன்—குற்றம்,

சலியாத உழைப்பாளி—குற்றம்.

உண்மையான சாட்சியங்கள் அவனுக்கெதிராகக் கிடைக்கவில்லை—குற்றம்.

அவன் கலங்காதவன்—குற்றம்.

பாரிஸ் பட்டணத்திலே, ஒரு மாவீரன் கிளம்பினன். டிரைபஸ் செய்த குற்றங்களைக் கூற! இராணுவ இரகசியத்தை வெளியிட்டான் என்று குற்றம் சாட்டினர்களே, அது அல்ல அவன் செய்த குற்றம்; படித்தான், உழைத்தான். வஞ்சகருக்கு எதிராக வழக்கு மன்றத்திலே வலிவு தேடிக்கொள்ள முடியவில்லை; அதுதான் குற்றம் என்று இடித்துக் கூறினன், அந்த இணையில்லாத வீரன்.

மான் குற்றம் செய்யலாமா, புலியார் தண்டிக்கிருர்! ஏன் மான் அழகான கண்களைக் காட்டிற்று? புள்ளிமான் துள்ளி விளையாடுவதா! கள்ளங்கபடமற்று ஓடுவதா! சருகு உதிரும் சத்தம் கேட்டாலும் மருண்டு ஓடுவது ஒரு குற்றமல்லவா! சாதுவாக இருப்பது மற்ருேர் குற்றம்! பதுங்கிப் பாய்வது, பல்லால் கடிப்பது, நகத்தால் கிழிப்பது, இரத்தம் குடிப்பது, உறுமுவதுபோன்ற ஒரு நற்பண்பு இல்லை! இவைகளைப் பெருதிருத்தல் குற்றமல்லவா? புலியார், எத்தனை குற்றங்களைத்தான் பொறுப்பார்! ஆகவேதான் குற்றம் செய்த மானைத் தண்டித்தார்.

டிரைபஸ் செய்த குற்றமும் இவ்விதமானதே!

இதனை, இறுமாப்பாளருக்கே இடித்துக் கூற, ஒருவர் தான் முன்வந்தார் ஒரு பலனுங் கருதாது முன்வந்தார். தன் தலைபோகுமே என்ற பயமின்றி முன்வந்தார். எதிர்ப்புச் சக்தியின் தன்மையும் அளவையும் பொருட் படுத்தாது முன்வந்தார் நீதியை நிலைநாட்ட—கைவிடப் பட்டவனைக் காப்பாற்ற ஒரே ஒருவர் தான் வரமுடியும் ஒப்பற்ற உள்ளப் பண்புடையோர் மந்தையாக இரார் ஒரே ஒருவர் தான்; அவர் தான் ஏழைபங்காளர் **எமிலிஜோலா!** பிரான்சு நாடு மௌனம் சாதித்தபோது ஜோலா உண்மையை உரைத்தார், 'டிரைபஸ் குற்ற மற்றவன்' என்று.

எமிலி ஜோலாவுக்குத் தவிர, வேறு யாருக்கும் அந்த உறுதியான உள்ளம் இருக்கமுடியாது. அநீதி பெரு நெருப்பெனக் கொழுந்து விட்டெறியும்போது, அதனை அணைக்கத் துணிவது அனைவருக்கும் சாத்தியமாகக் கூடிய செயலல்ல! ஜோலாவால் முடியும்! ஜோலா அப்படிப்பட்ட ஆற்றல் படைத்தவன், அவனுடைய பேனா 'நானா'வுக்காகப் போராடிற்று. நானா 'கேவலம்' ஒரு வழுக்கிவிழுந்த வனிதை தான். அவளுக்காகப்போராடிய ஜோலாவால்தான் டிரைபஸ் விஷயமாகவும் போராட முடியும்; போராடினார்— வாழ்க்கை முழுவதுமே வறியோருக்காகவே போராடிய வீரர் ஜோலா. தனக்காகப் போராடும்படி டிரைபஸ் ஜோலாவைக் கேட்டுக்கொள்ளவில்லை. அவன் அநீதிக் காரரால் அவதிக்கு ஆளாக்கப்பட்டான் என்று அறிந்தார். ஆவேசம் பெற்றார், ஆற்றல் அவ்வளவையும் செலவிட்டார். "நீதி" வெளிவந்தது.

"நானா" சம்பவமும் அப்படிப்பட்டதே.

ஜோலா, அவரது நண்பனுடன் மிகமிகச் சாமான் யர்கள் மட்டுமே செல்லும் சிற்றுண்டிச் சாலையில் சாப் பிட்டுக் கொண்டிருந்தார்! ஒருநாள், திடீரென்று கூக்குரல் கேட்டது, பெண்களின் அலறலொலி நாலா பக்கங்களி

லிருந்தும் கிளம்பியது. ஜோலாவும் நண்பனும் ஜன்னலோரத்தில் சென்றபொழுது ஏராளமான பெண்கள், விரட்டுகிற போலிசிடமிருந்து தப்பி அங்குமிங்கும் சிதறிக்கொண்டிருந்தனர். விபசார விடுதிகளில் போலிசார் நுழைந்து விரட்டினர், விபசாரத்தையல்ல, விபசாரிகளை!!

மேல்மூச்சுவாங்க ஒரு இளமங்கை அந்தக் கடைக்குள் நுழைந்து, ஒரு தூணுக்குப்பின்னல் மறைந்துகொண்டாள். பயத்தாலும் திகிலாலும் அலைக்கப்பட்ட அந்த மங்கையை ஜோலா தன்னருகில் அழைத்தான். அச்சத்தோடு அவள் மெதுவாக அவன் பக்கத்திற்கு வந்தாள்; எனினும் போலிஸ்காரன் கடைக்குள் நுழைந்ததும் தப்பியோட அவள் முயன்ருள். ஜோலா அவள் பக்கம் சென்று, அவள் தன்னைச் சேர்ந்த நண்பர் எனக்கூறிப் போலிஸ்காரனை அனுப்பி விட்டான். பிறகு மூவரும் நாற்காலிகளில் அமர்ந்தனர். வறுமை எவ்வளவு வாட்டிய போதிலும், வாடாத அழகின் சாயல் அவள் முகத்தில் இருந்தது. அவளுடைய இழிதொழில் அவளை முற்றும் சிதைக்கவில்லை. ஜோலாவின் நண்பன் ஒரு ஓவியக்காரன். அவன் அவளுடைய உருவத்தை அங்கேயே தீட்ட ஆரம்பித்தான். ஜோலா அவளுடைய வரலாற்றைக் கேட்க ஆவலுள்ளவனுயிருந்தான். மிக வணக்கத்துடன் "உங்கள் பெயரென்ன அம்மா" எனக் கேட்டான் ஜோலா. பெயரா? அவள் வாழ்ந்த ஒவ்வொரு ஊரிலும் அவளுக்கு ஒவ்வொரு பெயர் இருந்தது. பெயர்களைக் கூறிவிட்டு, "ஏன் கேட்கிறீர்கள்" எனக் கேட்டாள். 'நானும் உங்களைப்போல ஒருவன்தான் அம்மா' எனக்கூறிவிட்டு, பணியாளனைக் கூப்பிட்டு அவளுக்குச் சிற்றுண்டியளிக்கச் சொன்னுன்.

அவள் தூரத்துக் கிராமத்தைச் சேர்ந்தவள். பாரிசுக்கு வரும்பொழுது அவளது வயது பதினேழு. கையில் காசு கிடையாது. இளமையும், எழிலும்தான் மிஞ்சியவை. வாழ்வு! அது ஏதோ அவளால் கனவு காணப்பட்டபொருள். தன் பழைய நினைவுகளைக் கூறும் பொழுது சொற்கள் தழதழத்தன: நீர்த்துளி படர்ந்த கண்கள் சொற்றொடர்

களை முடித்தன. அவளுடைய தாயகம்—அங்கே செல்ல முடியாது. குளிர், பிணி, பட்டினி—இவைகளால் வேட்டையாடப்பட்ட மிருகம், போலிஸாரால் விரட்டப்படும் அனுதை.

வரலாற்றை ஜோலா உற்றுக்கேட்டுக்கொண்டிருந்தான். பலவாண்டுகளாக அமைதியை அறியாத அவள், தன் துயரை மற்றொருவரிடம் கூறுவதில் சிறிது அமைதியடைந்தாள். இருவரும் நேரம் போவதையே கவனிக்கவில்லை. அவர்கள் தான் அந்தக் கடையில் கடைசி. சொந்தக்காரன் கடைசியாக ஒவ்வொரு விளக்காக அணைக்க ஆரம்பித்தான் அப்பொழுதுதான் எழுந்துபோக வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு உண்டாகியது.

மூவரும் வெளிக் கிளம்பினர். ஜோலா அவளுடைய அறைக்குப் போகவேண்டுமென்று பிடிவாதம் செய்தான். நகரில் மிக மோசமான துர்நாற்றம் வீசுகிற குறுகிய தெருவை அடைந்தனர். புழுதியடைந்த வீட்டு வாயிற் படிகளில் பெண்கள் "ஏதாவது அதிர்ஷ்டம் வராதா?" என்ற நம்பிக்கையுடன் நின்றுகொண்டிருந்தனர். ஜோலா போகும்பொழுது அவர்களது ஆச்சரியக் குரலும், ஏளனச் சிரிப்பும், பொருமைப் பேச்சும் அவனுடன் வரும் மங்கையின்மீது வீசப்படுவதைக் கேட்டான்.

தன்னுடைய வருகை தூய்மையானது என்பதைக் காட்டத் தன் நண்பனைத் தொடரும்படி கையசைத்துவிட்டு, ஜோலா அப்பெண்ணின் அறைக்குள் நுழைந்தான். மங்கிய விளக்கொளியில் அலங்கோலமான அந்த அறையில் அவன் கடிதக் கட்டுக்களையும், புகைப்படங்களையும் புரட்டினுன். கடைசியாகப் புகைப்படமொன்று கிடைத்தது. "நானு" ஆம் அவளுடைய பெயர்' குழந்தையின் சட்டையொன்றை அவன் கையிலெடுத்தான். அம்மங்கை கண்ணீர் விட்டுக் கதற ஆரம்பித்தாள் அவளுடைய குழந்தை அது இறந்துவிட்டது.

ஜோலாவுக்கு உலக வரலாறே கண்முன் வந்து நிற்பது போலக் காணப்பட்டது. ஆவேசத்துடன் தன் நண்பனை அழைத்து அவன் கையிலிருந்து அப்பெண்ணின் சித்திரத்தில் "நாணு" என்ற பெயரைத் தீட்டினன். அந்தப்பெயரில் ஒரு பெருங்கதை பிறந்தது, உலகத்தையே உலுக்க!

∴ ∴ ∴

அந்தப் புத்தகம் பாரிஸ் நகரையே குலுக்கியது. முதியோர்கள் திகைத்தனர். இளைஞர்கள் துடிதுடித்தனர். அது நாட்டில் நிலவிய கொடுமையை விளக்கிக்காட்டியது. நாட்டின் நலிந்தநிலை ஏட்டிலே இடம்பெற விடுவது உயர்ந்த தன்மையல்லவென்று கலைப்பூங்காவின் காவலர்கள் சினந்தனர். ஆனால் கரடு முரடான வாழ்வினர், 'இவை இதற்கு முன் ஏன் ஏட்டில் வரவில்லை' எனக் கேட்டனர். புத்தகக் கடைகளிலெல்லாம் புத்தகங்கள் கண்ணுக்குத் தெரியும்படி வைக்கப்பட்டிருந்தன. சமூகத்தில் 'மதிப்பிற்குரிய' வகுப்பினர் திடீரென்று புத்தகக் கடையில் நுழைந்து பலப்பல புத்தகங்களைப் புரட்டிப் புரட்டிப் பார்ப்பார்கள். கடைசியில் ஏதோ பேச்சுவாக்கில் கேட்பதுபோல நாணு' இருந்தால் ஒரு புத்தகம் தா எனச் சுற்றும்முற்றும் பார்த்துவிட்டு, மெதுவான குரலில் கேட்டு வாங்கிச் சென்றனர்.

"நாணு"வைப்பற்றி பாரிஸ் முழுவதும் பேசிக்கொண்டிருந்ததேயன்றி உண்மையான "நாணு"வுக்கு அதைப் பற்றி ஒன்றும் தெரியாது. அவள் வழக்கம்போல் 'வாழ்வை' நடத்தி வந்தாள். ஒரு நாள் கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. நாணு சென்று கதவைத் திறந்தாள். ஒருவரையும் காணோம். கதவுப் பிடியில் முட்டை யொன்று தொங்கியது. அதை அவிழ்த்ததில் 'நாணு' என்ற புத்தகம், பூங்கொத்து, திண்பண்டங்கள், பணம்...முதலியன இருந்தன.

∴ ∴ ∴

அப்படிப்பட்ட ஜோலா, பிரான்சு நாட்டிலே, இலக்கிய மன்றத்தாரால் ஏளனம் செய்யப்பட்டு, புத்தகம் வெளிபிடுவோரால் புறக்கணிக்கப்பட்டு, மேட்டுக் குடியினரால் வெறுக்கப்பட்டு, தன் பாட்டு மொழியினுல் நாட்டுக்குக் கேடு வருகிறதென்று பலர் பழித்துரைக்கக் கேட்டு பாரிசில் பல கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருந்தார். போராடிப் போராடியே உலகின் பார்வையைத் தன் பக்கம் திரும்பினுர். ஆகவேதான் எமிலி ஜோலாவால்—நானுவுக்காக அனுதாபத்துடன் போராடியவரால்—டிரைபசுக்காகப் போராட முடிந்தது. மற்றவர்கள், "மேதை" என்ற புகழ் பெற மேட்டுக் குடியினரின் பாத சேவை செய்தனர்; அரண்மனைக்கு ஆலாத்தி எடுத்தனர்; ஆலயப் பூஜாரிக்கு அன்பாபிஷேகம் செய்தனர். ஜோலா, மக்களுக்காக, ஒதுக்கப்பட்ட நசுக்கப்பட்ட, கொடுமைப்படுத்தப்பட்ட மக்களுக்காக எழுதினுர்! எழுதினுர் என்ருல் போராடினுர் என்றே பொருள். அவருடைய எழுத்து, வீரன் கைவாளை விட வலிவுடையது. உள்ளத்தை உலுக்கக்கூடியது; உலகே எதிர்த்தாலும் அஞ்சாது போரிடும் எழுத்துக்கள்! மமதைக் கோட்டைகளைத் தூளாக்கும் வெடிகுண்டுகள். "நீதி" வேண்டும் என்று ஜோலாவின் பேனு எழுதிற்று. என்ன நேரிட்டது? "நீதி" கிடைத்தது! மந்திரி சபைகளை, அவருடைய பேனுமுனை மாற்றி அமைத்தது. பல மண்டலங்களிலே, மறைக்கப்பட்டுப்போன டிரைபசுக்கு, நண்பர்களைத் திரட்டிற்று ஒரு பெரும் படை திரட்டிவிட்டார், பேனு மூலம். எங்கோ தீவிலே, ஏக்கத்துடன் "நான் ஒரு குற்றமும் செய்யவில்லையே" என்று கதறிக்கொண்டிருந்த டிரைபசுக்கு, வெற்றி, விடுதலை! பதினேறு ஆண்டுகள் பராரியாகப் பாழும் தீவில் வதைபட்டவனுக்கு, வெற்றி, விடுதலை, எமிலி ஜோலாவின் எழுத்தால்!!

∴ ∴ ∴

பிரெஞ்சு—ஜெர்மன் சண்டை மும்முரமாக நடந்து கொண்டிருந்த சமயம், பிரெஞ்சு ஒற்றனெருவன் ஜெர்மன் படைத்தலைவரிடம் அலுவலகத்தில் வேலைபார்த்துக்கொண்டிருந்த பொழுது சிறிய குறிப்பொன்று அவன் கையில்

சிக்கியது. அதை அவன் உடனே பிரெஞ்சு படைத்தலைமை இடத்திற்கு அனுப்பினான். அந்தக் குறிப்பில் பிரெஞ்சு நாட்டுக்கு உயிர்போன்ற படையமைப்பு இரகசியங்கள் எழுதப்பட்டிருந்தன. அந்த இரகசியங்கள் படைத்தலைமைக் குழுவினருக்கு மட்டுமே தெரிந்திருக்க முடியும். யார் அந்த துரோகி? படைத்தலைவர்கள் ஒன்றுகூடி ஆராய்ந்தனர். கடைசியாக ஆல்பிரட் டிரைபஸ் என்பவன் மீது குற்றம் சுமத்தப்பட்டது. உண்மையில் அந்தத் துரோகத்தைச் செய்தவன் எஸ்டர் ஹேஸி என்பவன். படைத் தலைமைக் குழுவில் செல்வாக்குப் பெற்றிருந்த எஸ்டர் ஹேஸியின் நண்பர்கள், அவசரமாக டிரைபஸ்மீது வழக்குத் தொடுத்தனர்.

1985-ம் ஆண்டு டிரைபஸ் இராணுவ மன்றத்தால் குற்றஞ் சுமத்தப்பட்டு, அந்தமான் போன்ற டெவில்ஷ் தீவுக்கு அனுப்பப்பட்டான் தண்டிக்கப்பட்ட உடனேயே அவன் வீதிகளில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டான். பெரிய மைதானத்தில் அவனுடைய படைவாளும் இராணுவச் சின்னங்களும் பிடுங்கப்பட்டன கூடியிருந்த மக்களும் 'ஒழிக டிரைபஸ்' என முழங்கினர். கடல் முழக்கத்தில் பறறை கூவுவதுபோல், டிரைபஸ் "நான் குற்றமற்றவன்! பிரஞ்சு வாழ்க!" எனக் கதறினான். டிரைபஸ் அங்கு ஒரு பக்கத்திலிருந்த பத்திரிகைக்காரனைப் பார்த்து "நீங்களாவது எனது தூய்மையை உலகுக்குக் காட்டுங்கள்" எனக் கூறினான். பத்திரிகைக்காரர்களுக்கு உண்மையை எழுதச் சொல்ல இவன் யார்? அவர்கள் திரும்பினார்கள். "துரோகி டிரைபசின் முடிவு" என்று கொட்டை எழுத்துக்களைத் தீட்ட.

அங்கு வந்திருந்தவர்களில் ஒருவர் காதில் அந்தச் சொற்கள் விழுந்தன. "குற்றமற்றவனாயின், உலக வர

லாற்றிலேயே மிகக் கொடுமையாகத் தண்டிக்கப் பட்டவன் அவன்தான்'' என்று அவர் முணுமுணுத்தார் அவர்தான் பிரெஞ்சு நாட்டுப் பெரும் இலக்கிய ஆசிரியர் அனதேல் பிரான்சு.

மற்றொருவர் அங்கே வரவில்லை. ஆனால் அவர்காதிலும் டிரைபஸின் கூக்குரல் விழுந்தது. எழுதுகோலை வைத்துவிட்டு, கைகளைப் பிசைந்துகொண்டே அங்குமிங்கும் அறையில் அவர் உலாவினார். வெறித்த பார்வையுடன் 'அநீதிக்கு இடமளிக்கமுடியாது' என்று கூறினார் அவர்தான் ஜோலா.

∴ ∴ ∴ ∴

டிரைபசின் நண்பர்கள், ஜோலாவிடம், சில குறிப்புகள் கொடுத்தனர். அவனுடைய தூய்மைக்கான ஆதாரங்கள். அவைகளைத் துணைகொண்டு வேலை செய்ய வேண்டும்; டிரைபசை மீட்கவேண்டும்; நீதியை நிலைநாட்டவேண்டும். ''முடியுமா?'' சே! என்ன கேள்வி அது? கோழையின் மொழி.

ஜோலா, பேனாவை எடுத்தார். பிரான்சு முழுவதும் டிரைபசை வெறுக்கிறது. ஆம்! அவனுக்காகப் பரிந்து பேசுபவரையும் பகைக்கும். இலக்கிய மன்றம் இடித்துரைக்கும். ஆமாம்! ஆனால் அநீதிக்குச் சக்தி அதிகம் இருக்கிறது என்பதற்காக அதன் போக்கில் விட்டு விடுவதா, அதன் அடிபணிவதா, அதற்கா, இந்த அறிவு ஆற்றல்? விளக்கைத் தூண்டினார்; குறிப்புத் தாட்களையும் ஆதாரக் கடிதங்களையும் ஒன்று சேர்த்தார்; களத்திலே புகும் வீரரானார்; உண்மை எழுந்தது! எழுதினார். எழுதினார், இரவெல்லாம் எழுதினார்! எங்கோ தீவில் எவனோ ஒருவன்

படும் அநீதியைத்துடைக்கத் தீட்டினார். இரவு இரண்டு—ஓயவில்லை; மூன்று—முடியவில்லை; நான்கு...பேனு வேலை செய்தவண்ணமிருக்கிறது. ஜோலாவின் மனைவி, விடியற்காலை பார்க்கும்போது, அறையில் விளக்கு எரிகிறது; ஜோலா எழுதுகிறார், மேஜை எல்லாம் தாள்கள். ஆவேசம் கொண்டவர்போல் ஜோலா இருந்தார். "நீதி" தயாராகிவிட்டது.

∴ ∴ ∴ ∴

"அரோரி" பத்திரிகைக் கூடத்திலே, நண்பர்களை வரச்சொல்லிவிட்டு, ஜோலா கிளம்பினார் அவர்களைக்காண.

பரட்டைத் தலையுடன், கசங்கிய உடையில், வேகமாக கடைவீதியில் ஜோலா சென்றபொழுது கோச்சு வண்டியில் இருந்த நீதிபதிக்கு ஜோலாவின் வேகம் கலக்கத்தை உண்டாக்கியது. விலை கூறிக்கொண்டிருந்த கடைக்காரன் ஜோலாவையே பார்த்தான். சிற்றுண்டி அருந்திக்கொண்டிருந்தவர்கள் ஜோலாவைக் கண்டதும் வாசற்படியில் வந்து நின்றனர். பத்திரிகைக்கூடத்தில் நுழையும் பொழுது அவரால் அழைக்கப்பட்ட அனைவரும் காத்திருந்தனர். எரிமலை வெடிக்கப்போகிறதா?

டிரைபசினுடைய மனைவியின் கண்கள் நம்பிக்கையால் ஒளிவிட்டன. வழக்கறிஞர் லபோரிக்கு ஒவ்வொரு விநாடியும் யுகம்போலத் தோன்றியது. அனதேல் பிரான்சுக்கு உட்கார முடியவில்லை. எல்லோருக்கும் வணக்கம் செலுத்திவிட்டு ஜோலா தன் கையெழுத்துக் கட்டைப் புரட்டினார்.

'பிரெஞ்சுக் குடியரசின் தலைவரே... டிரைபஸ் வழக்கு பிரெஞ்சு நீதியின்மீது அழியாத களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது...!"

டிரைபசின் மனைவி மகிழ்ச்சியால் முகமலர்ந்தாள்.

ஜோலா கண்ணுடியைக் கழற்றிக் கண்களைத் துடைத்தார் அறையில் அமைதி நிலவியது. டிரைபசின் சகோதரரின் கன்னத்தில் கண்ணீர் வழிந்தது.

"அநீதிக்கு வழிவிட்டு நாம் அமைதியாக வாழ முடியாது. டிரைபஸ்மீது பல குற்றங்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன, அவன் நன்ருகப் படித்தவன் — குற்றம். சலியாத உழைப்பாளி — குற்றம். உண்மையான சாட்சியங்கள் அவனுக்காதரவாய்க் கிடைக்கவில்லை—குற்றம். அவன் ஒரு யூதன்—குற்றம். அவன் கலங்காதவன்—குற்றம். அவன் கலக்கமடைந்தான்—குற்றம்"

துடிதுடிக்கின்ற விரல்களால் மற்ருெரு பக்கத்தைப் புரட்டினுர், குரல் இன்னும் கனத்தது

"யுத்த மந்திரி, இராணுவக் குழுவினர் படைத்தலைமை எஸ்டர் ஹேஸியைச் சந்தேகிக்க மனமொப்பவில்லை. ஓராண்டிற்கு முன்பிருந்தே அவர்களெல்லோருக்கும் நன்ருகத் தெரியும் டிரைடஸ் குற்றமற்றவன் என்று. குற்றமற்றவன் தீவில் வாழும்பொழுது, அநீதி வழங்கியவர்கள் அமைதியாக வாழ்கிருர்கள், மனைவி மக்களிடம் அன்பு பாராட்டி மனிதாபிமானமுள்ளவர்களாக."

நீர்த்துளி படர்ந்த கண்ணுடியைத்துடைத்துகொண்டு ஜோலா மேலும் படிக்கலானுர்.

"இராணுவக் குழுவினர் எஸ்டர் ஹேஸை விசாரித்தனர். ஏன்? டிரைபஸை மற்றுமொருமுறை தண்டிக்க! இது உண்மை, ஆனுல் பயங்கரமான உண்மை. நான்

உறுதியுடன் கூறுகிறேன்— உண்மை கிளம்பிவிட்டது. எதுவும் இதைத் தடைசெய்ய முடியாது.''

ஜோலா உரத்த குரலில் கூறினர். பத்திரிகைக்கூட வாயிலில் மக்கள் கூட்டம் தேங்கிருந்தது. கண்ணுடிக் கதவுகளின் வழியாக ஆச்சரியமுற்ற கலங்கிய முகங்கள் துடிதுடிப்புடன் காத்துக்கொண்டிருந்தன.

''புகழ்பெற்ற பிரெஞ்சு தாயகத்தின் தனிப்பெருந் தலைவரே! மூன்று ஆண்டுகளாக வழக்கை நடத்திய டார்ட் என்பவர் மீது நான் குற்றஞ் சாட்டுகிறேன். கிடைத்த உண்மைக் குறிப்புகளை மறைத்ததற்காக யுத்த மந்திரியின் மீது நான் குற்றஞ் சாட்டுகிறேன்! அதே பழிச் செயலைச் செய்த இராணுவக் குழுவினரையும் உதவிப் படைத் தலைவரையும் நான் குற்றஞ் சாட்டுகிலேன்! கைதியினிடத்தில் கொடுமை காட்டிய பாரிஸ் சிறைச்சாலைத் தலைவர்மீது நான் குற்றஞ் சாட்டுகிறேன். வழக்கில் பொய்ச்சாட்சிகளும் பொய்க் கையெழுத்தும் தயார் செய்தவர்கள் மீதும் குற்றம் சாட்டுகிறேன்!

''பொதுமக்களின் மனதை மாற்றும் வகையில் பொய்ப் பிரச்சாரம் செய்த யுத்த இலாக்கா முழுவதையும் நான் குற்றம் சாட்டுகிறேன்! வழக்குக்கு ஆதாரமான சாட்சியங்களை தண்டிக்கப்படுபவனுல் பரிசீலனையும் சமாதானமும் கூறமுடியாத வகையில் அவசரத்துடன் அநீதி வழங்கிய முதல் இராணுவ மன்றத்தை நான் குற்றஞ்சாட்டுகிறேன்! உண்மையான குற்றவாளியை 'குற்றமற்றவனென' பெருந்தவறு செய்த இரண்டாவது இராணுவ விசாரணை மன்றத்தை நான் குற்றஞ்சாட்டுகிறேன்! ஒருஅனுதையின் மீது இல்லாத பழிகளைச் சுமத்தி ஆயுட்கால தண்டனையைக் கொடுத்த அனைவரையும் — அந்தக் குற்றஞ் சாட்டிய

அனைவர் மீதும் நான் குற்றஞ்சாட்டுகிறேன்! இத்தகைய குற்றச்சாட்டுக்களை தெரிவிப்பதன் மூலம் நான் சட்டத்தை அவமதிப்பவனாக அவதிக்குள்ளாக்கப்படுவேன் என்பது தெரியும். அதைப்பற்றிக் கவலையில்லை. நான் நீதி வேண்டுகிறேன். குமுறிக்கொண்டிருந்த எரிமலை வெடித்துவிட்டது; விளக்கமான மறு விசாரணை நடப்பதாக!''

பத்திரிகைக் கூடம் பரபரப்புடன் வேலை செய்யத் தொடங்கியது. முதல் பிரதி — இரண்டு மூன்று — வேகமாக ஆயிரக்கணக்கில் பத்திரிகை குவிந்தது. ஜோலாவின் ''குற்றச்சாட்டு'' பாரிசைக் கவ்வியது. எதிர்பாராதது. ஒருவருக்கும் என்ன சொல்வதென்றே புரியவில்லை. யுத்த மந்திரிசபை கூடியது. ஏதாவது செய்தாக வேண்டும். என்ன செய்வது? படைக்குழுவினர் கூலியாட்களையமர்த்தி, 'ஜோலா வீழ்க?' எனக் கூவச் செய்தனர். வீதிகளில் மூர்க்கத்தனமான சம்பவங்கள் நடைபெறறன. ''அரோரி'' பத்திரிகைக் கூடம் தாக்கப்பட்டது. ''குற்றச்சாட்டு'' செய்தித்தாள்கள் கிழிக்கப்பட்டன. ஜோலாவின் கண் முன்னால் அவருடைய வைக்கோலுருவமும் டிரைபசின் வைக்கோலுருவமும் தீயிலிடப்பட்டன. ஜோலா துரத்தப் பட்டார். அவருடைய வண்டிக்குள் கற்கள் விழுந்தன. இரத்தக் காயத்துடன் ஜோலா வீட்டிற்குச் சென்றார். வீட்டில் தயாராகக் காத்துக் கொண்டிருந்த போலீஸ் ஜோலாவைக் கைதாக்கியது.

ஜோலாவின் வழக்கு ஆரம்பமாகியது. ஜோலாவிற்காகத் திறம்பட வாதித்தவர் லபோரி. வழக்கு ஆரம்பமாகும்பொழுது, அது தனிப்பட்ட வழக்கென்றும், டிரைபஸ் வழக்கிற்குச் சம்பந்தப்பட்டதல்லவென்றும் நீதிபதி கண்டிப்பாகக் கூறினார். அது ஒரு இராணுவத்தினரின்

நாடகம் போல முடிந்தது. கடைசியில் ஜோலா கூறியவை மறுக்க முடியாதன. "நான் எழுதுபவன், பேசுந்திறன் படைத்தவனல்ல. எனது வாழ்நாளில் பெரும்பகுதி உண்மையொளிகாணவே செலவழிக்கப்பட்டது. அதேவிருப்பத்தால்தான் இந்த வழக்கில் ஈடுபட்டேன். பலமான இராணுவத்தையும் அதிகாரமுள்ள அரசாங்கத்தையும் எதிர்க்க முடியுமா என என் நண்பர்கள் என்னைத் தடுத்தனர். தனி மனிதனின் சிதைவில் நீதி சிறக்குமாயின் அதனால் பலன் பெரிதே...வரலாற்றால் மறக்கமுடியாத பெரும் குற்றத்தை நீதிமன்றம் செய்துவிட்டது. நீதிக்கு வழிகாட்டிய எனது புகழ்மிக்க தாயகம் அநீதிக்கு எடுத்துக்காட்டாக ஆக்கப்படுவதை நான் ஒப்பவில்லை......

"பிரெஞ்சு நாட்டின் முன்னால், உலகின் முன்னால், அழுத்தமாகக் கூறுகிறேன்; டிரைபஸ் குற்றமற்றவன் என்னுடைய நாற்பதாண்டு உழைப்பின்மீது, நாட்டிலே பரவிய புதிய உண்மையுணர்வின்மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். டிரைபஸ் குற்றமற்றவன்! நான் அழிந்து போவேன்...என் புகழ் மங்கிப்போகலாம்...... எனினும் டிரைபஸ் குற்றமற்றவன்!"

ஜோலா போராடினார். விசாரிக்கு முன்பே முடிவு கட்டப்பட்ட வழக்கில் நீதிக்கு இடமெப்படி இருக்கமுடியும்? ஓராண்டு சிறைத் தண்டனையும், மூவாயிரம் பிராங்கு அபராதமும் ஜோலாவுக்கு விதிக்கப்பட்டது.

இராணுவத்தினர் குதூகலித்தனர். வெளியில் கூடியிருந்த கூட்டம் "இராணுவம் வாழ்க! வீழ்க ஜோலா" என முழங்கியது.

"என் புகழ் மங்கிப் போகலாம். ஆனால் டிரைபஸ் குற்றமற்றவன்!!" ஜோலாவின் முழக்கம் அது. புகழ் மங்கவில்லை. பெரியதோர் ஒளியைப் பரப்பிக்கொண்டு கிளம்பிற்று. பாரெங்கும். டிரைபசும் விடுதலைபெற்றான். அது பிறகு, ஆனால் முதலில் வெற்றி இராணுவத்தினருக்கு. "வீழ்க ஜோலா" முதலில். பிறகே "வாழ்க ஜோலா" ஜோலா பாரிஸ் பட்டணத்திலே நிலைத்திருக்கவே முடியாத நிலை இருந்தது.

ஜோலாவும் அவனுடைய நண்பன் பால் செஸானே என்பவனும் அந்த ஊருக்கு மிகுந்த நம்பிக்கையுடன்தான் வந்தார்கள். பொழுதுபோவதுகூடத் தெரியாமல் இருவரும் சிறிய வாடகை அறையில் உட்கார்ந்து திட்டமிடுவார்கள். செஸானே தன் ஓவியத் திறமையால் உலகையே ஆட்டமுடியும் என்பான்; ஜோலா தன் எழுத்தாண்மையால் வாழ்க்கையை வளம்பெறச் செய்யலாம் எனக் கனவு காண்பான். கையிலிருந்த காசு குறையக் குறைய, அவர்களுடைய உற்சாகமும் குன்றியது. மிகச் சுலபத்தில் கட்டப்பட்ட கற்பனைக் கோட்டைகள் வெகு விரைவில் தரைமட்டமாயின. மிகுந்தவை இருட்டறையில் உலாவுகிற செஸானேயும், வறுமைச் சகதியில் தத்தளித்துக்கொண்டிருந்த ஜோலாவும் தான்.

ஜோலாவுக்குப் பாரிஸ் நகரத்துப் பெயர்பெற்ற புஸ்தகக் கடையொன்றில் வேலை கிடைத்தது. புஸ்தகங்களை அடுக்கி மூட்டை கட்டும் வேலைதான் செய்தான். அதற்காகக் கிடைத்த சிறுவருவாய் அவர்களது 'எப்பொழுதும் வறுமை' என்ற நிலையை ஒழித்தது. ஜோலாவுக்கு இப்பொழுதுதான் தன்னைச் சுற்றிலும் பார்த்து

நுணுக்கங்களை உணர நேரம் கிடைத்தது. உள்ளே வறுமையாலும் துன்பத்தாலும் துடித்துக்கொண்டிருந்த உலகின் ஒவ்வொரு பகுதியையும் நன்கு ஆராய ஆரம்பித்தான். அவன் ஆராய விரும்பிய உண்மைகள் மேல் பூச்சின்றி, மறைக்கப்படாததால் சந்துபொந்துகளில் பொதிந்து கிடந்தன. ஒவ்வொரு உண்மையும் வைரத்தைப்போன்று அவனுக்குப் பிரகாசித்தது. சோர்வும் வெறுப்புங்கொள்ளாமல் ஜோலா தான் பார்த்தவைகளைக் குறிப்பெடுத்தான். பெரும் போருக்கு ஆட்கள் திரட்டுவதைப்போல ஜோலா சமூக அநீதிகளைத் திரட்டிக்கொண்டிருந்தான். இரவில் வெகு நேரம் வரை பாரிஸ் நகரத்துச் சேரிகளில் அவன் உலாவுவான். வீதியோரத்திலும், சாக்கடைப் பக்கங்களிலும், இடிந்த மனைகளிலும் ஆற்றுப் படிக்கட்டுகளிலும் பெருவாரியான மக்கள் குளிர் பொறுக்கமாட்டாது அடைந்து கிடப்பதைக் கண்ணுற்றான். இருட்டின் கரைகள், இருண்ட வாழ்வினர் தொங்கும் நரம்பின் குப்பைகள், சமூக பலி பீடத்தில் சாய்ந்த மாந்தர் அனைவரையும் கண்ணுற்றான்.

ஜோலா சிறு சிறு கட்டுரைகள் எழுதி, பத்திரிகைக்காரர்களிடமிருந்து உதவிபெறுவான். புத்தகக் கடைச் சொந்தக்காரருக்கு ஜோலாவின் போக்குப் பிடிக்கவில்லை. அவனுடைய "கீழ்த்தரமான" கட்டுரைகளால் கடையின் மதிப்புக் கெட்டுவிடுமென அவர் பயந்தார். அதற்கேற்றாற்போல் கலைச்சீமான்களையும், அரசியல் கனதனவான்களையும் கடுமையாகக் கண்டித்து ஜோலா எழுதிய புத்தகம் போலிசாரின் கவனத்துக்கு வந்தது. ஜோலாவும் வேலையை விட்டு நீக்கப்பட்டான்.

1882-ம் ஆண்டு முதல், அதாவது அவனுடைய 22-ம் வயதிலிருந்து ஜோலா தன்பேனவை நம்பியே வாழவேண்டி வந்தது. ஜோலா மனங்குலையவில்லை; உறுதியுடன் தன் போராட்டத்தைத் துவக்கினான். ஒவ்வொரு மணி நேரத்திற்கும் அட்டவணைபோட்டுக் கொண்டு சலியாது அவன் உழைத்தான். நூல்களைப் பதிப்பிக்க அவனுடைய நண்பரொருவர் முன்வந்தார். ஜோலாவின் கதைகள்,கட்டுரைகள் ஒவ்வொன்றாக வெளிவர ஆரம்பித்தன. அவைகள் சமூகத்தின் அநீதியையும் அரசியல் அக்ரமத்தையும் வன்மையாகக் கண்டித்தன. முதலில் அவனுடைய புத்தகங்கள் விலை போக வில்லை. ஏனெனில் தங்களைப்பற்றிய முழு உண்மையை உணர மக்கள் மனங்கூசினர். புத்தகக்கடைக்காரர்களுக்குப் பிடிக்கவில்லை.

சாதாரண ஜோலா இலக்கிய உலகில் புகுந்துவிட்டார். புத்தகங்கள் ஒன்றன்பின் ஒன்றாகக் கிளம்பின மலையுச்சியிலிருந்து விரைந்துவரும் பேராறுகளைப்போல கட்டுரைகள் ஜோலாவின் பேனா முனையிலிருந்து கிளம்பின. அவருடைய நாவல்களனைத்தும் அடிப்படையான கருத்துக்களின்மீது கட்டப்பட்டவை. கற்பனையில் கனிதருகிற கற்பகத் தருவைவிட, குப்பைமேட்டில் சேர்ந்திருக்கிற முட்செடி ஜோலாவுக்கு மேலானதாயிருந்தது. தான் கண்ட உண்மைகளை எழுச்சிதரும் வகையில் அவர் உலகுக்கு எடுத்துக் காட்டினார். சமூக அமைப்பில் கண்ட ஏற்றத்தாழ்வுகளைச் சுட்டிக்காட்டினார். கொடுங்கோலர்களை எதிர்த்தார்; குருமார்களைச் சாடினார். அவருடைய நாவல்களில் நிலையற்றோர், வஞ்சகர், அனாதைகள், ஆணவக்காரர், திருடர், சோம்பேரிகள், குடிகாரர், கனவு காண்போர், நலிந்த

உழைப்பாளர், கொடிய முதலாளிகள், பேராசைப் பாதிரிமார், முதுகெலும்பற்ற கலைவாணர், வெறிகொண்ட மதப்பித்தர், அனைவரும் சித்தரிக்கப்பட்டனர்.

சாதாரண குடும்பத்தினரின் வரலாற்றை விளக்கமாகத் தொடர்ந்து எழுதுவதென ஜோலா 1871-ல் தொடங்கிச் சுமார் 50 ஆண்டுகளில் 20 நாவல்கள் வெளியிட்டார். ஒவ்வொரு நாவலும் வாழ்க்கைப் பகுதியை தனித்தனியாக விளக்குவது. மார்க்கட்டைப் பற்றிய நாவலில் பணத்திற்காகச் செய்யப்படும் மோசடிகள் கூறப்பட்டுள்ளன. அடுத்த நாவலில் குடியைப் பற்றியது. அது 1877-ல் வெளிவந்தது. ஜோலா எழுதிய நாவலில் முதலில் மக்களை அவர் பக்கம் இழுத்தது அந்த நாவல்தான்.

1880-ல் "நானு" வெளிவந்தது. "லா பெட்டே ஹூமன்னே" என்பது புகைவண்டிகளைப் பற்றியது. "ஜெர்மினல்" சுரங்கங்களின் இருண்ட வாழ்வைப் படம் பிடிப்பது. பெரும் முதலாளிகளின் சுரண்டல் போக்கை வெட்ட வெளிச்சமாக்கியது. "வார்ஜெந்த்" உலக வரலாற்றில் எழுந்த முதல் தொழிலாளர் அரசாங்கம் உள்நாட்டு முதலாளிகளாலும் பிரஷிய பிரபுக்களாலும் நெரிக்கப்பட்டுத் தொழிலாளரின் இரத்தமும், ஏழையின் கண்ணீரும் சிந்தப்பட்ட 1870-ம் ஆண்டைப் பற்றிய "வீழ்ச்சி" ஜோலாவின் நாவல்களில் உயர்ந்த வகையில் ஒன்ருகும். "லூவார்ட்ஸ்" என்ற நாவலில் மதத்தின் மூடநம்பிக்கைகளைச் சிதறடித்தது.

போராடிப் பெற்ற நிலையை, ஒரு துர்ப்பாக்கியனுக்கு நீதி தேடித்தரத் துணிந்ததால் இழந்த ஜோலா சிறை புகவேண்டுமென்று "தீர்ப்பு" கிடைத்தது.

ஜோலாவின் இடையருத உழைப்பிற்கு அவரடைந்த பலன்!

நாட்டைவிட்டு ஓடிப்போகும்படி நண்பர்கள் கூறினர். அது "கோழைத்தனம்" என ஜோலா உதறித் தள்ளினுர். பக்கத்திலிருந்த நண்பர் அவரைத் தட்டி 'ஜோலா பாரிஸ் சிறையில் வாடுவதில் பலனில்லை. வெளிநாட்டுக்குச் செல். அங்கிருந்து டிரைபஸ் வழக்குப்பற்றி கட்டுரைகள் அனுபபு, ஓடிப்போவதால் நீ கோழையாக மாட்டாய்' தாய் நாட்டை விட்டு, மனைவி நண்பர்களைவிட்டு ஓடுகிருய். உன் கருத்தை —லட்சியத்தைப் புறக்கணித்தல்ல. "சில சமயங்களில் கோழைப்பட்டத்தை ஏற்றுக்கொள்ளப் பெரிய வீரம் வேண்டும்" என்ருர். ஜோலா அதை ஏற்றுக்கொண்டார். 1897-ம் ஆண்டு அவரது 57-ம் வயதில் ஜோலா இங்கிலாந்துக்கு ஓடினுர்.

ஜோலாவின் வெடிகுண்டு தூரத்திலிருந்து வீசப்பட்டன. "அரோரி" பத்திரிகை இடைவிடாது உழைத்தது உண்மை கிளம்பிவிட்டது. அதைத் தடுக்க எவராலும் முடியாது.

ஐரோப்பிய நாடு அரசியலிலே இரண்டாகப் பிரிந்தது. ஒரு பக்கத்தில் வெறிபிடித்த இராணுவம், பிரபு அரசவம்சம், மதத்திற்கும் கலைக்கும் பாதுகாப்பளிக்கிற குருமார் கூட்டம். மறுபக்கத்தில் மெதுவாகத் தலைதூக்குகிற புத்துணர்ச்சி.

பிரெஞ்சு மந்திரி சபை மாறியது. உண்மைத்துரோகி எஸ்டர் ஹேஸி கூண்டில் நிறுத்தப்பட்டான். அவனுக்கு

உதவியாக இருந்த ஹென்றி தற்கொலே செய்துகொண்டான். எஸ்டர் ஹேஸி நாட்டைவிட்டோடினுன். முன் வழக்கை ஜோடித்த வழக்கறிஞர் டார்ட் வேலேயிலிருந்து நீக்கப்பட்டான். டிரைபஸ் வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தது.

1869-ல் பிரான்சு நாட்டுக்கு ஜோலா, திரும்பினுன் மூன்ருண்டுகளுக்கப்புறம் துடிதுடிப்பான இருதயம் ஒய்ந்தது. 1902 செப்டம்பரில் ஜோலா இறந்தார். அவருடைய முயற்சிகள் வீண்போகவில்லே. நீண்டகால வழக்கின் பின் டிரைபஸ் 1906-ல் தூய்மையானவன் என முழு விடுதலேயளிக்கப்பட்டு உயர்ந்த இராணுவப் பதவிகள் கொடுக்கப்பட்டான்.

அவருடைய கல்லறைக்கருகில் அனேதேல் பிரான்சு உணர்ச்சி மிக்க சொற்பொழிவாற்றினுர். "நீதி உண்மை இவைகளேத்தவிர்த்து வேறெதுவும்அமைதியைவழங்காது. ஜோலா உலக உணர்வின் ஆரம்பத்தைக் குறிப்பவர்."

இலக்கியத்தில் ஜோலா அவருடைய ஏடுகளின் அளவினுல் மதிப்பெய்தவில்லே. எளிய நடையில் ஒளிவிட்ட கருத்துக்களுக்காக, ஏழை எளியோரைப்பற்றித் தீட்டிய எழுத்தோவியங்களுக்காக, மூடத்தனம், வெளிவேடம் அநீதி, சுரண்டல் முறை, போர் இவைகளே எதிர்த்து எழுதியதற்காக மட்டுமல்ல; சமயம் நேர்ந்தபொழுது தனது தள்ளாத வயதில் பலமிக்க இராணுவம், அதிகாரமுள்ள அரசாங்கம் அனேத்தையும் எதிர்த்துத் தனியாக நாட்டையும் வீட்டையும் விட்டோடிப் போராடிய திறத்திற்காக ஜோலா உலகவராற்றிலே இடம் பெற்றுவிட்டார்.

"பிரான்சு நாட்டிற்குப் பலவகைகளில் தன் உழைப்பைச் செலுத்தலாம் ஒருவன் வாளேந்தியோ, பேனாவைப் பிடித்தோ தன்கடமையை நிறைவேற்றலாம்; என் பங்கில் எமலி ஜோலா என்ற பெயரை வருங்காலத்திற்கு வழங்குகிறேன். அது இரண்டிலொன்றை ஆராய்ந்து அடைவதாக" என்று ஜோலா கூறினார். வருங்காலம் — பின் சந்ததி ஜோலாவைத் தேர்ந்தெடுத்துள்ளது.

ஜோலா ஓய்வேயறியாத உழைப்பாளி. அவருடைய வாழ்வு ஏமாற்றங்கள் நிறைந்ததாயிருந்தது. குறிப்பாக பிரெஞ்சு இலக்கிய மன்றம் அவரை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்க மறுத்தது. ஆனால் பிரெஞ்சு மொழி இலக்கிய ஆசிரியனாகவல்ல, உலக இலக்கியத்தில் உயர்ந்த இடத்தை ஜோலா அடைந்துவிட்டார்.

"எதை எழுதுவது?" என்றோர் நாள் நம் கவிஞருக்குச் சந்தேகம் பிறந்தது. தாமரை தன் அழகைக்காட்டி எழுதச் சொல்லிற்றும், காடும் கழனியும், கார்முகிலும், கலாப மயிலும், மருலனைய மாதரும், செவ்வானமும், அன்னமும், வீரமும், பிறவும், என்னைப்பற்றி எழுது! என் எழிலைப்பற்றித் தீட்டு என்று கூவின, கவிஞர் கூறுகிறார் கேளுங்கள். ஜோலாவின் உணர்ச்சி அதிலே உள்ளதைக் காணுங்கள்.

"அன்னலிலே, தமிழ் நாட்டினிலே யுள்ள
என் தமிழ் மக்கள் துயின்றிருந்தார்
அன்னதோர் காட்சி இரக்க முண்டாக்கியென்
ஆவியில் வந்து கலந்ததுவே!"

முற்றும்.

